
# தமிழரசு

16.5.1994 ரூ.3




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இதழ்தோறும் ஒரு இனிய குறள்!



**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (2)**

**• தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?**

# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2025

வைகாசித் திங்கள் - 2

மலர்:24 இதழ்:22

16-5-1994

விலை: ரூ.3


## இந்த இதழில்...


சென்னைப் பச்சையப்பன் கல்லூரி 150-வது ஆண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 2

மத்திய கூட்டுறவு வங்கியின் சாதனை! ... 8

டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை ... 9

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் ... 13

ஊரக விளையாட்டு மையங்கள் ... 17

செய்தி-விளம்பரத் துறை புதிய அறிவிப்புகள் ... 19

அழகிய நினைவுச் சின்னம் ... 21

பெண் சிசுவைக் காப்போம்! (கவிதை) ... 23

குறளின் குரல் ... 24

குடும்ப நலத் திட்டத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்கு ... 27


கால்நடைச் செல்வம் ... 30

ஆவணம் காப்போம்! அறிவை வளர்ப்போம்! ... 33

தமிழ்நாட்டில் பாசன மேலாண்மை ... 37

வள்ளல் பச்சையப்பர் ... 41

வீரமா முனிவர் ... 44



# பச்சையப்பன் பல்கலைக்கழகம் உருவாகத் தமிழ்நாடு அரசு உதவும்!

## சென்னை பச்சையப்பன் கல்லூரி 150வது ஆண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

உலகில் உள்ள செல்வங்கள் அனைத்திலும், மிக உயர்ந்த, தலையாய செல்வம், கல்விச் செல்வம் தான் என்பதை, உலகத்திற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்த்திய, மாபெரும் பாரம்பரியம் படைத்தவர்கள் நாம். அத்தகைய கல்விச் செல்வத்தை அனைவரும் பெற வேண்டும் பெற்று இன்புற வேண்டும் என்பதற்காகவும், தாம் வாழ்ந்த மண்ணில் வாழும் மக்கள் அனைவரும் கல்வி பயின்று முன்னேற வேண்டும் என்பதற்காகவும் தனது செல்வம் அனைத்தையும் கல்வி வளர்ச்சிக்காக ஈந்து சென்ற வள்ளல் பச்சையப்பர் அவர்களின் நினைவு, இன்று பூத்த நறுமலரின் மணம் போல், நம் நெஞ்சங்களில் எல்லாம் மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

1842ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தில், அவரது கொடையால் உருவாகிய, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்த பச்சையப்பன் கல்லூரி, 150 ஆண்டு காலக் கல்விப் பணியை, பார் போற்றிடும் வண்ணம் ஆற்றி பல்வேறு துறைகளிலும் சாதனையாளர் களையும், சிந்தனையாளர்களையும் உருவாக்கி தனது 1½ நூற்றாண்டுக் காலச் சாதனையை, மன நிறைவுடன், சிங்க நிகர்ப் பார்வையோடு, பார்த்துக் கொண்டிருக் கிறது என்றால், அது மிகையாகாது.

வாழையடி வாழையாகக் கல்விப் பணியாற்றி, கல்வி வரலாற்றிலே, ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் பெருமைக்குரிய பச்சையப்பன் கல்லூரிக்கு வருகை தந்து, பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவரையும் குறிப்பாக, எதிர்காலச் சிற்பிகளான, எனது அன்புக்குரிய, இளைய சகோதரர்களை எல்லாம் சந்திக்கும்போது, என் மனம் பூரிப்பு அடைகின்றது.

குன்றாத மகிழ்ச்சியோடும், வற்றாத புன்னகையோடும், காட்டாறு போலக் கடுகிச் செல்லும் திறனும், ஆற்றலும் படைத்த என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களைக் காணும்போது, எனது மனம், குதூகலம் அடைவதற்குக் காரணம், எனது பள்ளி நாட்கள், எனது நினைவில் நடை போடத் துவங்கி விட்டன, என்பதுதான். கோடானுகோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும், அப்பழுக்கற்ற மனதோடு, ஆனந்தமாய் வாழ்ந்த அந்த நாட்கள், மீண்டும்

கிடைக்குமா? என எண்ணிப் பார்க்கிறேன். என் எண்ணத்திலே மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் வரவழைத்த உங்கள் அத்துணைப் பேரையும் ஒருங்கே காண்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

“வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்” என்று பட்டுக்கோட்டையார் அன்று பாடி வைத்ததற்கு ஏற்ப 40 ஆண்டுக் காலமே இந்தப் பூவுலகில் வாழ்ந்து இருந்தாலும், இந்தச் சமுதாயத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், தாம் அற வழியில் ஈட்டிய, அனைத்துச் செல்வங்களையும் ஈந்து, ஒரு அறக் கட்டளையை உருவாக்கி, சாதனைச் சரித்திரம் படைத்த, ஒரு நல்லவர் விட்டுச் சென்ற, கல்லூரியின் 150வது ஆண்டு விழாவில் பங்கேற்பதை, நான் உண்மையிலேயே பெருமையாகக் கருதுகிறேன்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறிய பள்ளியாக, ஒரு சிலர் மட்டுமே பயிலுகின்ற கல்விக் கூடமாகத் தொடங்கப்பட்ட இந்தக் கல்வி வேள்வி இன்று பல கல்வி நிறுவனங்களாக வளர்ந்து, பல்வேறு துறைகளில் ஆயிரக்கணக்கானோர் பயில்கின்ற

# பச்சையப்பன் கல்லூரி 150-வது ஆண்டு விழா

முதல் அட்டை சொல்லும் செய்தி

சென்னை பச்சையப்பன் கல்லூரியின் 150-வது ஆண்டு விழா 6.5.'94 அன்று அக் கல்லூரி வளாகத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி வளாகத்தில் ஒரு மாநாட்டுப் பந்தலைப்போல பிரம்மாண்டமான பந்தலும் மேடையும் அமைக்கப்பட்டிருந்தன. கல்லூரி முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அன்று மாலை சரியாக 5.00 மணிக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழா மேடைக்கு வருகை புரிந்தார்கள்.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். பச்சையப்பன் அறக் கட்டளை தலைவர் திரு. வை. பழனிச்சாமி வரவேற்றுப் பேசினார். பச்சையப்பன் கல்லூரி முதல்வர் திரு. ஆ.பு. கமலாகரராவ் கல்லூரி அறிக்கையை வாசித்தார்.

பச்சையப்பன் கல்லூரியில் ரூ.1 கோடியே 71 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.1 கோடியே 23 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அவர் பேசும்போது, ''பச்சையப்பன் பல்கலைக் கழகத்தை'' உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், நாங்கள் அளிப்போம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். "Deemed University- ஆக அறிவிக்கும் அதிகாரம், மத்திய அரசிடம் உள்ளது. எனவே, இந்தக் கல்லூரியை, Deemed University ஆக அறிவிக்க மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்வோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான எல்லா உதவிகளையும் எங்கள் அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பச்சையப்பன் கல்லூரியின் 150-வது ஆண்டு நினைவு விழாக் கட்டடம் கட்ட நிதி உதவி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார்கள். நினைவு விழாக் கட்டடம் கட்ட தமிழக அரசின் சார்பில், 20 இலட்சம் ரூபாயும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 5 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்படும்'' எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக பச்சையப்பன் கல்லூரியின் 150 ஆம் ஆண்டு விழா மலரை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

''வள்ளல் பச்சையப்பன் ஒலிப்பேழையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கவிஞர் தங்க. பழனிவேல் எழுதிய ''பார் புகழும் பச்சையப்பர்'' என்ற புத்தகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளியிட, அதை கல்லூரி முதல்வர் திரு. கமலாகரராவ் பெற்றுக் கொண்டார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கல்லூரி சார்பிலும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பிலும், பொன்னாடைகள் அளிக்கப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பச்சையப்பன் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தப் பட்டுள்ளது. அறக்கட்டளை நிதி ஏழை மாணவர்கள் படிப்புச் செலவுக்குப் பயன்படுத்தப்படும்.

விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க.பொன்னுசாமி அவர்களும், மாநில உயர் கல்விக்குழு துணைத் தலைவர் சை.வே. சிட்டிபாபு ஆகியோரும் வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழா முடிவில் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் சி. பழனிவேலு நன்றி நவின்றார்.

என். இளங்கோ




அளவிற்கு, தமிழ்நாட்டில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தேடிக் கொண்ட கல்வி நிலையமாக, இன்றும் விளங்கி வருவது, தமிழ்கூறும் நல்லுலகமே மகிழ்ச்சி அடைகின்ற, மகத்தான ஒரு சாதனை ஆகும்.

"சுட்டாலும் சங்கு வெண்மை தரும்" என்பது போல, தன் வாழ்நாளில், தான் முழுமையாகப் பெற முடியாத கல்விச் செல்வத்தை, தான் வாழ்ந்த காலத்திலேயே, மக்கள் அனைவரும் அடைய வேண்டும், என்கின்ற ஒரு உன்னதமான எண்ணம், 40 வயதேயான, வள்ளல் பச்சையப்பன் மனதிலே, எப்படி உதித்தது என்று எண்ணிப் பார்த்தால், இன்றும் வியப்பாக இருக்கிறது மலைப்பாக இருக்கிறது; பணம் இருந்தால் மனம் இருக்காது மனம் இருந்தால் பணம் இருக்காது என்று எல்லாம், வெற்று வேதாந்தம் பேசுகின்ற இந்த உலகத்திலே அவர் அறவழியில் ஈட்டிய, அனைத்து செல்வத்தையும் ஒன்று திரட்டி, உருவாக்கி விட்டுச் சென்ற அறக்கட்டளை, கல்வியைப் பெற்று, அறிவுக் கண்களைத் திறந்து கொள்ளத் துடிக்கும், மானிட இனத்திற்கே, ஒரு அறிவுச் சரணாலயம் என்றால், அது மிகையாகாது.

வள்ளல் பச்சையப்பர் அவர்கள், சிறு வயது முதலே, மேலை நாடுகளில், சமூக, பொருளாதார வளர்ச்சி முறைகளை, அவர் வாழ்ந்த காலத்தில், இந்தியாவில் வாழ்ந்து வந்த ஆங்கிலேயர்கள் மூலமாகக் கூர்ந்து கவனித்து இருக்கிறார்.

தான் வாழ்ந்த தமிழ்நாடும், மேலை நாடுகளைப் போல், கல்வியிலும், பொருளாதாரத்திலும், ஓங்கி உயர வேண்டும் என்ற குறிக்கோளை, சின்ன வயதிலேயே, தனது பிஞ்சு மனதில், பதிய வைத்துக் கொண்டார். அந்த உயர்ந்த எண்ணத்திற்கு ஏற்ப, அவர் வாழ்க்கையும் உன்னதமாக அமைந்து இருந்தது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், வள்ளல் பச்சையப்பர் அவர்களைப் போல், கல்வியை வளர்ப்பதற்கு என்றே, ஒரு சிலர் தோன்றியதால் தான், தமிழ்நாடு இன்று கல்வியிலே, உயர்ந்து நிற்கின்றது என்றால், அது உண்மையன்றி வேறில்லை.

தமிழ்நாட்டில் கலைகளும், தொழில் கல்வியும், பெருகி உள்ளன. ஆண்களும், பெண்களுமாக, ஆயிரக்கணக்கானோர், அனுதினமும் கல்வி கற்று, வாழ்வில் மேன்மை அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

பச்சையப்பன் அறக்கட்டளையின்கீழ் இயங்குகின்ற, கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள், இன்று பல துறைகளிலே, தங்களது தனி முத்திரையைப் பதித்து சீரோடும் சிறப்போடும், நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், பாடுபட்டு வருகிறார்கள் என்பதை அறியும்போது, என் மனம் ஆனந்தம் அடைகிறது.

அந்தப் புகழ் மிக்க பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்களாகிய, என் அன்பிற்குரிய தம்பிகளாகிய நீங்கள், எதிர்காலத்தில், இந்தியாவிலேயே, தமிழ்நாடுதான் எல்லாத் துறைகளிலும், அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டி, என்கின்ற ஒரு உன்னதமான நிலையை, உருவாக்குவீர்கள் என்பதில், எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. ஏனென்றால், இந்தப் பச்சையப்பன் கல்லூரி, ஏதோ ஏட்டுக் கல்வி கற்பிக்கப்படுகின்ற, ஒரு கல்விச் சாலை மட்டுமல்ல. அனுபவப் பாடத்தை, அனுதினமும் மாணவர்களுக்கு ஊட்டி வருகின்ற, ஒரு வாழ்க்கைக் கல்விச் சாலை.

பொது வாழ்க்கையில், புனிதமான எண்ணங்களுடன் ஈடுபடத் தூண்டும், ஒரு அரசியல் போதி மரம் சிந்தனைச் சிற்பிகளை உருவாக்குகின்ற, ஒரு கருத்து உலைக் கூடம் பழமைகளைத் தூக்கி எறிந்து,

புதுமைகளுக்கு வழி விடுவோரின், புனிதப் பயணத்தின் ஆரம்பம் இது. இங்கே ஏட்டுச் சுரைக்காய்க்கு மதிப்பு இல்லை. வாழ்க்கைப் பாடத்திற்குத் தான் மதிப்பு அதிகம் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஒரு சிறப்பின் காரணமாகத்தான், இந்தக் கல்விச் சாலைகளில் பயின்றவர்கள், சட்டத் துறையிலும், அரசியல் துறையிலும், கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் கூர்ந்த மதியோடும், வினை நுட்பத்தோடும், செறிவார்ந்த சிந்தனையோடும், மற்றவர் வியக்கும் ஆற்றலோடும், செவ்வனே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தனது சொல் ஆற்றலாலும், செயலாற்றலாலும், புரட்சிகரமான சிந்தனையாலும், தமிழகத்தைத் தட்டி எழுப்பிய சிந்தனைச் சிற்பி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்த பச்சையப்பன் கல்லூரி, தமிழகத்திற்குத் தந்த மாபெரும் பரிசு. அவர் வகுத்து சென்ற நெறி முறைகளைக் கடைப்பிடித்து அவரது முற்போக்குச் சிந்தனைகளைச் செயலாக்கிய, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், விட்டுச் சென்ற பாதையில் வெற்றி நடை போட்டு வரும் எங்களுக்கு, திராவிட இயக்கத்தின் வழித் தோன்றல் படித்த ஒரு கல்விச்சாலையில், நின்று கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணும்போதே, மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கல்வி என்பது, வெறும் பட்டங்களைப் பெறுவதற்கும், வேலை வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொள்வதற்கு மட்டுமே, பயன்படுகின்ற பயிற்சி அல்ல. தனி மனிதரின் அறியாமையை அகற்றி, அவனது அறிவாற்றலை வளர்ப்பதும் விரும்பத் தக்க சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தவும், பயன்படுகின்ற ஓர் அரிய சாதனமே, கல்வி ஆகும். ஏட்டுக் கல்வி கற்றோரின், எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு, முன்னேற்றத்தை அடைந்து விட்டோம் என்று, முடிவு கட்டுபவர்கள் அல்ல நாங்கள். கற்ற கல்வியைப் பயனுடையதாக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும், நன்மைகளைத் தேடித் தருகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை அடைவது தான், எங்கள் குறிக்கோள்.



உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, கல்வியின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, உயர் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, Tamil Nadu Council for Higher Education, என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வி வளர்ச்சிக்கு, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நாங்கள் செயல்படுத்தி வருவதால்தான், 1991-92ஆம் ஆண்டில், 1,299 கோடி ரூபாய், என்று இருந்த நிதி ஒதுக்கீடு மூன்று ஆண்டுகளில், அதாவது 1994-95ஆம் ஆண்டில், 2,002 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், கல்வித் துறையின் நிதி ஒதுக்கீடு, 50 சதவீதத்திற்கு மேல், அதாவது 700 கோடி ரூபாய் அளவிற்கு, அதிகரித்துள்ளது என்பதிலிருந்து நாங்கள் கல்வியின் வளர்ச்சியிலும், மக்களின் அறிவு முன்னேற்றத்திலும், கொண்டுள்ள அக்கறை புலனாகும் என்று நம்புகிறேன்.

பெருமைமிக்க கல்வி நிறுவனங்களில், பயிலுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ள, என் அன்புக்குரிய மாணவச் செல்வங்கள் அனைவரையும், நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் நீங்கள் கற்ற கல்வி, உங்களுக்கு மட்டுமின்றி, நீங்கள் வாழும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும், பயன் தரும் வண்ணம், நீங்கள் செயலாற்ற வேண்டும் என்பதே ஆகும். இதுவே எனது அன்பு வேண்டுகோள்.

ஓங்கி உயர்ந்தோர் நாகரிகத்திற்கும், கலாச் சாரத்திற்கும், சொந்தக்காரர்களாகிய நாம் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும், இளைத்தவர்கள் அல்ல, சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டிய, ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

எந்த ஒரு நாட்டின் குடிமக்கள், தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில், இன்பம் காண்கிறார்களோ அந்த நாடு, வளப்பமுடையதாகவும், எவராலும் வெல்ல முடியாத, மாட்சிமை கொண்டதாகவும் விளங்கும் என்பது, சரித்திரம் காட்டும் உண்மையாகும். இன்றைய இளைய சமுதாயத்தினர், புதிய சமுதாய சிந்தனைகளை முன் நிறுத்தி புதியதோர் உலகம் படைக்க தங்களது பங்கை, சீரிய முறையில் ஆற்ற வேண்டிய ஒரு கடமை, என்றென்றும் உண்டு என்பதை, இந்த நேரத்தில் எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.



# மலை ஏறும் மகளிர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் மகளிர் கல்லூரியில் பட்ட வகுப்பு படிக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 மாணவிகள் முதன் முறையாக அனைத்து மகளிர் மலை ஏறும் பயிற்சிக்குச் செல்லுவதால், அதற்கு முன்பு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார்கள்.

தங்களது பயணத்தைப் பற்றி அறிந்தவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளுக்கு 15,000 ரூபாய் வீதம் 5 பேருக்கும் சேர்த்து 75,000 ரூபாயை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக வழங்கியதற்குத் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அவர்களின் பயண விவரத்தையும், எவ்வாறு மலை ஏறும் பணியில் ஈடுபடுவார்கள் என்பது குறித்தும் கேட்டறிந்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாணவிகளின் துணிவையும் ஆர்வத்தையும் பாராட்டி, அவர்கள் மேற்கொண்ட பணி சிறப்பாக முடியவேண்டும் என, தனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

அவர்கள் மேற்கொள்ள வேண்டிய இந்தப் பணியில் மேலும் நிதி உதவியோ அல்லது வேறு எவ்விதமான உதவியோ தேவைப்பட்டால் அதையும் ஏற்பாடு செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தபோது, மாணவிகள் 5 பேரும் தங்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை போதுமானதாக உள்ளது என்று தெரிவித்தார்கள்.

---

தமிழ் மக்களின் கலாச்சாரத்தோடு இணைந்து, தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறி, உயர் கல்வி புகட்டும், உன்னதப் பணியில் ஈடுபட்டுள்ள, பச்சையப்பன் கல்லூரி மென்மேலும் வளர்ச்சி அடைந்து, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களில், ஒன்றாகத் திகழ்ந்து அதன் புகழும், பெருமையும் பாரெங்கும் பரவ வேண்டும் என்ற எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களின் எதிர்காலம், ஒளிமயமானதோர் எதிர்காலமாக அமைய வேண்டும், என்ற எனது பெரு விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது வரவேற்பு உரையில், பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவர், திரு. பழனிச்சாமி அவர்கள், இந்த அறக்கட்டளையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களை இணைத்து, "பச்சையப்பன் பல்கலைக் கழகமாக" அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

''பச்சையப்பன் பல்கலைக் கழகத்தை'' உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், நாங்கள் அளிப்போம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

Deemed University ஆக அறிவிக்கும் அதிகாரம், மத்திய அரசிடம் உள்ளது. எனவே, இந்தக் கல்லூரியை, Deemed University ஆக அறிவிக்க மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்வோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான எல்லா உதவிகளையும் எங்கள் அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையப்பன் கல்லூரியின் 150வது ஆண்டு நினைவு விழா கட்டடம் கட்ட நிதியுதவி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார்கள். நினைவு விழாக் கட்டடம் கட்டத் தமிழக அரசின் சார்பில், 20 இலட்சம் ரூபாயும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 5 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்படும்" என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# தர்மபுரி மாவட்டத்தில் புதிய போச்சம்பள்ளி வட்டம் உதயம்

தாலுக்கா நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த, தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்டங்களை மாற்றியமைக்கவும், புதியதொரு வட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

அதன்படி, தற்போது கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி, பாரூர், நாகரசம்பட்டி ஆகிய ஃபிர்காக்களையும், ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள மத்தூர் பிர்காவையும் சேர்த்து போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதோர் வட்டம் உதயமாகிறது.

மேற்கண்டவாறு வட்டங்களை மாற்றியமைத்த பின், வட்டங்களில் அடங்கும் ஃபிர்க் காக்கள் பின்வருமாறு:

**1. போச்சம்பள்ளி வட்டம்**

தலைமையிடம்: போச்சம்பள்ளி

1. போச்சம்பள்ளி
2. பாரூர்
3. நாகரசம்பட்டி
4. மத்தூர்

**2. கிருஷ்ணகிரி வட்டம்**

தலைமையிடம்: கிருஷ்ணகிரி

1. கிருஷ்ணகிரி
2. ஆலப்பட்டி
3. குருபரப்பள்ளி
4. வேப்பனப்பள்ளி
5. பாலபள்ளி
6. பர்கூர்
7. காவேரிப்பட்டினம்

**3. ஊத்தங்கரை வட்டம்**

தலைமையிடம்: ஊத்தங்கரை

1. சாமல்பட்டி
2. கல்லாவி
3. ஊத்தங்கரை
4. சிங்காரப்பேட்டை

புதிய வட்டங்கள் பணி தொடங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## முதல்வரின் முத்துக்கள்



இந்தத் தொழில்நுட்ப நாகரிக உலகில் சிறப்பான அளவிற்கும் திறமைக்கும் வழக்கமான கல்வியோடு, தொழிற்பயிற்சியும் சேர்ந்து தரப்பட வேண்டும். நமது சக்தியின் வளர்ச்சிக்கும், தனிநபரின் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் பள்ளிப்படிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. ஒவ்வொருவருக்கும் தகுதிகளும் குணங்களும் உள்ளன. அவைகளை அர்த்தமுள்ளதாக உபயோகிக்கத் தேவையானது திறமைகளைக் கண்டுபிடித்து, அவைகளுக்கு உயிரூட்டி, அன்றாட வாழ்க்கையிலும், நடைமுறைகளிலும் பயன்படுத்துவதேயாகும்.



பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் :

# மத்திய கூட்டுறவு வங்கியின் சாதனை!

இங்குதான் கூட்டுறவுக்கு உயிர் கொடுத்த, இந்தியாவிற்கே வழி காட்டும் மாதிரி கிராமம் குன்றக்குடி உள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் மேலான வழிகாட்டு தலின் பல்வேறு வகைகளில் கூட்டுறவு இங்கே செழித்தோங்கி வளர்கிறது!

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிந்ததற்குப் பிறகு அரசின் திட்டங்களாலும், அதிகாரிகளின் அரசுப் பணி யாலும்; புதிய இம்மாவட்டத்தில் அசுரவளர்ச்சி வரலாற்றாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அந்தச் சாதனைகளின் வரிசையில் மத்தியக் கூட்டுறவு வங்கி முன்னணியில் நிற்கிறது! புரட்சித்தலைவியின் ஆட்சியில் ஒரே ஆண்டில் *11* புதிய வங்கிக்கிளைகளை இந்தச் சிறிய மாவட்டத்தில் துவக்கித் தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது.

பசும்பொன் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் *295* கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி *123*, அலுவலர் கூட்டுறவுச் சங்கங்கள் *57*, நெச வாளர் சங்கங்கள் *11*, நகர வங்கிகள் *3*, பிரதம கூட்டுறவுப் பண்டக சாலைகள் *43*, விற்பனைச் சங்கம் *2*, நிலவள வங்கிகள் *7*, ஆடு வளர்ப்புச் சங்கம் *1*, பால்வழங்கும் சங்கங்கள் *30*, இதர சங்கங்கள் *18* என்று உள்ளன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 1993-94-ஆம் நிதியாண்டில் விவ சாயிகளுக்குக் குறுகிய காலக் கட னாக வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டுத் தொகையான ரூ.*590* இலட்சத்திற்கும் மேலான ரூ.*728.90* இலட்சம் வழங்கியுள்ளது. மத்தியக் காலக் கடனாக ரூ.*158* இலட்சம் வழங்கியுள்ளது. நகைக்கடன் ரூ.*1907* இலட்சம் வழங்கியுள்ளது. நலிவுற்ற பிரிவினர்களுக்குக் கடன் வழங்க *722.10* இலட்சம் தந்துள்ளது.

*31.3.94* வரை இந்த வங்கி களின் இட்டு வைப்புத்தொகை ரூ.*2799.63* இலட்சமாக உயர்ந்து உள்ளது.

மாநில அரசு நபார்டு மூலமாகப் பங்கு மூலதனமாக ரூ.*120* இலட்சம் வழங்கியுள்ளது.

**புதிய திட்டம்**


**1. சக்தி சர்க்கரை ஆலையுடன் கூடிய இணைக்கமுறையின் கீழ், சிறிய பாசனங்களுக்கு மத்தியக் காலக் கடன் வழங்க ரூ.83.48 இலட்சங் களுக்கு மறுநிதி வழங்க நபார்டு வங்கிக்கு மத்திய வங்கி விண்ணப் பிக்கப்பட்டுள்ளது.**

**2. சிறிய பால்பண்ணைகள் நிறுவும் திட்டத்திற்காக 250 யூனிட்டுகளுக்கு ரூ.68.60 இலட்சம் நிதி உதவி கோரி நபார்டு வங்கிக்குத் திட்ட மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்ட பால் வழங்கும் ஒன்றியத்துடன் இணைக்க முறை யுடன் செயல்படுத்தப்படவுள்ளது.**

**3. நகைக் கடன் வழங்கும் தொடக் கக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக் கையை 70 லிருந்து 100 ஆக உயர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.**

**4. கரும்புப் பயிருக்கு 1993-94-ஆம் ஆண்டில் ரூ.217.59 இலட்சம்** கடனாக வழங்கப்பட்டுள்ளது. இனி வரும் காலத்தில் இத்தொகையை ரூ.*400* இலட்சமாக உயர்த்திக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த ஒரே ஆண்டில் தொடங் கப்பட்ட புதிய கிளைகள் போக, புரட்சித்தலைவி ஆட்சியில் மேலும் புதூர், தெ.புதுக்கோட்டை, புலி



யூர், ராம்நகர் ஆகிய இடங்களில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஒரே ஆண்டில் இத்தகைய சாதனைகளைச் செய்து உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி இதுதான்! இந்த வெற்றிச் சாதனை களுக்குப் பின்னால் புரட்சித்தலைவி யின் செயல்வீரர்கள் இம்மாவட் டத்து மண்ணின் மைந்தர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன் அவர்களும் விளங்குகிறார்கள் என் றால் அது மிகையல்ல...

**ரெ. இராவணன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்**

# தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குச் சமநீதி சமூகநீதி பெற்றுத் தந்தவர் டாக்டர் அம்பேத்கர்

**டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில்**

## *மாண்புமிகு முதல்வர் உரை*

இந்த இனிய விழாவில் பங்கேற்று, 'அறிவுலக மேதை'யாம், 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை', என்று அனைவராலும் போற்றப்படும், தாழ்த்தப்பட்ட இன மக்களின், பாதுகாவலராகத் திகழ்ந்த, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின், திருவுருவ வெண்கலச் சிலையை, சென்னை மாநகரின், ஒரு முக்கியமான சாலைச் சந்திப்பில், இன்று திறந்து வைத்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

'அண்ணல்' அம்பேத்கர் அவர்கள், 20ஆம் நூற்றாண்டின், இந்திய வரலாற்றைப் பொறுத்த வரையில், சட்டத் துறையில், ஒரு சகாப்தம், அரசியல் அரங்கில், ஒரு புரட்சி அத்தியாயம், சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையில், ஒரு திருப்புமுனை. அவர் நவீன இந்தியாவை உருவாக்கிய, வரலாற்று நாயகர்களின் வரிசையில், முதலிடத்தைப் பெற்றவர். அழியாப் புகழ் பெற்று, நமது நெஞ்சங்களில் எல்லாம், நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டவர், மாமனிதர் டாக்டர் அம்பேத்கர்!

எப்படி, தமிழ்நாட்டில், தந்தை பெரியார் அவர்களின் வடிவில் தோன்றிய, 'பகுத்தறிவுப் பேரொளி, தூங்கிக் கிடந்த முற்போக்குச் சிந்தனைகளைத் தட்டி எழுப்பி, சிந்தனைத் தடத்தை முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட்டதோ அதைப் போலவே, அண்ணல் அம்பேத்கர் என்ற உத்தமரின் வடிவில் தோன்றிய, 'அறிவுச் சுடரொளி',' நமது இந்தியத் திருநாட்டையே எழுச்சி கொள்ளச் செய்தது.

'பகுத்தறிவுப் பகலவன்' என்று, பாரெங்கும் போற்றப்பட்ட தந்தை பெரியார், தென்புலத்தில் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளுக்கு, ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த, அதே கால கட்டத்தில்தான், வடபுலத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், தாழ்த்தப்பட்ட இன மக்களின் உயர்வுக்காகவும், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், இந்திய

அரசியல் ஏட்டில், ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருந்தார்.

எவ்வாறு ஒரு தனி மனிதர், தன்னுடைய அறிவின் ஆற்றலாலும், பண்பின் தகைமையாலும், சமுதாய இடர்ப்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, தான் மேற்கொண்ட துறையில், சாதனை படைத்து, வரலாற்று நாயகராக, உயர முடியும் என்பதற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 'வாழ்க்கை வரலாறு', ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றால், அது மிகையாகாது.

சாதிக் கொடுமையின் வேதனையை, தாமே தமது இளம் பிராயத்தில் அனுபவித்து, அது பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தும், கொடிய பாதிப்புகளை, முற்றிலுமாக உணர்ந்தவர் தான், டாக்டர் அம்பேத்கர். எந்த

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:







இனமானது, 'கீழ்ச்சாதி' என்றும், தீண்டத் தகாதது என்றும், கொடுமைப் படுத்தப்பட்டதோ அந்த இனத்தவரை மேம்பாடு அடையச் செய்வதே, தமது வாழ் நாள் இலட்சியம், என்ற சூளுரையை, டாக்டர் அம்பேத்கர், தமது சிறு வயதிலேயே மேற்கொண்டதை, இன்றைய இளைய தலைமுறையினர், எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்துவிடக் கூடாது.

தாழ்த்தப்பட்ட இன மக்களின் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கு, 'இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், நடைமுறை ரீதியாக, அடிகோலிய டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட இன மக்கள், தங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை வைத்துக் கொண்டு, தாமும் இந்தச் சமுதாயத்தில், ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும், என்ற வேட்கையோடு சமூக இடர்ப்பாடுகளை எதிர்த்துப் போராடி, வெற்றி பெற வேண்டும் என்று, பெரிதும் விரும்பினார்கள். வாய்ப்புகளும், வசதிகளும் இன்றி, வறுமையில் வாடும், தாழ்த்தப்பட்ட இன மக்களை, அறியாமை என்ற இருளில் இருந்து மீட்பதற்காக, வாராது வந்த மாமணி போல, தோன்றிய உத்தமர் தான், டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், டாக்டர் அம்பேத்கருடைய முன்னேற்றக் கொள்கைகள், தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய முற்போக்குச் சிந்தனைகள், செயல்பாடுகள் காரணமாக, மேலும் வலிமை பெற்றுள்ளன என்பதை, கண்கூடாகக் காண முடிகின்றது. அந்த உத்தமத் தலைவர்களின், புனிதப் பாதையில் நடந்து வரும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதலாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைக் காப்பதற்காக, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நாள்தோறும் செயல்படுத்தி வருவதையே, என்னுடைய தலையாய கடமையாகக் கொண்டு, இயங்கி வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் தேர்தல் அறிக்கையில், தாழ்த்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றத்திற்காக, என்னென்ன செய்ய இருக்கின்றோம், என்பதைக் குறிப்பிட்டு இருந்தோமோ அவற்றை இந்த அரசின், 10 அம்சத் திட்டத்தின் மூலம், நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். தாழ்த்தப்பட்ட இன மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டு, பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய, வழிவகை செய்வதோடு, அவர்களுடைய சமூக உரிமைகளும், நலன்களும், என்றென்றும் பாதுகாக்கப்படும் வண்ணம், எங்களது அரசு செயல்பட்டு வருகின்றது.

குறிப்பாக, ஆதிதிராவிடர்களுக்கு என்றே, தனியாகத் தொழிற்பேட்டைகள், இறால் வளர்ப்புப் பண்ணைகள் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணைகள், ஆகியவற்றை ஏற்படுத்தி இதற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், யாரும் செய்யாத சாதனைகளை, உங்கள் சகோதரியின் தலைமையிலமைந்த இந்த அரசு, செய்து வருகின்றது.

இவை மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட இனத்தவரின், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, இலவச வீட்டு மனைகள், வீட்டு வசதி, குடிநீர் வசதி போன்றவற்றை, போர்க் கால அடிப்படையில், எங்களது அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. குறைந்தபட்சம், 'ஒரு நீராதாரமாவது இல்லாத



கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

குக்கிராமமோ, ஆதிதிராவிடர் குடியிருப்போ, இருக்கக் கூடாது', என்ற எண்ணத்தின் அடிப்படையில், தற்போது தமிழகம் முழுவதும் உள்ள, ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும், குடிநீர் வசதி, முழுமையாக உருவாக்கித் தரப் பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் முன்னேற்றத்திற்காக, எங்கள் அரசு ஒவ்வொரு ஆண்டும், கூடுதலாக நிதியை ஒதுக்கி வருகின்றது.

1991.92 ஆம் ஆண்டு, 103 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 1992.93 ஆம் ஆண்டு, 114 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதேபோன்று, 1993.94 ஆம் ஆண்டு, 135 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 1994.95 ஆம் ஆண்டு, எப்போதும் இல்லாத அளவுக்கு, 151 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலனில், எங்களது அரசு, எத்தகைய ஆத்மார்ந்த அக்கறைக் கொண்டு உள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறும் வகையில், இந்த நிதி ஒதுக்கீடு அமைந்துள்ளது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில், பெருமிதம் அடைகிறேன்.

அன்றாடம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின், பாதுகாவலராக விளங்கி சம நீதி, சம உரிமை, சமூக நீதி ஆகியவற்றை, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்காகப் போராடிப் பெற்றுத் தந்த, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையை, இன்று இங்கே திறந்து வைத்ததில், நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாநிலம் போற்றும் மாமனிதராம், டாக்டர் அம்பேத்கரின் புகழுக்கும், பெருமைக்கும், மென்மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், எங்களது அரசு, மக்கள் அரசு, உங்கள் அரசு, தொண்டு மனப்பான்மையுடன் செயல்படும், என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு, விடைபெறுகின்றேன்.

# டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலை திறப்பு விழா

**டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலை திறப்பு விழா, 30.4.'94 அன்று காலை சென்னை. கோயம்பேடு 100 அடி சாலை சந்திப்பில் நடை பெற்றது.**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் கலந்துகொண்டு, டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து, விழாப் பேருரையாற்றினார்.**

**இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை டாக்டர் அம்பேத்கருக்குத் தமிழக அரசின் சார்பில் சென்னைக் கோயம்பேடு 100 அடிச் சாலைச் சந்திப்பில் 9 அடி உயர வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடந்தது.**

**விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகையில், "மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் சென்று மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மக்களின் கஷ்டங்களை நீக்கி வைப்பதோடு, அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கும் அதிகமாகப் பாதுகாப்பு அளித்து வருகிறார்" என்று கூறினார்.**

**பின்னர், மாண்புமிகு முதல்வர் சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் ஆகியோருக்கு, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.**

**இந்தியக் குடியரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் தமது சிறப்புரையில், டாக்டர் அம்பேத்கருக்கு அரசுச் சார்பில் சிலை அமைத்ததற்காகத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.**

**மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு. இரா. முத்தையா அவர்கள் தமது தலைமையுரையில், சமூக நீதி காப்பதில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னணியில் இருப்பவர் நமது முதல்வர் என்று கூறினார்.**

**பின்னர் மேடையில் இருந்தவாறே மாண்புமிகு முதல்வர் அவர்கள், பட்டனை அழுத்தி, டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்.**

**பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இரா. சம்பத் இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.**

**விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத் தலைவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.**

**—ஜெ. சந்திரன்**

# நூல் நயம்

### சுவாமி ஐயப்பன் வரலாறு

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**

மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:80 விலை:ரூ.12/-

சபரிமலை ஐயப்பனின் சரிதமும், விரத முறைகளும், வழிபாட்டுப் பாடல் களும் கொண்டது. ஐயப்பப் பக்தர் களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

—மறைமலை

### தேசிய உணர்வை ஊட்டிய பாரதியார்

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**

மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

மகாகவி பாரதியின் மகிமை இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றது. அவரது வாழ்க்கைக் குறிப்போடு, அவரது எண் ணங்கள்- செயல்கள் எல்லாம் எழுத்து வடிவமாக்கப்பட்டுள்ளன. பாரதியின் இறையுணர்வு, சுதந்திர வேட்கை, பெண்மையைப் போற்றியது முதலான கருத்துக்கள், அவரது கவிதை வரி களோடு காட்டப்பட்டுள்ளன. எளிய நடை. எல்லோரும் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி.ஜி.

### வீட்டிற்கேற்ற லாபம் தரும் கைத்தொழில்கள்

**ஆசிரியர்: சூரியநாத்**

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.16/-

'செய்யும் தொழிலே தெய்வம்', அதுவும் குடும்பப் பெண்களுக்கு வீட்டு வேலைகள் போக மீதி நேரத்தில், பல தொழில்களில் ஈடுபட்டு ஓய்வு நேரத் திலும் பொழுதுபோக்காக சம்பாதிக்கத் தான் எத்தனை தொழில்கள்: 61 தொழில் களை சுலபமாகச் செய்து சம்பாதிக்க வழி சொல்கிறது இந்நூல், யார் எந்தச் சிறு தொழில் செய்வது? கடனுதவி போன்ற செய்திகளும் உதவியாக உண்டு.

### நல்லவர்கள் கெடுவதில்லை

**ஆசிரியர்: அரசு மணிமேகலை**

**வெளியீடு:**

சூடாமணி பிரசுரம்,
5, நீலகண்டன் தெரு,
சூளைமேடு, நுங்கம்பாக்கம்,
சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.10/-

குழந்தைகள் எந்தச் சூழ்நிலையிலும் கலங்கிவிடாது, விவேகமுடனும், துணிச் சலுடனும் செயலாற்ற வேண்டும். தேச நன்மைக்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும், குழந்தைகள் படிக்கும் நூல்கள் ஒரு மணி நேரம் மட்டும் உதவக் கூடாது, என்றும் எப்போதும் பயன்பட வேண்டும், அத்தகைய நூல்களையே குழந்தைகள் படிக்க வேண்டும், பிறரிடம் மரியாதையோடும் அன்போடும் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரை களை குழந்தைகளுக்கு நல்ல கதைகள் வாயிலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

### வாரிசு

**ஆசிரியர்: செ. ஞானன்**

**வெளியீடு:**


பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:131 விலை:ரூ.18/-

மனிதர்களின் மறு பக்கங்களைச் சொல்லும் சிறுகதைகள். நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, கட்டுப்பாடற்ற, சௌகரிய வாழ்க்கை வாழுபவர்களின் இயல்புகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

இந்த அவலங்களை அம்பலப்படுத்தும் முறை மிக நாகரிகமாக இருப்பதற்கு நம் பாராட்டுகள்.

—குமார்



### அருவிக் கரையினிலே...

**ஆசிரியர்: சுப. காளிமுத்து**

**வெளியீடு:**

பாண்டியன் பதிப்பகம்,
11/5, சத்யமூர்த்தி அக்ரகாரம்,
நாட்டரசன் கோட்டை-623556

பக்கம்:75 விலை:ரூ.13/-

இச்சிறுகதைத் தொகுப்பில் வரும் நபர்களின் பெயர்கள் அழகானவை. இலக்கிய நடையில் கதை சொல்லி யிருப்பது புதுமை. வழக்கமான சிறுகதைத் தொகுப்பிலிருந்து மாறுபட்டது.

### 'யாதும் ஊரே'

**ஆசிரியர்: சித்தார்த்தன்**

**வெளியீடு:**

பண்மொழி பதிப்பகம்,
31, சித்தலப்பாக்கம் 2-ம் சாலை,
சென்னை-600 047.

பக்கம்:272 விலை:ரூ.35/-

நாட்டிய, கூத்துக் கலைஞர்களை மையமாகக் கொண்டு விரியும் கதை காலம் சங்ககாலம். பாணர், கூத்தர், விறலியர் என்று சுற்றிச் சுழலும் இக் கதையில் காதல், மோதல் உண்டு. சம்பவங்கள், அவை நடந்த இடங்கள், காலமாற்றங்கள் ஆகியவை எழுத்தாற்ற லால் நம்மை சங்ககால சோழ நாட்டிற்கே அழைத்துச் சென்று விடுகின்றன. அழகிய ஓவியங்கள் கதைக்கு மேலும் சுவை கூட்டுகின்றன.

—குமார்

### 'மனத்தெளிவைத் தரும் ஆத்ம ஞானம்'


**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஒ, பெரியார்பாதை மேற்கு
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.14/-

தியானம், அதன் சிறப்பு, மேற் கொள்ளும் விதம். அதன் பயன், தியானத்தின் பிரிவுகள், ஆத்ம ஞானம் ஆகியவற்றை விரிவாக எளிமையாக விளக்கும் நூல், ஆத்ம ஞானம் பெற விரும்புவோருக்கு அற்புத வழிகாட்டி.



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

**தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில் 20.4.94 முதல் 6.5.94 வரை நடைபெற்ற கூட்டத்தொடரில் இடம்பெற்ற முக்கியச் செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.**

தமிழகக் கடலோரத்தில் தற்போது இயங்கிவரும் 7 கப்பற்படைப் பிரிவுகள் செயல்படவில்லையென்றால், விடுதலைப்புலிகள் எளிதில் தமிழ் நாட்டில் ஊடுருவுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும், எனவே இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இந்த 7 கடற்படைப் பிரிவுகளும் தொடர்ந்து தங்கள் பணிகளைச் செயற்படுத்த வேண்டுமென்றும், புதிதாகக் கோரப்பட்டுள்ள 2 கடற்படைப் பிரிவுகளையும் வழங்கி ஆணையிட வேண்டுமென்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களை இந்தப் பேரவையின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர்**

**டாக்டர் ஜெ. ஜெயலலிதா**

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாடு காவல்துறைப் பணியாளர்களுக்கு ரூ.26 கோடி அளவிற்கு அடுக்கடுக்கான சலுகைகளைச் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

**[25.4.1994]**

தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்காக நடப்பு ஆண்டில் சென்னை நகரம், பெரம்பலூர் நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் கிட்டத்தட்ட 100 குடியிருப்புகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**மாண்புமிகு முதல்வர்**

**டாக்டர் ஜெ. ஜெயலலிதா**

ஏழைத் தாய்மார்களின் துயரினைத் துடைக்க அவர்கள் வயிற்றில் பால்வார்க்கும்வண்ணம், நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மலிவு விலை மது ஒழிப்புக் கோப்பில்தான் முதலில் கையெழுத்திட்டேன்; முழு மதுவிலக்கே எங்கள் இலட்சியம்.

**மாண்புமிகு முதல்வர்**

**டாக்டர் ஜெ. ஜெயலலிதா**

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கொண்டுவந்தார். இத் தீர்மானம், விவாதத்திற்குப் பிறகு முழு வரவேற்புடன் நிறைவேறியது.

**[20.4.94]**

விவசாயத்திற்குப் போதிய நீர் இருப்பதாலும், விவசாயிகளுக்குப் புரட்சித்தலைவி அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியிருப்பதாலும் இந்த ஆண்டு

உணவு தானியங்களின் உற்பத்தி ஒரு கோடி மெட்ரிக் டன்னை எட்டும்.

**திரு. கு.ப. கிருஷ்ணன்**

**— வேளாண்மைத்துறை அமைச்சர்**

எந்தக் காரணம்கொண்டும் நிலவரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை கூடாது என்று புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்.

**திரு. எஸ்.டி. சோமசுந்தரம்**

**— வருவாய்த்துறை அமைச்சர்**

குளித்தலை பேரூராட்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் ஒன்று 2.89 ஏக்கர் பரப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. டி.எம். செல்வகணபதி**

**— உள்ளாட்சித்துறை அமைச்சர்**

வழக்கறிஞர்களின் நலநிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளார். வழக்கறிஞர்கள் இறந்தால், வழக்கறிஞர்கள் நலநிதியிலிருந்து இப்போது ரூ.65 ஆயிரம் தரப்படுகிறது. இதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்துவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் இது குறித்து முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்.

**திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி**

**— சட்டத்துறை அமைச்சர்**

கதர் விற்பனையில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடத்தில் இருக்கிறது. கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அங்காடிகள் அமைக்க வாரியம் ஆலோசித்து வருகிறது. இதுவரையில் இந்த வாரியம் 11 இலட்சத்து 83 ஆயிரம் கிராமியக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

**திரு. பி.ஈஸ்வரமூர்த்தி**

**— கதர் கிராமத் தொழில் அமைச்சர்**

சிறிய கிராமங்களில் 300 கார்டுகள் மட்டும் உள்ள இடங்களுக்குப் பகுதிநேர ரேஷன் கடைகள் வைக்கப்பட்டுள்ளன. 800 கார்டுகளுக்குக் குறைவாக உள்ள கடைகள் 15 ஆயிரத்து 338 உள்ளன. 500 கார்டுக்கு மேல் இருந்தால் தனிக் கடைகள் திறக்கலாம். குக்கிராமங்களிலும் ரேஷன் கடைகளைத் திறக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார். இதன்மீது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் வரப்பெற்ற பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. இராம. வீரப்பன்**

**— உணவுத்துறை அமைச்சர்**

## மீனவக் குடும்பத்துக்கு முதல்வர் உதவி

இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த வின்சென்ட் என்பவரின் மகன் ஆரோக்கியராஜ் என்பவர் ஆழ் கடலுக்கு மீன் பிடிக்க 15.11.1989 அன்று சென்றதாகவும், பின்னர் காணாமல் போய் விட்டதாகவும், எனவே, தங்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அவரது குடும்பத்தினர் ஒரு கருணை மனு அனுப்பியிருந்தார்கள்.

காணாமல் போன திரு. ஆரோக்கியராஜ் அவர்களின் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவரது குடும்பத்திற்கு 10,000 ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணையிட்டுள்ளார்.

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழகத்திற்கு வந்து தொழில்களைத் துவங்க அயல்நாட்டில் உள்ள தூதரகங்கள் மூலம் தகவல்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. எம். சின்னசாமி**

**— தொழில்துறை அமைச்சர்**

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையமும் நடத்தும் பாலகங்களில் 20 சதவிகித பாலகங்களை ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு 22.3.94ல் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. டி. ஜனார்த்தனன்,**

**— பால்வளத்துறை அமைச்சர்**

கைத்தறி நெசவாளர்களுக்கு 'ஹட்கோ' உதவியுடன் வீடு கட்டிக் கொடுப்பதைப் போலக் கதர் நெசவாளர்களுக்கும் வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஈஸ்வரமூர்த்தி**

**— கதர்கிராமத்தொழில் அமைச்சர்**



## இங்கிலீஷ் கால்வாயைக் கடக்க குற்றாலீசுவரனுக்கு எல்லா உதவியும் செய்யப்படும்! —மாண்புமிகு முதல்வர்

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரை இடைப்பட்ட கடல் பகுதியைக் கடந்து புதிய சாதனை படைத்த செல்வன் குற்றாலீசுவரன் 27.4.94 அன்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து, தனது நீச்சல் அனுபவத்தை எடுத்துக்கூறி ஆசி பெற்றான். அப்போது அவனது குடும்பத்தாரும் உடன் வந்திருந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனக்குக் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் தான், தான் இந்தச் சாதனை புரிவதற்கு அடிப்படையாக அமைந்தது என்றும், நிதியுதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கிய தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

மேலும், இங்கிலீஷ் கால்வாயைக் கடப்பதற்காகத் தான் மேற்கொள்ளும் முயற்சிக்கு எல்லா உதவிகளையும் வழங்கவேண்டும் என அவன் கோரியபோது; மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவனது எல்லா முயற்சிகளுக்கும் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அதற்குத் தேவையான பயிற்சியை அவன் தினமும் செய்ய வேண்டும், உடல் நலத்தில் நல்ல அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரையையும் ஆலோசனையையும் வழங்கினார்.

சென்னையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகமும் எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலிஒளி காட்சியும் அமைக்கப்படும். சென்னைதரமணியில் 80 ஏக்கர் பரப்பளவில் ரூ.14.93 கோடி ரூபாய் செலவில் சர்வதேசத் தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகி வருகிறது. அந்தத் திரைப்பட நகருக்குத் திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுவரும் புரட்சித் தலைவி பெயரால் 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா திரைப்படநகர் என்று பெயர் சூட்டப்படும். பெரியார் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில் ஆண்டுதோறும் வைக்கத்தில் அரசு விழா நடத்தப்படும். அமரர் ஜீவா பிறந்த இல்லம் நினைவிடமாக்கப்படும். முத்துராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும். சுதந்திர முழக்கமிட்ட பூலித்தேவனுக்கு அரசு சார்பில் நெல்லைச் சீமையில் விழா நடத்தப்படும். 'ரிபெல்' முத்துராமலிங்க சேதுபதி நினைவாக விழா நடத்தவும் சிலை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மு. தென்னவன்

—செய்திவிளம்பரத்துறை அமைச்சர்

தமிழ்நாட்டில் உள்ள முக்கியச் சுற்றுலாத் தலங்களை இரயில் மூலம் சென்று பார்த்துவர ஒரு கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகள் கொண்ட சொகுசு ரயில் விட மாண்புமிகு முதல்வர் அவர்கள்

உத்தரவிட்டுள்ளார். இந்த ரயில் நவம்பர் மாதம் முதல் ஓடும்.

**திரு. நாகூர்மீரான்**

**— சுற்றுலாத்துறை அமைச்சர்**

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பெருமழையினால் நீலகிரி மாவட்டத்தில் மரப்பாலம் அருகே ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவில் காணாமல் போன 15 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

**திரு. எஸ்.டி. சோமசுந்தரம்**

**— வருவாய்த்துறை அமைச்சர்**

பட்டுத்தொழில் மூலம் பெண்களுக்குச் சொத்துரிமையை உருவாக்கப் புரட்சித்தலைவி அரசு திட்டமிட்டிருக்கிறது. 1994ஆம் ஆண்டினைப் பட்டுவளர்ச்சி மகளிர் ஆண்டாக அறிவித்துப் பட்டு வளர்ச்சி சார்ந்த தொழில்கள் மூலம் மகளிர் மேம்பாட்டிற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட உள்ளது.

**திரு. துரை. ராமசாமி**

**— ஊரகத் தொழில்துறை அமைச்சர்**

ஒரு எக்டேரில் கரும்பு விளைவிப்பதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில், மேலும் 5 சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அனுமதிக்குமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திரு. எம். சின்னசாமி**

**— தொழில்துறை அமைச்சர்**

முதுமலையில் உள்ள வன உயிரினச் சரணாலயத்திற்கும், தேசியப்பூங்காவிற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப்படும். சுவாமிமலையில் உள்ள அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயம் - தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை உட்பட நான்கு கோயில்களுக்கு யானைகள் வழங்கப்படும். சந்தன மரத்தைத் தேசிய மரமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

**திரு. கு. லாரன்ஸ்**

**— வனத்துறை அமைச்சர்**

மருதுபாண்டியர் சிலை, சிறு வயலிலுள்ள நினைவுமண்டபத்தில் விரைவில் வைக்கப்படும்.

**திரு. மு. தென்னவன்**

**— செய்திவிளம்பரத்துறை அமைச்சர்**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து 26.4.94 அன்று சட்டப் பேரவையில் 11.35 மணிக்குத் தமது விவாதத்தைத் தொடங்கி 2.10 மணிக்கு முடித்தார். ஆக மொத்தம் 2 மணி 35 நிமிடங்கள் காவல்துறை மானியத் தின்மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்தார்!**

புகழ்பெற்ற கோயில்களைப் பக்தர்கள், சென்று தரிசித்து வரத் தக்கபடி, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில், நவீன வசதியுடன் கூடிய அழகு ரதம் விடப்படும். தமிழகத்திலுள்ள எல்லா முதுநிலைத் திருக்கோயில்களிலும் கட்டணச் சீட்டுகள் வழங்குவதற்கும் உண்டியல் தொகைகளைக் கணக்கிடுவதற்கும் தானியங்கிக் கணிப்பொறிச் சாதனங்கள் நிறுவத் தகுந்த நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

**திரு. நடேசன் பால்ராஜ்**

**— அறநிலையத்துறை அமைச்சர்**

பிற்படுத்தப்பட்ட மக்கள் பொருளாதார வளம்பெற, நடப்பு ஆண்டில் பத்தாயிரம் பேருக்குக் கடனுதவி அளிக்கப் புரட்சித்தலைவியின் அரசு திட்டமிட்டுள்ளது.

**திரு. டி. ஜெயகுமார்**

**— மீன்வளத்துறை அமைச்சர்**

சென்னையில் ஒரு தொழில் பூங்கா ஏற்படுத்தப்படும். இங்கு அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு எல்லா அனுமதிகளையும் வழங்க எல்லா அதிகாரங்களும் கொண்ட சென்னைத் தொழில் பூங்கா ஆணையம் என்ற சட்டப்பூர்வமான அமைப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். சின்னசாமி**

**— தொழில்துறை அமைச்சர்**

அனைத்துத் தொட்டில் குழந்தைகள் பெயரிலும் தலா ரூ.5 ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும். புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கிடைக்கும் அனைத்துப் பயன்களும் தொட்டில் குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

**திருமதி இந்திரகுமாரி**

**— சமூகநலத்துறை அமைச்சர்**

**வெற்றி**

**• வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னணியில், அளவற்ற நேர்மையும், அளவற்ற உண்மையும் இருந்தே தீர வேண்டும்.**

**—சுவாமி விவேகானந்தர்**



# ஊரக விளையாட்டு மையங்கள்



## மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், உலக அரங்கில் விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த வெற்றிகளைப் பெற்று வரும் சில நாட்டைப் போல, தமிழ்நாட்டிலும் கிராமப் புறங்களில் விளையாட்டு மையங்களைத் தமிழகம் எங்கும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஓர் ஆலோசனையை வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் 'ஊரக விளையாட்டு மையங்களை' ஏற்படுத்த வழிவகை செய்யும் திட்டம் ஒன்றினை அரசுக்கு வழங்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பரிந்துரையைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அதனை முழுமையாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊரக விளையாட்டு மையங்களை (Rural Sports Centres) ஏற்படுத்த உரிய ஆணையைப் பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் புதிதாக அமைய இருக்கும் இந்தப் புதிய 'ஊரக விளையாட்டு மையங்கள்' கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டு விளங்கும்:-

ஒவ்வொரு விளையாட்டு ஒன்றியத்திலும் 4 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இதற்காக தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில், 'ஊரக விளையாட்டு மையம்' அமைக்கப்படும்.

4 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் ஒரு சேரக் கிடைக்காத ஒன்றியங்களில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளி/மேல் நிலைப் பள்ளி மைதானத்திலேயே இத்தகைய 'ஊரக விளையாட்டு மையங்கள்' அமையும். இந்த விளையாட்டு மையத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 'ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 50,000 செலவில் சுற்று வேலியும், ஓடு களமும்; விளையாட்டுக் கருவிகளைப் பராமரிக்க ஓர் அறையும், விளையாட்டு வீரர்களுக்கான ஓர் அறையும் இதே திட்டத்தின் கீழ் அமைக்கப்படும். ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் அரசு ரூபாய் 10,000 மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகளை வழங்கும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் உள்ள மாணவ மாணவியர்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள பள்ளிகளில் இருந்து 2 உடற் பயிற்சி ஆசிரியர்கள் விளையாட்டுப் பயிற்சியினை வழங்க ஏற்பாடு செய்யப்படும். இந்த அரசு விளையாட்டு மையங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏதுவாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும், தனியார் ஊக்குவிப்பு முறையில் (Sponsorship) ரூபாய் 20,000 அளவிற்கு நிதி திரட்டப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

கிராம அளவில், ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேர்ந்து எடுக்கப்பட்ட 3 பள்ளிகள் விளையாட்டுப் பயிற்சி மையங்களாகச் செயல்படும். அந்தப் பகுதியிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இருந்தும் விளையாட்டு ஆர்வம் மிக்க மாணவ மாணவியர் குறிப்பிட்ட நாட்களில்/நேரங்களில் வந்து விளையாட்டுப் பயிற்சி பெறுவார்கள். முதல் ஆண்டு இவ்வாறு பயிற்சி பெறும் மாணவ மாணவியரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாவட்ட அளவிலும் பயிற்சி மையங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அடுத்த ஆண்டு அமைக்கப்படும். இத்தகைய ஊரக விளையாட்டுப் பயிற்சி மையங்கள் நல்ல முறையில் இயங்குவதற்குத் தேவையான பராமரிப்புச் செலவு, இதர வசதிகள் ஆகியவை பொது மக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற மாணவ மாணவியர் விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த பயிற்சியைப் பெற வழிவகுக்கும் இந்த 'ஊரக விளையாட்டுப் பயிற்சி மையங்களை' விரைவில் ஏற்படுத்திச் செயல்படுத்துமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# செய்தி விளம்பரத்துறை

## — புதிய அறிவிப்புகள்

★ இதய தெய்வத்தின் சிந்தனைக்கும்,கலைநுணுக்கத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திரையுலகின் மணிமகுடமாகச் சென்னைத் தரமணியில் 14.93 கோடி செலவில், 80 ஏக்கர் பரப்பளவில் சர்வ தேசத் தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகி வருகிறது. அந்தத் திரைப்பட நகருக்குத் திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுவரும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பெயரால் 'ஜெயலலிதா திரைப்பட நகர்' என்று பெயர் சூட்டப்படும்.

★ பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப் போன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிட வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் அமைக்கப்படும். மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் நிரந்தர ஒலி-ஒளிக் காட்சியும் அங்கு அமைக்கப்படும்.

★ கேரள மாநிலத்தில் வைக்கத்திலே கோவிலுக்குள் நுழையக்கூடாது, தெருவில் நடமாடக்கூடாது, நடந்தால் தீட்டு பட்டால் பாவம், என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம் ஆனால், ஒரு பஞ்சமன் வரக்கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து, தந்தை பெரியார் போராடினார்; அதிலே வெற்றி கண்டார். அதை நினைவுகூரும் வகையிலே ரு.15 இலட்சம் செலவிலே புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே அங்கே ஒரு நினைவகம் எழுப்பப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசி மூண்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில் வைக்கத்தில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்படும்.

★ ''காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக்கு கூழுமில்லை, பாருக்கு உழைத்தோமடா, பசையத்து போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழிலாளி கோபத்தின் ரூபமடா!'' என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில், அவர் பிறந்த இல்லம் அரசின் சார்பில் நினைவிடமாக்கப்படும்.

★ மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு எண்ணருமைத் தாயகமே என்னுரிமை என்று சொன்ன முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும்.

**செய்தி-திரைப்படத் தொழில் நுட்ப வியல் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து, மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை 29.4.94**

★ 'வெள்ளையனே வெளியேறு' என்று நெல்லைச் சீமையில் சுதந்திர முழக்கமிட்ட பூலித்தேவனுக்கு அரசின் சார்பில் விழா நெல்லைச் சீமையில் நடத்தப்படும்.



பெரியார் நினைவகம் — வைக்கம்

★ கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு, பீரங்கியால் சுட்டுக் கொல்லப் பட்ட அழகு முத்துக்கோன் நினைவாக நெல்லைச் சீமையில் அரசு சார்பில் விழா நடத்தப்படும்.

★ 18-ஆம் நூற்றாண்டில் பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்த/சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ 192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட இராஜாஜி மண்டபத்தை ரூ.17.97 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து, கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அச்சகத்திற்குப் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ திரைப்படக் கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தை ரூ.3 இலட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

★ சென்னையில் கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில், ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

★ 1994-95-இல் வேலூர், கடலூர் ஆகிய இரு இடங் களிலும் கூடுதலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சி களைக் காணும் வகையில் தூத்துக்குடி, இராமநாதபுரம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய ஐந்து நகரங்களில் சிறிய அளவிலான பொருட்காட்சிகள் 1994-95-இல் நடத்தப்படும்.

★ பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணை யுடன் அரசின் வளர்ச்சிப் பணிகள், பயன்கள் குறித்து, ஏற்கெனவே சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1994-95-இல், திண்டுக்கல்-அண்ணா, திருவண்ணாமலை-சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

---

வேளாண்மைப் பொறியியல் துறை

# சிறுபாசனத் திட்டத்தில், இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்

வேளாண்மைப் பொறியியல் துறையில், சிறுபாசனத் திட்டத்தின்கீழ் 1958ஆம் ஆண்டு முதல் குழாய்க் கிணறுகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தும், திறந்தவெளிக் கிணறு களை ஆழப்படுத்தியும் துளையிட்டும் பாசனத் திற்கு நிலத்தடி நீரினை வெளிக்கொணர்வதற்குத் தேவையான இயந்திரங்கள், விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து, வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்து ஆதி திராவிட விவசாயிகள் பயன் பெறும் வகையில், 1986-87ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட பணிகளுக்குத் தேவையான இயந்திரங்களின் வாடகையில் 50 சதவிகித மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

1990 - 91ஆம் ஆண்டில், 1.2.1991 முதல் மேற்கண்ட 50 சதவிகித வாடகை மானியத்துடன், மேலும் 50 சதவிகித மானியம் மேற்காணும் பணிகளுக்கான மூலப் பொருட்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அவைகளின் விவரம் பின் வருமாறு

1. நில நீர் ஆய்வு செய்யும் கருவிகளின் வாடகை.

2. உத்தேசிக்கப்பட்டுள்ள கிணற்றை அமைக்கும் இடத்திற்கான ஆய்வுக் கட்டணம்.

3. இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்கானச் செலவு.

4. கூலி ஆட்களுக்கான செலவினம் மற்றும் மூலப் பொருட்களானக் கூழாங்கல் போன்ற கிணறு அமைக்கத் தேவையான பொருட்களின் செலவினம்.

5. டீசல் செலவினம்.

6. மின்னியல் ஆய்வுக் கருவிகளுக்கான வாடகை.

7. பைப் செலவினம்.

8. கிணற்றை ஆழப்படுத்தத் தேவையான வெடி மருந்துகளின் செலவினம்.

9. கிணறுகளைத் தூய்மைப்படுத்த ஆகும் செலவினம்.

1991-92ஆம் ஆண்டில் பயனடைந்த இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு ரூ.5.548 இலட்சங்களும், 1992-93ஆம் ஆண்டில் விடுபட்ட இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.5.968 இலட்சங்களும், 1993-94ஆம் ஆண்டில் பயன்பெற உள்ள இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.45.00 இலட்சங்களும், ஆக மொத்தம் ரூ.56.516 இலட்சங்கள் நடப்பு ஆண்டு (1993- 94) முடிய இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படவுள்ளது.

நடப்பு ஆண்டில், மேற்கண்டவாறு 50 சத விகித மானியத்தினைப் பெற விரும்பும் இந்து ஆதிதிராவிட விவசாயிகள், இத்துறையில் உள்ள இயந்திரப் பிரிவு உபகோட்டங்களை அணுகி உரிய விண்ணப்பத்தினைப் பெற்று, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து மானியத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

# அழகிய நினைவுச் சின்னம்


சு. தங்கவேலு
உதவி இயக்குநர், அரசு அருங்காட்சியகம்

விக்டோரியா மகாராணியின் 50-ஆம் ஆண்டு ஆட்சியினை நினைவுகூரும் வகையில், 1887-ஆம் ஆண்டு சென்னையில் தங்கவிழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழு மொத்தம் 13 உறுப்பினர் களைக் கொண்டு இருந்தது. குழு வின் மூன்றில் ஒரு பங்கு உறுப் பினர்களை அரசே நியமிக்க வழி வகை செய்யப்பட்டது. தங்கவிழாக் குழு திரட்டிய நிதிக்குச் சமமான நிதியை அரசே கொடுத்துதவியது.

கைவினைஞர்களுக்கு ஆதரவும், அவர்கள் தயாரித்த பொருட்களுக்கு விற்பனைச் சந்தையும் இல்லாமல் பழங்காலக் கலைத் தொழில்கள் அழிந்து வந்தன. பழங்காலக் கலைத் தொழிலைப் புதுப்பிக்கும் நோக்கத் துடன், 1888-ஆம் ஆண்டு அக்டோபர் 29-இல் விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனம் தொடங் கப்பட்டது.

விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றிருந்த காலஞ்சென்ற இராவ்பகதூர் ஆற்காடு தனகோட்டி முதலியார் அவர்கள் அந்நிறுவனத் தில் நூலகம் அமைப்பதற்காக ரூ.20,000 நன்கொடை வழங் கினார். சர் சவாலி இராமசாமி முதலியார், திரு. பால்சன் ஆகி யோருடன் மற்றவர்களும் நிறுவனத் தின் வளர்ச்சிக்கு நன்கொடை தந்து உதவினார்கள். இவ்வாறு உருவாக் கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூல மாக மற்ற நிறுவனங்களில் கலை மற்றும் விஞ்ஞானம் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை யும் வழங்கப்பட்டன.

விக்டோரியா மகாராணி இறந் ததை முன்னிட்டு 1901-ஆம் ஆண்டு மார்ச் 5-ந் தேதி பொதுக்



**வாழ்க்கை**

ஒ ஒரு விளக்கு எரிகிறதென்றால், எரிவதன் மூலம் ஒவ்வொரு விநாடியும் அது தன்னை அழித்துக் கொள்கிறது. அப்படி அழித்துக் கொள்வதுதான் வாழ்க்கை.



கூட்டம் ஒன்று சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அக் கூட்டத்தில் விக்டோரியா மகா ராணியின் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதென்றும் அதற்கு நிதி திரட்டுவதென்றும் தீர்மாணிக் கப்பட்டது. அந்த நினைவுச் சின்னம் அமைக்க அரசு 1902-இல் அரசு அருங்காட்சிய வளாகத்தில் இடம் தந்துதவியது. பின் இந்த முடிவை மாற்றி 1905-இல் எழும்பூரில் ''மால்பரோ இல்லம்'' என்றழைக் கப்பட்ட பழைய கட்டடத்தைக் கொண்ட சுமார் 4.076 ஏக்கர் நிலப்பரப்பை அரசே ரூ.10,000-க்கு வாங்கி நினைவுச் சின்னம் அமைக்க உதவியது. இவைதவிர அரசு கட்டட நிதிக்கு ரூ.75,000 வழங்கியது.

1906-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ந் தேதி வேல்ஸ் நாட்டு இளவரசர் மேதகு ஜார்ஜ் பிரடரிக் ஈனஸ்ட் ஆல்பர்ட் அவர்களால் விக்டோரியா நினைவுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1909-ஆம் ஆண்டு நினைவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது அக் கட்டடம் கட்ட ஆன செலவு ரூ.1,51,902, அணா ஒன்றும், பைசா ஏழும் ஆகும். விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தை வடிவ மைத்தவர் கட்டடக் கலை வல்லுநர் திரு. இர்வின், C.I.E ஆவார்.

பேத்பூர் சிக்கரி, ஆக்ரா, டில்லி ஆகிய இடங்களில் மொகலாய மன்னர்களால் எழுப்பப்பட்டுள்ள மொகலாயக் கட்டடங்களைப் போன்று இக்கட்டடமும் மொக லாயக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்டது. இக்கட்டடம் முழு வதும் இளஞ்சிவப்பு நிறமுடைய கற் களால் ஒட்டப்பட்டு அழகுப்படுத்தப் பட்டுள்ளது. மேலும், பூவேலைப் பாடுடைய கற்களின் அமைப்பும் வடிவமும் மிகவும் நேர்த்தியாக உள் ளன. கட்டடத்தின் முன்பகுதி மிகவும் நன்கு அலங்கரிக்கப் பட்டுள்ளன. இராவ் சாகிப் T. நம்பெருமாள் செட்டியார் இக்கட்ட டத்தின் ஒப்பந்தக்காரர் ஆவார். சென்னை மாநகரத்தின் அழகுமிகு கட்டடங்களில் ஒன்றான விக்டோரியா நினைவு இல்லம் 1909-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் தேதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆளுநர் சர் ஆர்தர் லாலே என்பவரால் திறந்து வைக் கப்பட்டது.

இந்த நினைவுச் சின்னம் விக்டோரியா தொழில்நுட்ப நிறு வனத்தின் தலைமையகமாக இருந்து, தொழில்நுட்ப ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் செய்திகளை வழங்கி வந்தன. கலைத் தொழிலையும் அதன்மூலம் தென்னிந்தியக் கலைஞர் களின் திறமையையும் வளர்ப்பதன் மூலம், அவர்களின் முன்னேற்றத்தைப் பேணுவதே இந்த நிறுவனத்தின் குறிக்கோளாக இருந்தது. மேலும், இது நிரந்தரக் கண்காட்சிக் கூடமாக விளங்கியதுடன் கலைப் பொருட் களை விற்பனைச் செய்யும் இடமா கவும் விளங்கியது.

இரண்டாம் உலகப்போரின் போது இந்த நினைவு இல்லம் போர் வீரர்களுக்குத் தேவைப்பட்ட கார ணத்தால், கலைப்பொருட்கள் யாவும் மவுண்ட்ரோடில் இருந்த ''நவாசி'' இல்லத்திற்கு மாற்றப் பட்டது. இந்திய இராணுவச் சட்ட விதி 76-ன்படி சென்னை ஆளுநர் F.W.A. மூரிஸ் அவர்களின் மேற் பார்வையில் சென்னை கேரிஸன் பொறியாளரால் இந்த நினைவுக் கட்டடத்திற்கு மாத வாடகை ரூ.500 என நிர்ணயிக்கப்பட்டு, அவ்வாறே விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வந்தது.

இராணுவத்தினர் வெளியேறிய பின், கல்வித்துறை துணைச் செயலாளர் திரு. C.O. கூரே, I.C.S. அவர்களைத் தலைவராகவும், அரசு அதிகாரிகள் மற்றும் தனியார் சிலரையும் கொண்ட குழு ஒன்று அருங்காட்சியக வளர்ச்சிப் பணி களுக்கு ஆலோசனை வழங்க 1945-ஆம் ஆண்டு அமைக்கப் பட்டது. இந்தக் குழு ஒரு ஓவியக் காட்சிக்கூடம் அமைக்கவும், அதில் இந்திய ஓவியங்களின் வளர்ச்சி யையும், பழங்கால நவீனகால ஓவியங்கள் மற்றும் பெர்ஷியா, திபேத், சைனா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஓவியங்களையும் காட்சிக்கு வைக்கப் பரிந்துரை செய்தது.

1951-இல் விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒரு கலைக்கூடம் அமைத்திட அரசு அனுமதி அளித்து அதற்கு வாடகை ரூ.500 நிர்ணயித்தது. அரசின் முடிவிற்கு விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனமும் இணக்கம் தெரி வித்தது. அதன்பேரில் இக்கட்டடத் திற்குத் ''தேசிய கலைக்கூடம்'' என பெயரிடப்பட்டது. தேசியக் கலைக் கூடம் அமைத்திட ஆலோசனை வழங்க கல்வித்துறைச் செயலாளர் திரு. கே.எம். உன்னிதன், I.C.S. தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டு அதில் டாக்டர் ஜேம்ஸ் கஸின், திரு. டி.பி. ராய் சவுத்திரி மற்றும் டாக்டர் ஐயப்பன் ஆகி யோர் உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்.

அருங்காட்சியகத்தில் இருந்த 400 ஓவியங்களில் 54 ஓவியங்கள் தேசிய கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கத்தேர்வுசெய்யப்பட்டன. சில படிமங்கள், உலோக வார்ப்புகள், மரச்சிற்பங்கள், தந்தத்தினால் ஆன பொருட்கள் மற்றும் துணி வகைகள் அருங்காட்சியகத்திலிருந்தும், கலை மற்றும் தொழில்நுட்பப் பள்ளியி லிருந்தும் தேசியக் கலைக்கூடத்திற்கு மாற்றப்பட்டு, காட்சிக்கு வைக்கப் பட்டன.

அருங்காட்சியக நூற்றாண்டு விழாவின்போது தேசியக் கலைக் கூடம் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்களால் நவம்பர் 27,1951-இல் திறந்து வைக்கப்பட்டு நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஜூன் 26, 1965-இல் விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனத்தின் இந்தக் கட்ட டத்தை அரசு கையகம் செய்தது.

சனவரி 25, 1984-இல் வளர் கலையை மேம்படுத்த தனிக்கட்டடம் அமைக்கப்பட்டு, வளர்கலைக் கூடம் என்று பெயரிடப்பட்டது. எனவே, தேசியக் கலைக்கூடத்தில் மரபுக் கலைப் பொருட்கள் மட்டும் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



# பெண்சிசுவைக் காப்போம்

பாவலர். கருமலைத்தமிழாழன்

இருட்டினிலே வாழுகின்றார் பெண்கள் இங்கு
எழுச்சியான முற்போக்கு வளர்ந்த பின்பும்
மருள்நீங்க வழியின்றி அடிமை யாக
மண்டியிடும் கீழ்மைநிலை அகல வில்லை
பெருகிவரும் அறிவியலின் புதுமை யாலே
பெறுகின்ற அறிவினிலே வளர்ச்சி பெற்றும்
குறுகியுள்ள மனதாலே பெண்கள் தம்மை
கூன்நிமிர விட்டிடாமல் குட்டு கின்றார்!

பெற்றவரோ பெண்சிந்தும் கண்ணீர் கண்டு
பெருந்துன்பில் நோவதன்றி வேறென் செய்வர்
புற்றுநோயாய்ப் புரையோடிச் சமுதா யத்தில்
புகுந்திருக்கும் அவலத்தைப் பார்த்தி ருந்தும்
கற்றவரும் கல்லாராய்த் தீமை தன்னை
களைதற்கே என்செய்தார்! சட்டம் ஒன்றால்
குற்றங்கள் புரிவதனைத் தடுக்க ஒல்லும்!
கூடியொன்றாய்ச் செயல்செய்தால் முடிந்தி டாதோ!

வாய்வீரம் பேசுகின்றார் மேடை தோறும்
வார்த்தையிலே சமத்துவத்தை வழங்கு கின்றார்
தாய்க்குலமே இந்தநாட்டைத் தாங்கு கின்ற
தெய்வமென உதட்டாலே வணங்கு கின்றார்
வாய்ப்பளித்தோம் சரிசமமாய் ஆக்கி விட்டோம்
வளருகின்ற சமூகத்தில் ஆணும் பெண்ணும்
தோய்ந்தொன்றாய் ஏற்றத்தாழ் வகன்றி வாழ
தொல்லைகளை நீக்கிவிட்டோம் என்றே சொன்னார்!

பெண்சிசுவின் முகம்பார்க்கும் மனமு மின்றி
பிறந்தவுடன் கழுத்துதனை நெறித்து வீட்டின்
அண்டையிலே இருப்போரும் அறியா வண்ணம்
அழகுடலைப் புதைக்கின்றார் கிராமந் தன்னில்!
கண்ணெதிரில் நடக்கின்ற கயமை தன்னைக்
காணுகின்ற நாமெல்லாம் செய்த தென்ன
விண்ணதிரப் பெண்கள்தம் பெருமை பேசி
விளைகின்ற கொடுமையினைத் தடுத்தோ மில்லை!

மடமையிலே வாழுகின்ற கிராம மக்கள்
மனதினிலே பெண்ணச்சம் மடியச் செய்வோம்
தடம்மாறிச் செய்கின்ற செயல்களையத்
தகுமுறையில் மனத்தெளிவைத் தளிர்க்கச் செய்வோம்
திடமாக பெண்ணடிமை நீங்கு தற்கே
திமிரான ஆண்வர்க்கம் திருந்தச் செய்வோம்
கடமையிது நமக்கின்று கயமை போக்கி
கனிவோடு பெண்ஆணும் ஒன்றே என்போம்!

அரசிந்தக் கொடுமையினை அகற்று தற்கே
தொட்டிலொன்று அமைத்துளது தொட்டி லுக்குள்
வரவாக வருகின்ற பெண்கு ழந்தை
வளர்தற்கே காப்பகமும் அமைத்து வாழ
இரக்கத்தைக் காட்டுதல்போல் கருணை உள்ளம்
இருப்போர்கள் தத்தெடுத்துக் காக்க வந்தால்
அரவணைப்பில் தளிர்க்கரங்கள் வளர்ந்து நாளை
அறிஞராகி நாடுதனைக் காப்பர் அன்றோ!



# குறளின் குரல்

''விந்து நாதமடி - அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும்பூதம் - அகப்பேய்
அதனிட மானதடி''

என்றார். அக்ப் பேய்ச் சித்தர் விந்தும் நாதமும் இணைந்து கரு உண்டாகிறது. நீர், நிலம், தீ, காற்று, வான் என்னும் ஐந்து பூதங்களும் இணைந்து, 'நாதவிந்தால்' ஆன உடம்பினுள் உயிராக ஆகி, அவ் உடம்பை இயக்குகிறது.

## கவிஞர் சாமி பழனியப்பன்

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு''

என்னும் குறட்பா. 'செய்நன்றி அறிதல்' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருகிறது. இக்குறட்பாவிற்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர்,

''தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமையினையுடைய தம் ஏழுவகைப் பிறப் பினும் நினைப்பர் நல்லோர்'' என்று குறித்தார்.

மேலும், 'எழுமை என்றது வினைப்பயன்' தொடரும் ஏழு பிறப்பினை அது வளையாபதியுட் கண்டது. எழு வகைப் பிறப்பு மேலே உரைத்ததாம். விரைவில் தோன்றத் துடைத்தவர் என்றார்' என்று விரிவுரை சொல்லிக்கொண்டு செல்லுகிறார்.

''ஊர்வ பதினொன்றாம்
ஒன்பது மானுடம் நீர்ப்பறவை நாற்காலோர்
பப்பத்து - சீரிய பந்தமாத் தேவர்
தினா லயன்படைத்த சந்தமில் சீர்த்தா வரநா லைந்து''

என்பதே பரிமேலழகர் எடுத்துக்காட்டும் வளையாபதிச் செய்யுள்.

''தாங்கள் உற்ற துன்பத்தை நீக்கினவரது நண்பை, அப் பிறப்பிலேயன்றி, எழுமையிலும் தோற்றும் பிறப் பெல்லாம் நினைப்பர் சான்றோர் என்றவாறு''

என்கிறார் மணக்குடவர். இந்தக் கருத்தினை அடியொற்றியே பலரும் உரை வகுத்துள்ளனர்.

திருக்குறளில் 'ஏழுபிறப்பு' என்னும் சொல் 62, 107 ஆகிய குறட்பாக்களிலும், 'எழுமை' என்னும் சொல் *126, 398, 538, 835* ஆகிய குறட்பாக்களிலும் இடம்பெற்றுள்ளன. இந்த எழுமை, எழு பிறப்பு என்னும் சொற்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஏழ்வகைப் பிறப்பில் வள்ளுவர்க்கு உறுதியுண்டு என்று வலியுறுத்த முனைவது சரியன்று. அறிவுக்குப் பொருந்துவதுமல்ல.

அவ்வுடம்பினின்றும் உயிர் வெளியேறியதும் உடம்பின் இயக்கமளிந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல. உயிர் நீங்கிய பின் அவ்வுடம்பு சவமாகி இயக்கமிழந்து விடுகிறது. மேலும், அவ்வுடம்பு எரிக்கப்பட்டோ, புதைக்கப்பட்டோ கழிந்து விடுகிறது. அவ்வுடம்பினின்றும் வெளியேறிய உயிராகிய ஐம்பெரும் பூதங்களான உயிரின் நிலை என்ன? அது அப்படியே வேறோரு உடம்பினுட் புகுந்து 'பிறவி' எடுக்கிறதா?

நாம் குளத்திலிருந்து ஒரு குடம் நீர் எடுத்து வரு கிறோம். அக்குடத்து நீரை மீண்டும் குளத்திலேயே கொண்டு போய்க் கொட்டிவிடுகிறோம். அதன், நாம் முன்பு குளத்தில் கொட்டிய அதே குடத்து நீரை மொள்ள முடியுமா?

நிலக்கரியிலிருந்து வைரம் தயார் செய்யப்படுகிறது. அந்த வைரம் எரிக்கப்பட்டால், அது மீண்டு கரியாகி விடுகிறது. அது வைரம் என்ற சிறப்பிமிகு பெயரையும் இழந்துவிடுகிறது. அப்படியேதான், உடம்பிலிருந்து வெளியேறிய, ஐம்பூதங்களும் வெளியே சூழ்ந்துள்ள ஐந்து பூதங்களோடு கலந்து விடுகின்றன. இதுதானே அறிவியல் உண்மை.

''உடம்பை வளர்க்கும்
உபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த் தேனே''
''உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்''

என்றார் திருமூலர்.

''கறந்தபால் முலைப்புகா
கடைந்தவெண்ணெய் மேற்புகா
உடைந்துபோன சங்கினோசை
உயிர்களும் உடற்புகா
விரிந்தபூ உதிர்ந்தகாயும்
மீண்டும்போய் மரம்புகா
இறந்தவர் பிறத்தலென்ப
தில்லைஇல்லை இல்லையே''

என்றார் சிவ வாக்கியர்.

மறு பிறப்பையும், ஏழு பிறப்புக்களையும் வற்புறுத்துவது சமயக் கருத்தே தவிர, தனிப் பெரும் புலவரான வள்ளுவர் கருத்தன்று.

எனவே 'ஏழ்' என்பதை எண்ணுப் பொருளில் கொண்டு, பிறப்பு, பிறவி என்பவற்றைத் தலைமுறை யாகக் கருதுவதே பொருத்தமும் சிறப்பும் உடையதாகும்.

புதுக்கோட்டையில் எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர்; வயதிலும் அறிவும் பண்பொழுக்கங்களிலும் வளர்ந்தவர். இனிய நண்பர். அவரது தந்தையார், நான் முன்னர்கூறிய பெரியவர் சிறு பிள்ளையாக இருந்தபோதே பெரும் கடனாளியாகிவிட்டாராம். அவர்களுக்கு அப்போதிருந்த சொத்து ஒரு சின்னஞ்சிறு வீடே.

கடன் கொடுத்திருந்த முதியவர், கடனே வசூலிப்பதற் காக வந்திருந்தாராம். கடன்பட்டவர் தன் நிலையை எவ்வளவோ எடுத்துக்கூறி, எப்படியேனும் கடனை விரைவில் தீர்த்துவிடுவதாகச் சொல்லிக்கெஞ்சி, பொறுத் துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டாராம்.


ஆனால், சில நாட்களிலேயே கடன்பட்டவர் திடீ ரென்று இறந்துவிட்டாராம். கடன் கொடுத்தவர் பதறிப்போய், வீட்டை ஜப்தி செய்யப்போவதாகச் சொன்னாராம். அப்போது சிறுபிள்ளையாக இருந்த நான் முன்னர் கூறிய எனது நண்பர் அவரிடம் சென்று, கண்ணும் கருத்தும் கலங்கி, ''ஐயா! தயவு செய்து கொஞ்சநாள் பொறுத்துக்கொள்ளுங்கள். நான் எப்படி யும் உங்கள் கடனைத் தீர்த்துவிடுகிறேன்; நீங்கள்தான் இப்போது காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சி னாராம். கடன் கொடுத்தவரின் மனம் இரங்கியது. மனித உள்ளந்தானே!


விரைவில் கடனும் தீர்க்கப்பட்டது. அது நடந்து பல ஆண்டுகளாயின. எனினும் என் நண்பர், அந்த மனிதரின் பெருந்தன்மையை வாயாரப் பேசிப் புகழ் கிறார். என் நண்பரின் பிள்ளைகளும் கடன் கொடுத்த பெரியவரை இன்றும் நன்றியோடு போற்றிப் பாராட்டு கின்றனர்.

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு''

என்பது இதுதான். எனவே, எழுமை என்பதை எழு பிறப்பு என்று கொள்ளாமல், பல தலைமுறை என்று பொருள் கொள்வதே பொருத்தமானது.

ஆகவே, வள்ளுவர்க்கு எழு பிறப்பிலும், மறு பிறப்பிலும், நம்பிக்கை உண்டென்று பேசாமல், ஏழு என்ற சொல்லை எண்ணுப் பொருளில் கொண்டு, 'பல தலை முறை' என்று பொருள் காண்பதே வள்ளுவர் உள்ளத்திற்கு இயைந்ததாகும்!




**சென்னை மாநகரில் சிறுசேமிப்பு விளம்பர பலூன்**

சென்னை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு (1993-94) அளிக்கப்பட்டுள்ள சிறுசேமிப்பு வசூல் இலக்கு ரூ.150 கோடி. சிறுசேமிப்பு வசூல் இலக்கினை எய்திடும் நோக்குடன் சிறுசேமிப்பு முனைப்பு இயக்கங்கள் பல மேற்கொள்ளப் படுவதில் பலூன் விளம்பரமும் ஒன்றாகும். இப்பலூன் விளம்பரம் சிறுசேமிப்பு இயக்குநரகம் இயங்கிவரும் 5 மாடி கட்டடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளதால் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.





# மாம்பழமாம் மாம்பழம்

உலகின் மிக முக்கிய ஆறு பழவகைகளில் மாம்பழமும் ஒன்று. ஆனால், ஏற்றுமதியில் மிக முக்கிய இடத்தை மாம்பழம் வகிக்கின்றது. மாம்பழ உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் 11 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மாம்பழம் பயிரிடப்படுகிறது. ஆண்டு தோறும் 88 இலட்சம் டன் மாம் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாம்பழ உற்பத்தியில் ஆந்திரப்பிர தேசம் முதலிடத்தையும், பயிரிடும் பரப்பில் உத்திரப்பிரதேசம் முதல் இடத்தையும் வகிக்கின்றன.

பீகார், கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் மாம்பழத்தை முக்கியப் பயிராகப் பயிரிடுகின்றன.

மாம்பழப் பதத்தைப் பொறுத்து, அதன் ஏற்றுமதி வளம் சார்ந்திருக் கிறது. உலகின் 40 நாடுகளுக்குப் பதப்படுத்தப்பட்ட மாம்பழம் ஏற்று மதி செய்யப்படுகிறது. 1991-92-இல் ரூ.35.46 கோடி அந்நியச் செலாவணி மதிப்புள்ள 23,104 மில்லியன் டன் மாம்பழமும், 1992-93-இல் ரூ.48 கோடி அந் நியச் செலாவணி மதிப்புள்ள 27,000 மில்லியன் டன் மாம் பழமும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வளைகுடா நாடுகள்தான் அதிக அளவில் மாம்பழத்தை இறக்குமதி செய்கின்றன.

சர்வதேசச் சந்தையில் இந்திய மாம்பழத்திற்கு ஏற்பட்டுள்ள கிராக் கியும், ஏற்றுமதி வளமும், நாட்டில் மாம்பழ உற்பத்திக்கு ஊக்கமளித்து உள்ளன. தரத்தை மேம்படுத்த இது எட்டாவது திட்ட காலத்தில் தோட்டக் கலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தரமான பழமரக் கன்றுகள் விநியோகிக்கப்படும். மாம்பழ உற்பத்தியை மேம்படுத்த 27,000 எக்டேர் பரப்பளவில் உள்ள பழமையான மாம்பழ மரங்களுக்குப் புத்துயிர் ஊட்டப் படும். தரம் வாய்ந்த அல்போன்ஸோ மாம்பழத்தை வழங்க 1992-93-இல் ரூ.4.40 இலட்சம் சிறப்பு ஒதுக் கீடாக வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 11,906 எக்டேர் பரப்பளவில் உள்ள பழைய மாமரங் களுக்குப் புத்துயிர் ஊட்ட ரூ.1.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நுகர் வோர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத் தில் பல புதுமையான மாம்பழ வகைகளை இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்து வருகிறது.

மாம்பழம் மற்றும் இதர பழ வகைகள் குறித்து விரிவான ஆராய்ச்சியை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் நடத்தி வருகிறது. பல்வேறு தட்பவெட்பச் சூழலில் உள்ள பல்வேறு மையங் களிடையே நெருக்கமான தொடர்பு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேலும் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் செய்திகள் 'பரிமாறிக்கொள்ளப்படு கின்றன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலைத் தொழில் வளர்ச்சியில் தரமான உற்பத்திக்கும், அறுவடைக்குப் பிந் தைய முறை மேம்பாட்டுக்கும் முக் கியத்துவம் அளிக்கப்பட்டு வரு கிறது. பல்வேறு வர்த்தக ஊக்கு விப்புகள் இருந்தபோதிலும், பல் வேறு சிறப்பு மேம்பாட்டு நடை முறைகளை வேளாண் மற்றும் பதன உணவு மேம்பாட்டு ஏற்றுமதி ஆணையகமும், தேசியத் தோட்டக் கலை வாரியமும் மேற்கொண்டு வருகின்றன.

# குடும்ப நலத் திட்டத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்கு

என். ரெங்கநாதன்

இன்றைய இந்திய மக்கள் தொகை 88 கோடியாகும். ஆண்டுக்கு 2.1 சதவிகிதம் அதிகரித்துக் கொண்டிருக்கும் இன்றைய இந்தியாவில் இன்னும் 25 ஆண்டுகளில் அதன் மக்கள் தொகை இரண்டு மடங்காகி விடும். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிடில் இன்னும் 25 ஆண்டுகளில் இந்தியா பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதன் அவசியம் என்ன? ஏன் கட்டுப்படுத்துகிறோம்? மக்கள் தொகை சீராக இருப்பதால் விளையும் நன்மைகள் யாவை? என ஆராயும்போது இவற்றைக் கட்டுப்படுத்த உதவும் சாதனம் - மக்கள் தொடர்புடையச் சாதனமாகத்தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கையில் இன்றைய மாநில, மத்திய அரசுகள் மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலம் இத்திட்டத்தினை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகின்றன.

### மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதன் அவசியம்

இன்றைய இந்தியாவில், ஏன், உலகளவிலே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதன் குறிக்கோள் யாது எனப் பார்க்கும்போது, இருக்கும் வளங்களைச் சரியாக நுகர முடியாத நிலை, ஏழ்மை, பஞ்சம், பிணி, பட்டினி என, தன் ஒரு வயிற்று சோற்றுக்கே திண்டாடும் நிலமையைப் போக்கி, அனைவரும் வளத்துடன் வாழ இந்த மக்கள் தொகைக் குறைப்பு அவசியம்.

### மக்கள் தொகை பற்றிய கல்வி


மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, குடும்ப நலத்தினை மேம்படுத்த போதிக்கப்படும், நடைமுறைப்படுத்தும் கல்விக்குக் குடும்ப நலக் கல்வி என்று கூறலாம்.

இன்றுள்ள இந்தப் பெருக்கத்திற்கு ஒவ்வொரு இடத்திற்கும் சென்று போதித்தல் என்பது இயலாத ஒன்று. மக்களிடம் ஜனரஞ்சகமாகப் பரவியுள்ள, மக்கள் அனைவரும் தொடர்பு வைத்துள்ள, மக்களால் பயன்படுத்தப்படுகிற சாதனங்கள் மூலம் எடுத்துரைக்க வேண்டும். எடுத்துரைத்தல் வாயிலாக மக்கள் மனதைக் கவரவேண்டும்.

மக்கள் தம் பொருளாதார நிலைமையை, அறியாமை நிலைமையை, நாட்டின் நிலைமையை உணர்ந்து, தன்னைத் தானே சீரமைத்துக் கொள்ள தொடர்புச் சாதனங்கள் உதவ வேண்டும். இன்றைய மக்கள் தொகைப் பெருக்கம், அவர்களின் வறுமை, சூழ்நிலை, போதிய கல்வியின்மை ஆகியவற்றின் மூலம்தான் ஏற்படுகின்றது. எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மக்கள் கல்வியும், மக்கள் தொடர்பு சாதனங்களும் இன்றியமையாதவையாகும்.

### மக்கள் தொடர்பு சாதனங்கள்

மக்களிடம் நயம்பட, தெளிவாக, சிந்தையில் விரைவில் பதியுமாறு உருவாகும், உருவாக்கப்படும் சாதனமே - தொடர்புச் சாதனம். மக்களுடன் தொடர்பு கொண்டு மக்களிடையே மாற்றத்தை விளைவிப்பதில் பெரும்பங்கு வகிப்பவை மக்கள் தொடர்பு சாதனங்களாகும்.



தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தாட்கள், சுவரொட்டி, திரைப்படங்கள், கண்காட்சி ஆகியவை மக்கள் தொடர்பு சாதனங்களாகும். இப்படிப்பட்ட சாதங்கள் எப்படி மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த முடியும்? படித்த மக்களையும், பாமர மக்களையும் எப்படி இந்த இன்றியமையாத திட்டத்தின் கீழ் உள்ளடக்க முடியும் என ஆராய வேண்டும்?

பல்வேறு தொடர்புச் சாதனங்கள் குடும்ப நலத்தை மக்களிடையே பரப்புவதற்கு மக்கள் தொடர்பு சாதனங்கள் மிகவும் அவசியம்.

பாமர மக்களுக்குச் செய்தித்தாள் மூலம் செய்திகள் சென்றடைய வாய்ப்பில்லை. ஏனெனில், போதிய படிப்பின்மை, இருந்தபோதிலும் குடும்ப நலச் செய்திகள், வண்ண நிறங்களில் தரப்படும் குடும்ப நல விளம்பரங்கள், ஆர்வத்தைத் தூண்டும் தலைப்புகள், படங்கள், ஓவியங்கள் மக்களை ஈர்க்கின்றன என்று கூறினால் மிகையாகாது.

தொலைக் காட்சிகள் வாங்க இயலாத நிலைமை - ஏனெனில், பணமின்மை; வறுமை; அப்படியானால் அவர்களுக்கு வானொலியும், திரைப்படங்களும்தான் முக்கிய வழிகாட்டிகளாக இருக்கமுடியும்.

அநேகமாக, படிக்காத வறுமைக் கோட்டின் கீழ் நிற்கிற, சராசரி கிராமப்புற இந்தியனைச் சென்று அடைகிற சாதனம் திரைப்படம் தான் அவன் தனது துயரங்களுக்கு வடிகாலாக, விடிவெள்ளியாகக் கருதி நேசிப்பது திரைப்படம்தான். காட்சி அமைப்புகளின் வாயிலாக அவன் விரும்புகிற திரைப்படத்தின் மூலமாக அவனுக்குத் தெரிவிக்க வேண்டிய இனிப்புத் தடவிய மாத்திரையாக மாற்றித் தர முடியும்.

திரைப்படங்களின் வாயிலாக குடும்ப நலத் திட்டத்தின் பயன்கள் விளக்கமாக எடுத்துக் கூறப்படுவதால், கதையம்சத்துடன் செய்திகள் கூறப்படுவதால் மக்கள் மனதில்

நன்றாகப் பதிந்து விடுகின்றது. திரைப்படங்கள் பொழுதுபோக்குச் சாதனமாக மட்டுமல்லாது, தற்பொழுது அது ஒரு அத்தியாவசியத் தேவையாக மக்களால் கருதப்படுகின்றது. ஆதலால், குடும்ப நலத் திட்டத்தின் நன்மைகள் மக்கள் மனதில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.

வானொலி மூலம் அவர்கள் செய்திகள் அனைத்தையும் கேட்பார்களா என்பது ஐயத்திற்குரியது. இப்படிப்பட்ட சமயத்தில் எப்படி மக்கள் கல்வியைப் பரப்ப வேண்டும்? என்பது பிரச்சினைக்குரியது. இந்தப் பிரச்சினைகளுக்கு இடையிலும் நம் மக்களைப் பற்றிக் கூறும்போது ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செய்தி; ''நம் இந்திய மக்கள் தனக்குத் தெரிந்த செய்தியை உலகம் முழுவதுக்கும் எடுத்தியம்பும் நல் இயல்பு உடையவர்கள்''. ஆகவே, பரப்ப நினைக்கும் செய்தியை ஒரு மனிதனின் செவிகளிலாவது கேட்கும்படி, நன்றாகச் செவி சாய்க்கும்படி செய்தால், நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் தெரிந்து விட்டது என திருப்தியில், மகிழ்ச்சியில் திளைக்கலாம். சுவையான நிகழ்ச்சிகளுக்கிடையில் கவனத்தைக் கவருகின்ற வண்ணமாக விளம்பரம் செய்தல் என்பது ஒரு கலை. நல்ல பயன் தரவல்லது. மனதில் நிற்கக் கூடிய விளம்பர வசனங்கள் நல்ல முறையில் கை கொடுக்கும்.

குடும்ப நலக் கல்வியைப் பற்றி தொடர்புச் சாதனங்கள் தெரிவிக்கும்பொழுது நல்ல விளக்கங்களுடன், புரியும் விதத்தில் கொடுக்க வேண்டும். மக்கள் ஆர்வமாய் இருக்கும் நேரத்தில் அவ்வகைச் செய்திகள் சென்றடைய வேண்டும். சுவரொட்டி, சுவர்களில் விளம்பரங்கள், கட்-அவுட் போன்றவை குடும்பநலப் பிரச்சாரப் பணியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**இன்றைய இந்திய மகனின் நிலை**

இன்றைய அடிப்படைப் பிரச்சினையான ஏழ்மை, வறுமை, பஞ்சம், பிணி, பட்டினி, அறியாமை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவற்றிலிருந்து மீட்டு, ஒரு புதிய உலகுக்கு இட்டுச் செல்ல தொடர்புடைய சாதனங்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டுமெனில்,

முதல் பொருளாக, கருத்தாக, சாதனங்களின் மூலம் மக்களின் பிரச்சினைகள் மக்கள் தொகைப் பெருக்கத்தால் எவ்வாறு உருவாகிறது என்பதை எடுத்துரைக்க வேண்டும். எத்தனையோ கோடி மக்கள் தங்களின் பிரச்சினை என்ன என்பதை அறியாமல் வாழ்கிறார்கள். ஆகவே, மக்கள் அல்லலுற்றிருக்கும் பிரச்சினைகள் யாவை என்பதை எடுத்தியம்புதல் தொடர்புச் சாதனத்தின் முதல் குறிக்கோளாகும்.

இரண்டாவது, இந்தப் பிரச்சினையை அகற்றுவதற்கான வழிமுறைகளையும் உடனுக்குடன் அறிவுறுத்தல் வேண்டும். தகுதி வாய்ந்த தம்பதிகளிடமும், இனித்திருமணம் செய்யப் போகிறவர்களிடம் குடும்ப







நலச் செய்தியைத் தகுதியான நேரத்தில் சென்றடையச் செய்யும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, திருமண வயதை உயர்த்த வேண்டுமென்பதை மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக இயம்புவதன் மூலம் ஓரளவு மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுக்கலாம். தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் திருமண வயதை உயர்த்துவதன் அவசியம், அதனால் ஏற்படும் பயன்கள், சிறுவயது திருமணத்தின் கொடுமைகள் ஆகியவற்றைப் பற்றித் தெளிவான, விரிவான விளக்கங்களை எடுத்துரைக்க வேண்டும்.

இன்னும் பத்து ஆண்டுகளில் மனிதப் பிறப்பு உயர்வு வீதம் குறையவில்லையெனில் மனிதன் பெருந்துயர் அடைய நேரிடும் என்று எடுத்தியம்பி, உயரும் வீதத்தை நிலை நிறுத்தச் செய்ய வேண்டும். இப்படி நிலை நிறுத்த, உலக மக்கள் தொகையைக் குறைக்க ''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை'' செயல்படுத்துதல் அவசியம். இவற்றை, எப்படிச் செயல்படுத்துவது என்பது, மக்களின் மன நிலையைப் பொறுத்த நிகழ்ச்சிகளை அமைப்பதைப் பொறுத்து இருக்கும்.

நமது மக்கள் பிறப்பின் வீதத்தினைக் குறைப்பதன் அவசியத்தைப் பற்றி அறிந்திருந்தாலும், எவ்வழியில் கையாள்வது என்பது பற்றிச் சரியான சிந்தனை இல்லாத நிலையில், அறியாத நிலையில் உள்ளார்கள். மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு போதிய விவரங்களை மக்களுக்குக் கொடுப்பதுதான்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள், குடும்ப நல நிலையங்களை எப்படி அணுகுவது என்பது பற்றித் தெளிவாக விவரிக்க வேண்டும். இந்த நிலையங்களின் பங்கு என்ன என்பது பற்றி இச்சாதனங்கள் தெளிவான முறையில் மக்களைக் கவரும் பாங்கினிலே எடுத்துரைக்க வேண்டும்.

**சில புள்ளி விவரங்கள்**

1950-51-இல் இந்திய மக்கள் தொகை 361.1 மில்லியனாக இருந்தது. 1990-91 இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி 844.3 மில்லியனாக உயர்ந்து விட்டது. 40 ஆண்டுகளில் இரண்டு மடங்குக்கு மேல் மக்கள் தொகை பெருகிவிட்டது. பிறப்பு விகிதத்தையும், இறப்பு விகிதத்தையும் ஓரளவு கட்டுப்படுத்தியிருந்தாலும் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். பிறப்பு விகிதம் 1950-51-இல் ஆயிரத்துக்கு 39.9 என்ற நிலையில் இருந்தது தற்பொழுது அது 29.9 என்ற நிலைக்குக் குறைந்துவிட்டது. அதே காலத்தில் இறப்பு விகிதம் 27.4 என்ற நிலையில் இருந்து, 9.6 என்ற நிலைக்குக் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் அரசின் மக்கள் நல்வாழ்வுப் பணிகள்தாம். ஒரு இந்தியனின் சராசரி ஆயுட்காலம் 58 ஆண்டுக்கு உயர்ந்துவிட்டது. மருத்துவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. 1950-51-இல் பத்தாயிரத்

துக்கு 1.7 என்ற நிலையில் இருந்து 1989-90-இல் 4.4 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. படித்தவர்களின் எண்ணிக்கை இந்தியா குடியரசு நாடாகிய பொழுது நூற்றுக்கு 16.7 என்ற நிலையில் இருந்து தற்பொழுது 52.11 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. முழு எழுத்தறிவு இயக்கத்தின் வாயிலான படித்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்று நம்பப்படுகிறது.

ஒப்பிடுதல் என்ற வகையிலே இன்றைய நிலமையை - மோசமான நிலமையை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சீனாவில் முதல் குழந்தையோடு தன் குடும்பத்தை நடத்திச் செல்வதே போதும் என நினைக்கிறார்கள். இரண்டவாது குழந்தையை இரண்டாம் தரமாக நினைக்கிறார்கள். இவற்றை மக்களுக்குத் தொடர்புடைய சாதனங்களே எடுத்துச் சொல்ல முடியும்.

கூத்து, வில்லுப்பட்டு, நடன நாட்டியங்கள், பேச்சு, பாட்டு, நாடகங்கள், கண்காட்சி முதலிய வற்றின் மூலம் 'அளவான குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம்' என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

எனவே, செய்திகளை அறிய மக்களைப் படிப்பறிவுடையவராக அரசு மாற்ற வேண்டும். 'அறிவொளி இயக்கம்' இப்பணிக்கு பெரிதும் உதவுகின்றது. பிரச்சாரப் பணியை, முனைப்பு இயக்கத்தை தொய்வின்றிச் செய்து வந்தால், இன்னும் பத்து ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். தொடர்புச் சாதனங்கள் மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. வளமான வாழ்விற்கு அளவான குடும்பம் என்பது உணரப்பட்டு விட்டது. அளவான குடும்பத்தால் வளமான இந்தியாவை எதிர் நோக்குவோம்.

"மக்கள் தொகைக் கல்வி என்பது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்று. மக்கள் தொகைக் கல்வி என்பது தற்போது உள்ள மக்கள் பெருக்கத்தினால் ஏற்படும் தீமைகளை அறிந்து கொண்டு, வரும் காலத்தில் மக்கள் தொகைக் கட்டுப்படுத்தி நாட்டைச் சீர்படுத்தி, வளப்படுத்துவதே ஆகும்."

## சென்னை நகரில் கொசு உற்பத்தியைத் தடுக்க மாநகராட்சி தீவிர நடவடிக்கை


சென்னை மாநகரில் உள்ள கூவம், ஓட்டேரி நல்லா நீர்வழிப் பிரிவுகளில் சென்னை மாநகராட்சி பையோலார்விசைட் என்னும் உயிர்க்கொல்லி மருந்தினைத் தெளித்து, கொசு உற்பத்தியைத் தடுக்கத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மேற்கண்ட பணி சோதனை முயற்சியாக மார்ச் 1993 முதல் நடைபெற்று வருகிறது. இந்த உயிர்க்கொல்லி மருந்து தெளித்த இடங்களில் கொசுத் தொல்லை குறைந்துள்ளது.

குறைந்த நீர் உள்ள இடங்களிலும் உயிர்க்கொல்லி மருந்துகளைத் தெளிப்பதற்கு வசதியாகத் தரமணியில் உள்ள ஏ.எம்.எம். முருகப்பச் செட்டியார் ஆய்வு நிலையம் மிகவும் உறுதியான பாலிதீன் குழாய்களைக் கொண்டு கடலில் மீன் பிடிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மிதப்பானை குறைந்த நீரிலும் செல்வதற்கு வசதியாகத் திருத்தி வடிவமைத்து சென்னை மாநகராட்சிக்கு வழங்கியது. இந்த மிதுப்பானை உபயோகப்படுத்தி தற்பொழுது நீர்வழிப் பிரிவுகளில் உயிர்க்கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் நீர்வழிப் பிரிவுகளில் கொசு உற்பத்தி பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மிதப்பானின் உபயோகம் திருப்திகரமாக உள்ளது. இதேபோல் எல்லா நீர்வழிப் பிரிவுகளில் வளரும் ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்றவும், கொசு உற்பத்தியைத் தடுக்க மருந்து தெளிக்கவும் தருமபுரி மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களிலிருந்து ஒன்பது பரிசல்கள் சென்னை மாநகராட்சி பெற்றுப் பயன்படுத்தி வருகிறது. பரிசல்கள் ஓட்டுவதற்குத் தினசரி ஊதியத்தில் மீன் பிடி படகு ஓட்டத் தெரிந்தவர்களைப் பணியில் அமர்த்தி உள்ளது. மேற்கண்ட தீவிர நடவடிக்கை காரணமாக நீர்வழிப் பிரிவுகளில் கொசு உற்பத்தி மிக அதிக அளவில் குறையும்.

ஒரு சில வசிப்பிடங்களில் கொசுத் தொல்லைக்குக் காரணம் வீட்டில் உள்ள மொட்டை மாடி, சன்சேடு மற்றும் பயன்படாத பொருட்களான டயர், பூந்தொட்டி, பிளாஸ்டிக் பொருட்கள், ஆட்டுக்கல் போன்றவற்றில் தண்ணீர் தேங்க விடுவதுதான். எனவே, உபயோகப்படுத்தாத பொருட்களை அகற்றவேண்டும் என்றும் தேங்கும் தண்ணீரில் வாரம் ஒரு முறை மண்ணெண்ணெய் தெளித்து கொசு உற்பத்தியைத் தடுக்க வேண்டுமென்றும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.







# கால்நடைச் செல்வம்

நம் நாட்டிலுள்ள கால்நடை வளம், உலகத்திலேயே அதிகமாக உள்ள ஒன்றாகும். இத்துறையில் 30 கோடி மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ளார்கள். கால்நடை வளர்ப்பு, பழங்காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. உலகளவில் நம்நாடு, பால் உற்பத்தியில் 2-வது இடத்தையும், முட்டை உற்பத்தியில் 5-வது இடத்தையும், கோழி இறைச்சி உற்பத்தியில் 21-வது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியாவில், தமிழ்நாடு பால் உற்பத்தியில் 7-வது இடத்தையும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்தையும், கோழி இறைச்சி உற்பத்தியில் 3-வது இடத்தையும் பெற்று இருக்கின்றது.

நம் நாட்டிலுள்ள கால்நடை மற்றும் கோழிகளின் எண்ணிக்கை விவரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| மாடுகள் | 192 மில்லியன் |
| எருமை | 70 மில்லியன் |
| செம்மறியாடு | 48 மில்லியன் |
| வெள்ளாடு | 95 மில்லியன் |
| பன்றி | 10 மில்லியன் |
| குதிரை, முயல் மற்றும் ஒட்டகம் | 2 மில்லியன் |
| கோழி | 400 மில்லியன் |
| மீன் உற்பத்தி | 3.3 மில்லியன் டன் |
| மற்றவை | 6 மில்லியன் |

இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 51,900/- கோடியாகும்.

1991-92-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, வேளாண்மைத் துறை, கால்நடை மற்றும் மீன் உற்பத்தியின் அளவு, நம்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தித் திறன் குறியீட்டு அளவின்படி ரூ.1,62,568/- கோடியாகும். இது, மொத்த தேசிய உற்பத்தித் திறனில் 30 சதவீதமாகும். இதில், நம்நாட்டில் பால் உற்பத்தியின் மூலம் மட்டும் ரூ.24,805/- கோடி வருவாய் கிடைக்கின்றது. இறைச்சி உற்பத்தியின் மூலம் ரூ.6,000 கோடியும், முட்டை உற்பத்தியின் மூலம் ரூ.1,500/- கோடியும், மீன் உற்பத்தியின் மூலம் ரூ.6,600 கோடியும், வருமானம் கிடைக்கின்றது. இதைத்தவிர, நம்நாட்டில் கால்நடைகளில் உற்பத்தியாகும் உப பொருட்கள் மற்றும் கழிவுகள் மூலம் ரூ.18,000/- கோடிக்கு வருமானம் கிடைக்கின்றது.


தமிழகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை வருமாறு:

| | |
|---|---|
| மாடு | 9.32 மில்லியன் |
| எருமை | 3.12 மில்லியன் |
| செம்மறியாடு | 5.87 மில்லியன் |
| வெள்ளாடு | 5.94 மில்லியன் |
| பன்றி | 0.66 மில்லியன் |
| கோழி | 21.5 மில்லியன் |
| மீன் உற்பத்தி | 1.7 மில்லியன் டன் |

தமிழ்நாட்டில் பாலின் மூலம், சுமாராக 1,040 கோடியும், முட்டையின் மூலம் ரூ.75 கோடியும், இறைச்சியின் மூலம் ரூ.300 கோடியும், வருமானம் கிடைக்கின்றது.

இவ்வாறு, நாட்டின் வளத்தைப் பெருக்க, பலவகையில் அடிப்படைக் காரணமாக உள்ள கால்நடைவளம் வளர்ந்து வருகின்றது. ஆசிய கண்டத்திலேயே கால்நடை மருத்துவ அறிவியலுக்காக அமைக்கப்பட்டுள்ள முதல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்தான்.

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத் துறையின் மூலமாக, பண்ணையாளர்களின் பயனுக்காகப் பல வகையில், தொழில்நுட்ப முறைகள் சென்று அடைய திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன. பயிற்சியின் மூலமாகவும், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாகவும் அன்றாடம் கண்டறியப்படும் கருத்துக்களைப் பண்ணையாளர்களுக்குச் சென்று அடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வானொலி வேளாண் பள்ளி மூலமாகப் பல பயிற்சித் திட்டங்கள், நடத்தப்பட்டு வருகின்றன. வேளாண் காடுகள் பயிற்சியும், பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தெற்கு ஆசியக் கூட்டமைப்பில் உள்ள கால்நடைத் தொழில் துறையில் பணிபுரியும் வல்லுநர்களுக்கும், மற்றும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்க இந்திய அரசு, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.



புளியங்கொட்டை

# ஆடுகளுக்குச் சத்தான தீவனம்!

நம் நாட்டில் 48 மில்லியன் செம்மறியாடுகள் உள்ளன. இதன் மதிப்பு 1500 கோடியாகும். நம் நாட்டில் ஆண்டுதோறும் 5 மில்லியன் டன் ஆட்டிறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் 5.8 மில்லியன் செம்மறி ஆடுகள் உள்ளன. இது இந்தியாவின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவீதமாகும். தமிழ்நாட்டில் செம்மறியாடுகள் பொதுவாக இறைச்சிக்காக மட்டும் வளர்க்கப் படுகிறது.

ஆடு வளர்ப்பின் மூலம் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகள் அரும்பாடுபட்டு வாழ்ந்து வருகின்றார்கள். முக்கியமாகச் செம்மறியாடுகள் கிராமப்புறங்களில் மேய்க்கால் புறம்போக்குத் தரிசு நிலங்கள் அறுவடை ஆன நஞ்சை நிலங்கள், ஏரிதண்ணீர்ப் பிடிப்பு எதிர் நிலங்களில் மழையின் காரணமாக வளர்ந்துவரும் புல்லை மேய்ந்து தன்னுடைய வளர்ச்சி யினாலும், இனப்பெருக்கத்தினாலும் விவசாயிக்கு நடமாடும் வங்கியாக, இருந்து வாழ்வு அளித்து வருகின்றன. இந்த மாதிரி மேய்ச்சல் தரைகள் வைகாசி, ஆனி மாதங்களில் கோடை வறட்சியின் காரணமாகவும், தென் மேற்குப் பருவ மழை சரியான நேரத்தில் வராமல் தாமதமாகும் காலங்களில், மேய்ச்சல் தரையில் புல் உலர்ந்து குச்சிகளாகக் காணப்படுகிறது. அவைகளையும் மேய்ந்து தன் உடலை வளர்த்துக் கொண்டு உயிருடன் வாழும் ஆடுகள் உடல் எடை குறைந்தும் நலிவுற்றும் காணப்படுகின்றன. தீவனக் குறைவின் காரணமாகப் பல நோய்கள் தாக்கவும் ஏதுவாகிறது.

இதனால் செம்மறியாட்டை வளர்க்கும் விவசாயிகள் இம் மாதிரிக் காலங்களில் ஏற்பட விருக்கும் நஷ்டத்தைத் தடுப்பதற் காக வேண்டி, அவசர அவசரமாகத் தரகர்களிடம் குறைந்த விலைக்கு ஆடுகளை விற்க நேரிடுகிறது. இந்த மாதிரி விவசாயிகள் மழைக்குப் பிறகு புதிதாக ஆடுகளை வாங்கி மேய்த்துப் பிழைக்கலாம் என்று நினைத்துக் கையிருப்பாகப் பணத்தை வைத்துக் கொண்டு விவரம் இல்லாத செலவுகள் செய்து, ஆடு வாங்க வேண்டிய தருணத்தில் கையிருப்புக் கரைந்து ஆடுகள் வாங் காமல் மீண்டும் வறுமையில் சிக்கித் தவிக்கின்றார்கள். இம்மாதிரியான சூழ்நிலைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நடைமுறை யில் இல்லாத விவசாய உபபொரு ளாக இருந்து கழிவு செய்ய வேண்டிய புளியங்கொட்டையை நல்ல மாற்றுத் தீவனமாகப் பயன் படுத்தலாம். புளியங்கொட்டை மாவுக் கஞ்சி காய்த்து வைத்து அவற்றிலிருந்து நல்ல பலன்களைப் பெறலாம். புளியங்கொட்டை மாவினை ஆட்டுத் தீவனமாகப் பயன்படுத்தி திருப்பத்தூர், வாணி யம்பாடி ஆகிய வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் நல்ல பலன் பெற்று வருகிறார்கள்.

இம்மாதிரி முன்னோடி விவசாயிகளை மற்ற விவசாயிகளும் பின்பற்றி நல்ல பலன் அடையலாம். தமிழகத்தில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பாகப்பகுதியில் புளியங் கொட்டை விவசாய உபபொருளாகவும், மலிவாகவும் கிடைக்கிறது. இப்பொருளைத் திருப்பத்தூர் வட்டாரத்தில் புளியங்கொட்டை மாவாக அரைத்து விற்பனைக்குத் தயார் செய்யும் பல அரவை ஆலைகள் உள்ளன.

புளியங்கொட்டை மாவு உலர்த் தப்பட்ட நிலையில் கீழ்க்கண்ட சத்துடன் கிடைக்கிறது

1. புரதச் சத்து 19.8%

2. ஈதரில் கரையும் கொழுப்புத் தொகுதி 4.7%

3. நார்ச்சத்து 2%

4. கொழுப்பில்லாத தொகுதி 70.3%

5. சாம்பல் சத்து 3.1%

6. ஜீரணிக்கூடிய புரதச்சத்து 12.6%

7. ஜீரணிக்கக்கூடிய ஊட்டச் சத்து 63.9%

**புளியங்கொட்டை தீவன முறை யினால் கிடைக்கும் நன்மைகள்**

1. மிகக் கடுமையான வறட்சிக் காலங்களில் புளியங்கொட்டை மாவு தீவனமாக அளித்து உடல் எடை குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

2. குறுகிய காலத்தில் உடல் எடை அதிகமாக்கி, பண்டிகைக் காலங்களில் விற்று நல்ல லாபம் அடையலாம்.

3. இம்மாதிரி தீவனம் பாலூட்டும் தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட குட்டி களுக்கு, சத்துவாக அளித்தால் வளர்ச்சி விகிதம் அதிகமாகும்.

4. காலத்தே பருவத்திற்கு வந்து சினையுற்று ஆரோக்கியமான குட்டி களை ஈனும்.

5. அதிகமாகச் சீரணிக்கக்கூடிய புரதச்சத்து உள்ளதால் நோய் எதிர்க்கும் தன்மையுடன் வளமாக வளரும்.

இதுகுறித்து, அருகிலுள்ள கால் நடை மருந்தகம் மற்றும் களப்பணி நிலைய கால்நடை உதவி மருத்து வர்களை அணுகி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

டாக்டர் சித்ரவேல்,
டாக்டர் வீரராகவன்,
டாக்டர் இராமானுஜம்
ஆடு வளர்ப்புத் திட்டம்,
கால்நடை மருத்துவமனை வளாகம்,

சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# இந்திரா விகாஸ் பத்திரம்

## சிறப்பு அம்சங்கள்

- ★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
- ★ 18.18% சாதாரண வட்டி.
- ★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
- ★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
- ★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
- ★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
- ★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
- ★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
- ★ பரிசாகவும் அளிக்கலாம்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:

ஆணையர்,

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,

92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,

அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**


சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/[illegible]/DIS/94

# ஆவணம் காப்போம்! அறிவை வளர்ப்போம்!



— ஜெ. ஜெயச்சந்திரன்,
உதவி ஆணையர்,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
எழும்பூர், சென்னை8

'ஆவணங்கள்' என்றால் பொதுவாக அரசு ஆவணங்களையே குறிக்கும். அரசு ஆவணங்கள் 'பொது ஆவணங்கள்' (Public Records) என்று அழைக்கப்படுகின்றன. அரசு நிர்வாகப் பணிகள் காரணமாக உருவாக்கப்படும் ஆவணங்கள் பிற்காலத்தில் வரலாற்று ஏடுகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய பொது ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் இடமே ஆவணக்காப்பகம்.

இக்காப்பகத்தில் மிகப் பழைய ஆவணமாகக் கருதப்படுவது 1670ஆம் ஆண்டைச் சார்ந்த 'பொதுத்துறை' ஆவணமாகும். இங்கு கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள், கிரௌன் ஆவணங்கள், தலைமைச் செயலக ஆவணங்கள், வருவாய் வாரிய ஆவணங்கள் எனப் பல்வேறு துறைகளுக்குரிய ஆவணங்களும், டச்சு, டேனிஷ், பெர்சியன், மராட்டி, மோடி மற்றும் தமிழ் மொழிகளிலும் ஆவணங்கள் உள்ளன. ஏறக்குறைய கடந்த 320 ஆண்டு ஆவணங்கள் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை முந்தைய ஆட்சி, நம் கலை, கலாச்சாரம், அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்கள், அரிய திட்டங்கள் போன்ற பல பொருள்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

இந்த ஆவணக்காப்பகம் உருவாக, முன்பு சென்னைக் கவர்னராக இருந்த "வில்லியம் பெண்டிங்" என்பவரே காரணம். 1805இல் இவர் பல்வேறு துறைகளில் உருவாக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆவண மையம் ஒன்றை கோட்டைச் சதுக்கக் கட்டத்தில் துவக்கினார். இதற்காக நீண்ட அனுபவம் பெற்ற முத்தையா என்ற நம் நாட்டவரை முதலில் ஆவணக்காப்பாளராக நியமித்தார். 1908இல் இந்த ஆவணங்கள் அனைத்தையும் கோட்டையிலிருந்து, புதிதாக எழுப்பப்பட்ட எழும்பூர் கட்டடத்திற்கு மாற்றினார்கள். அன்று முதல் கோட்டையிலுள்ள அரசுத் துறைகளுக்கு தினமும் தேவைப்படும் ஆவணங்களை அனுப்புவது, பணி முடிந்ததும் அவற்றைத் திரும்பப்பெறுவது ஆகியவை முக்கியப்பணியாக இங்கு நடைபெறுகிறது.

இங்கு மாற்றப்பட்ட ஆவணங்கள் யாவும் ஆவணப் பாதுகாப்பிற்காகவே உருவாக்கப்பட்ட ஒன்பது மிகப் பெரிய ஆவண அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆவண அறையின் பரப்பளவு சுமார் 4000 சதுர அடியாகும். இவை ஒவ்வொன்றிலும் சுமார் 1,60,000 கன அடி அளவு ஆவணங்களை வைத்து பாதுகாக்கலாம். மூன்று அடுக்குகள் கொண்ட ஒவ்வொரு ஆவண அறையிலும் 350 அடுக்கங்கள் (Racks) உள்ளன. இந்த ஆவண அடுக்கங்கள் துத்தநாகம் பூசப்பட்ட இரும்புத் தகடுகளால் உருவாக்கப்பட்டவை. ஆவண அறையின் தரை கடப்பா கற்களால் உருவாக்கப்பட்டது. சுவர்ப்பகுதி சலவைக் கற்கள் பதிக்கப்பட்டது. ஆவணங்கள் பூச்சிகளால் தாக்கப்படாமல் இருக்கவும், காற்று வசதிக்காகவும், போதிய வெளிச்சத்திற்காகவும் ஒவ்வொரு ஆவண அறையிலும் சுமார் 100 ஜன்னல்கள் உள்ளன. காற்று, வெளிச்சம் போன்றவை தாராளமாகக் கிடைக்குமாறு இவை அமைக்கப்பட்டுள்ளன.

ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்து நிர்வகிப்பது இக்காப்பகத்தின் மற்றொரு முக்கிய பணியாகும். ஆவணங்களை நீண்ட காலம் அப்படியே அவற்றின் தன்மை கெடாமல் வைத்திருப்பது மிகவும் கடினமான பணியாகும். சாதாரணமாக 2030 ஆண்டுகளில் பெரும்பாலும் காகிதம் பழுப்படைந்து உளுத்து வீணாகிவிடும் தன்மை படைத்தது. நவீன பாணியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தால் மட்டுமே அவற்றை கெட்டுப்போகாமல் பல ஆண்டுகள் பாதுகாக்க இயலும். இவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு முதலில் ஆவணங்களின் அமிலத்தன்மை போக்கப்படுகிறது. பின்னர் இந்த ஆவணங்களுக்கு, காஷ்மீரிலிருந்து வரவழைக்கப்பட்ட சிப்பான் துணியை இருபுறமும் ஒட்டி அவற்றின் தன்மை மேம்படுத்தப்பட்டு நீண்ட நாள் உபயோகத்திற்குப் பயன்பட செய்யப்படுகிறது. அமெரிக்க முறையான லேமினேஷன் பாணியிலும் ஆவணங்களுக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது. இதனால் அவற்றை உபயோகிக்கும் காலமும் அதன் தரமும் நீடித்திருக்க வகை செய்யப்படுகின்றன. தவிர, ஆவணங்களில் சேர்ந்துவிடும் மிக நுண்ணிய உயிர்க் கிருமிகள், வெள்ளை அணுக்கள், பாசி, பூஞ்சக்காளான், கால வேறுபாடுகளால் தோன்றும் பல்வேறு கிருமிகள் முதலியவைகளை அழிக்க ஒரு நவீன இயந்திரம் அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. அதன் பெயர் 'வேக்குவம் ப்யூமிகேஷன் சேம்பர்ஸ்' என்பதாகும். இந்தச் சேம்பரில் உள்காற்றை நீக்கிவிட்டு, ஒரே நேரத்தில் சுமார் 500 ஆவணக்கட்டுகளை அடுக்கிவைத்து இரசாயனப் புகையூட்டம் செய்யப்படுகிறது. இதனை இரண்டொரு நாள் வைத்திருந்து பின்னர் சேம்பரிலிருந்து ஆவணங்கள் திரும்ப எடுக்கப் பெறுகின்றன. இதனால் புழு. பூச்சிகள் அழிக்கப்பட்டு தாட்களின்

மூலங்கள் கெட்டுப்போகாமல், அடிப் படை பாதுகாப்புப் பணிகள் செய்யப் படுகின்றன.

ஆராய்ச்சிப் பணிக்கு உதவுவது இக்காப்பக முக்கியமான வேலை களில் ஒன்று. இங்கு வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வரும் மாண வர்கள், பேராசிரியர்கள் போன்ற வர்களுக்கு ஆவணங்கள் வழங்கப் படுகின்றன. பட்ட மேற்படிப்பு முடித்து "எம்.பில்.", "பி.எச்டி." போன்ற ஆராய்ச்சி பட்டம் பெறு வதற்காகவும், ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள் எழுதவும் இங்கு பலர் வருகின்றனர். இத்தகைய ஆராய்ச்சி யாளர்கள் குறைந்த கட்டணம் செலுத்தியபின் அனுமதி வழங்கப் படுகின்றது. வரலாற்று ஆராய்ச்சி யாளர்களுக்கென தனி ஆராய்ச்சிக் கூடம் இக்காப்பகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டு களுக்கு முந்தைய, இரகசியக் கோப்புகள் உட்பட, அனைத்து அரசு ஆவணங்களும் ஆராய்ச்சிக்கு வழங்கப்படுகின்றன. ஆராய்ச்சி மேற்கொள்பவர்களுக்கு தேவைப் படும் மூல ஆவணங்களின் நகல்கள் ஜெராக்ஸ், மைக்ரோபிலிம் போன்ற இயந்திரங்கள் மூலம் வழங்கப் பெறுகின்றன. ஆராய்ச்சிப் பணிக்கு உதவ ஒரு பெரிய நூலகமும் இங்கே உள்ளது.

இக்காப்பகம் பொதுமக்களுக்கும் பயன்படுகிறது என்பது பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதில் ஒன்று அரசு அலுவல் ரீதியாக வெளியிடப்படும் கெசட் (Gazette) இதழ்களில் உள்ள தேவைப்படும் விஷயங்கள், அதாவது பெயர் மாற் றங்கள், நில ஏற்புகள், அரசின் பல் வேறு துறைகள் சார்ந்த அறிக்கைகள், தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளின் முடிவுகள் போன்ற அச் சிடப்பட்ட விவரங்களின் உண்மை நகல்கள் எழுத்துமூலம் கேட்பவர் களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு சிறிய கட்டணமும் உண்டு. மற் றொன்று தனிப்பட்ட நபர்களுக்காக அவர்கள் கோரும் விவரங்களை ஆவணங்களிலிருந்து அதில் கண்ட வாறு நகல்களாக வழங்குகிறோம். இதற்கும் ஆண்டுக்கு இவ்வளவென்று தேடுகட்டணம் வசூலித்து அதன்பின்பு வழங்கப்படுகின்றன. உதாரணமாக இக்காப்பகத்தில் உள்ள இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கிழக்கிந்திய கம்பெனியர்கள் ஆட்சி, ஆட்சி யாளர்கள், தனிப்பட்ட அதன் ஊழியர்கள், அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்லது அவர்களது பரம்பரைம்பரைகள் பற்றிய பல்வேறு செய்திகளையும் ஆவணங்களிலிருந்து தொகுத்து வழங்கப்படுகின்றன.

வரலாற்று ஆராய்ச்சி ஒன்று - இந்த அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இம்மன்றத்தில் மன்றப் பணிகளுள் ஒன்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பது. பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் போன்ற பல துறையினரும் இக்காப்பகத்திலுள்ள ஆவணங்களைக்கொண்டு ஆராய்ச் சிக் கட்டுரை எழுத அது வாய்ப்பளிக் கிறது.

மேலும், ஆவணங்களைப் பொறுத்தமட்டில் பொது ஆவணங்கள் (Public Records) என்றும், தனியார் ஆவணங்கள் (Private Records) என்றும் பிரிக்கலாம். அரசு ஏற்படுத்தும் ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்றும், தனி மனிதர் களோ, தனியார் நிறுவனங்களோ உருவாக்கும் ஆவணங்கள் தனியார் ஆவணங்கள் என்றும் கருதப்படு கின்றன. தனியார் ஆவணங்களும் நமது பண்டைய பெருமை, கலாச் சாரம் மற்றும் நம் அரசியல் சமூக பொருளாதார அமைப்புகளில் பங்கு இவற்றை எடுத்துக்கூறவல்லன. இதற்கு மண்டல வரலாற்று ஆவண ஆய்வுக்குழு (Regional Committee for Survey of Historical Records) ஒன்று ஆவணங்களைச் சேகரிப்பதற்காக 1948 முதல் இயங்கி வருகிறது. அப்போது டாக்டர் பாலிகா, எம்.பி. பெரியசாமிதூரன், டாக்டர் மு.வ,கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, ராஜா சர் முத்தையா செட்டியார், சத்தியநாத அய்யர் போன்றோர் அதன் உறுப்பினர்களாக இருந்தனர்.

இக்குழு தனியார் வசமுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணங் களை வெளிக்கொண்டு வர பெரு முயற்சி செய்து வருகிறது. இக்குழு பெறும் தனியார் ஆவணங்கள் பற்றிய விவரங்களைப் பட்டியலிட்டு (National Register of Private Records) தேசிய தனியார் ஆவணங்கள் பதிவேட்டில் சேர்ப்பதற்காக புதுடில்லியில் உள்ள தேசிய ஆவணக்காப்பகத்திற்கு அவ்வப்போது அனுப்பப்படுகின்றன.

## எஸ்.பி.சி.ஏ. சங்கத்துக்கு மாண்புமிகு முதல்வர் மானிய உதவி!

**SPCA (Society for Prevention of Cruelty to Animals) என்னும் சேவை நிறுவனத்திற்குத் தமிழக அரசு இதுவரை ஆண்டு ஒன்றுக்கு 50,000 ரூபாயை மானியமாக வழங்கி வந்தது. SPCA நிறுவனத்தின் செயலாளர் அரசாங்கத்தின் மானியத்தைச் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.**

**அந்தக் கோரிக்கையை ஏற்று விலங்கினங்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை நீக்குவதற்காகப் பாடுபடும் இந்தச் சேவை நிறுவனத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ஆண்டு மானியத் தொகை 50,000 ரூபாயை உயர்த்தி, 1994-95ஆம் ஆண்டிற்கு 2 இலட்சம் ரூபாயாக வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை வழங்கி யுள்ளார்.**

தனியார் ஆவணங்களை வைத்துள்ளவர்கள் தகுந்த முறையில் அவற்றைப் பராமரிப்பதில் தனிக்கவனம் செலுத்தாமையினால் அவை பழுதடைந்து விடுகின்றன. சில காணாமலும் போய் விடுகின்றன. இதனால் அவற்றில் உள்ள அரிய வரலாற்றுச் செய்திகள் முழுமையான அளவில் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்காமல் போகின்றன. எனவே, இத்தகைய ஆவணங்களைத் தனியார்களிடமிருந்து பெறவும், தக்க முறையில் பாதுகாக்கவும், அழிந்து விடாமல் காப்பாற்றவும் அரசு வரலாற்று ஆவண ஆராய்ச்சிக் குழுவை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவினர் மேற்கொண்டுள்ள பணியை ஊக்குவிக்கும் பொருட்டு தனி நபர்கள் தங்களிடம் உள்ள வரலாற்றுக்குத் துணைபுரியத்தக்க ஆவணங்கள் தங்களிடம் இருக்குமானால் அவற்றைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஒப்படைக்கலாம். இதற்கு எந்தவிதமான முன்னேற்பாடுகளும் அவசியமில்லை.

ஆவணக்காப்பகம் அதன் ஆரம்ப காலம் முதல் சுமார் 500க்கும் மேற்பட்ட வெளியீடுகளை அவ்வப்போது வெளியிட்டு வந்திருக்கிறது. இவற்றுள் பழைய ஆவணங்களை அப்படியே அச்சிட்டு வெளியிடப்பட்டதே பெரும்பான்மையானவை. 1765ம் ஆண்டு வரையிலான ஆவணங்களை Reprint in extense — அதாவது, உள்ளது உள்ளபடியே என்ற அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளன. அதன்பிறகு அத்தகைய வெளியீடுகள் நிதி பற்றாக்குறையினால் வெளியிடப்படவில்லை. மூல ஆவணங்களை அச்சுப்படியில் பார்த்துக் குறிப்பெழுதுவது ஆராய்ச்சியாளர்களுக்கு எளிய நடைமுறை. ஆனால், 1765க்குப் பிறகு மூல ஆவணங்களையே ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துகிறார்கள். இதனால் ஆவணங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளன. இது தவிர்க்க இயலாது Selection from the Records என்றும் ஒருவகை வெளியீடுகள் வந்துள்ளன. இவைகள் பெரும்பாலும் மாவட்ட ஆவணங்கள், போர்ட் செயின்ட் ஜார்ஜ் ஆவணங்களில் காணும் முக்கிய பொருட்களை தனித்தனி தலைப்புகளில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட விவரச்சுவடி (District Gazeteers) தயாரிக்க ஒரு தனிப்பிரிவு அதன் பதிப்பாசிரியர் தலைமையில் இங்கே செயல்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர்த்து, காலாண்டு இதழாக "ஆவண அமுதம்" என்ற இதழ் கடந்த சில ஆண்டுகளாக வெளியிடப்படுகிறது. இதில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆவணத்துறைச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

சென்னையிலுள்ள தலைமை ஆவணக்காப்பகத்தைத் தவிர்த்து, மாவட்டங்களில் 1982 முதல் கிளை ஆவணக்காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டது. கோவை, கடலூர், மதுரை, சேலம், திருச்சி ஆகிய இடங்களில் இக்காப்பகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவைகள் மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலகங்களிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்று, நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பெற்று பாதுகாக்கின்றன. ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்குகின்றன. ஆவணக்காப்பகங்களின் பயன்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஆண்டுதோறும் "ஆவணக் காப்பக வார விழா" எல்லா ஆவணக் காப்பகங்களிலும் கொண்டாடப்படுகிறது.

ஆவணங்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு என்றாலும், பொதுமக்களும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வது மிகவும் அவசியம். நமக்கும் நம் சந்ததியினருக்கும் தொடர்பு தருவதே ஆவணங்கள்தான். இப்போது நமது நாகரிகம் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் அனைத்திற்கும் காகித வடிவில்தான் விளக்கம் கொடுத்து வைத்திருக்கிறோம். இவற்றை வரும் தலைமுறையினருக்கும் பாதுகாத்துக் கொடுக்கவேண்டியது நமது கடமை. இவற்றை இழந்தால் திரும்பப் பெற இயலாது.

"ஆவணம் காப்போம் அறிவை வளர்ப்போம்"

## எலும்புச் சிதைவு நோயைக் குணப்படுத்த ப்ளோரைடு சிகிச்சை!

**''ஆஸ்டியோபரோசிஸ்'' (Osteoporosis) என்னும் எலும்புச் சிதைவு நோயைக் குணப்படுத்தப் 'ப்ளோரைடு' மற்றும் கால்சியம் சிகிச்சை நன்கு பலனளிக்கிறது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.**

**டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தின் 'சௌத் வெஸ்டர்ன் மெடிக்கல் சென்ட்டர்' மருத்துவமனையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதுபற்றி அண்மையில் ஆய்வு நடத்தினர். தங்கள் ஆய்வு முடிவுகளை 'தி ஆன்னல்ஸ் ஆஃப் இன்டர்னல் மெடிசின்' என்னும் மருத்துவ இதழில் அவர்கள் வெளியிட்டுள்ளனர். சிதைந்த எலும்புக்குப் பதிலாக ஆரோக்கியமான புதிய எலும்பை வளரச் செய்யக்கூடிய சிகிச்சை முறையைத் தங்களால் கண்டுபிடிக்க முடியும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.**

**'ஆஸ்டியோபரோசிஸ்' என்னும் இந்த எலும்புச் சிதைவு நோய் வயதானவர்களையும், மாதவிடாய் நின்றுபோன பெண்களையுமே பெரும்பாலும் தாக்குகிறது. அமெரிக்காவில் மட்டும் இரண்டரை இலட்சம் பேர் இந்த நோயால் தாக்கப்படுகின்றனர். இந்த நோய் கண்டவர்களின் எலும்புகள் முதலில் சிறுத்துப் போய் பின்பு சிதைந்து போகும். இந்த நோய் முற்றினால், எலும்புகள் கட்டுக் குலைந்துபோய் மரணம் நேரிடக்கூடும்.**

**இந்த நோய் கண்டவர்களுக்குக் கால்சியம் அதிகமாகக் கொடுப்பதன் மூலமும், 'எல்சிடோன்' என்னும் மருந்தைக் கொடுப்பதன் மூலமும் சிகிச்சையளித்து வருகின்றனர். இந்த மருந்துகள் எலும்புச் சிதைவைத் தாமதப்படுத்துமே தவிர, அந்த நோயைத் தடுக்காது. ஆனால், இந்த நோயாளிகளுக்குப் 'ப்ளோரைடு' கொடுப்பதால் அவர்களுக்கு எலும்பு புதிதாகத் துளிர்க்கிறது. இவ்வாறு அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.**

# மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம்
# 1992-93-ம் நிதியாண்டில் நிறைவேற்றி
# முடிக்கப்பட்ட திட்டப் பணிகள்

## I ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

| வேலையின் விவரம் | எண்ணிக்கை | செலவின் மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல் | 40 | 8.426 |
| 2. சிறு பாலங்கள் கட்டுதல் | 3 | 1.300 |
| 3. கழிப்பறைகள் கட்டுதல் | 9 | 0.855 |
| 4. தார்ச் சாலைகள் அமைத்தல் | 3 | 8.540 |
| 5. மயானச் சாலை அமைத்தல் | 6 | 0.600 |
| 6. ஆதிதிராவிடர் காலனிக்கு அணுகு பாதை அமைத்தல் | 6 | 1.200 |

## II. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

| குறியீடு | சாதனை எண்ணிக்கை | கடன் (இலட்சத்தில்) | மானியம் (இலட்சத்தில்) | பயனடைந்தோர் விவரம் ஆ.தி. | இதரர் | பெண் |
|---|---|---|---|---|---|---|
| 360 | 382 | 16.00 | 11.498 | 208 | 174 | 124 |

## III. சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்

| பயிற்சி விவரம் | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 1. கை அச்சு கோர்த்தல் | 8 |
| 2. சிம்பிள் வயரிங் | 4 |
| 3. ரேடியோ டி.வி. மெக்கானிசம் | 1 |
| 4. கம்ப்யூட்டர் பயிற்சி | 1 |
| 5. ஸ்கிரீன் பிரிண்டிங் | 16 |
| மொத்தம் | 30 |

## IV. தேசிய சூளாத் திட்டம்

| குறியீடு விவரம் | | முடிக்கப்பட்டவை |
|---|---|---|
| சாதா சுளா | 175 | 175 |
| போர்டபிள் சுளா | 175 | 175 |

## V. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

| குறியீடு | சாதனை | நிதியுதவி (இலட்சத்தில்) |
|---|---|---|
| 25 | 25 | 1.250 |

## VI. பெண்கள், குழந்தைகள் நலம்

| திட்ட விவரம் | நிதி ஒதுக்கீடு | சாதனை |
|---|---|---|
| 1. மகளிர் சங்க கண்வீண் மதிப்பூதியம் தொகை | 10,800 | 10,800 |
| 2. மகளிர் பயிற்சி முகாம் நடத்துதல் | 1,200 | 1,200 |
| 3. குழந்தைகள் கண்காட்சி நடத்துதல் | 200 | 200 |
| 4. மகளிர் சுற்றுலா அழைத்துச் செல்லல் | 440 | 440 |
| 5. சமூகக்கல்வி மையங்களுக்கு, நாளிதழ் வாங்குதல் | 360 | 360 |
| மொத்தம் | 13,000 | 13,000 |

## VII. சிறுசேமிப்புத் திட்டம்

| குறியீடு | வசூல்செய்து முடிக்கப்பட்டது |
|---|---|
| 155 இலட்சங்கள் | 165 இலட்சங்கள் |



# தமிழ் நாட்டில் பாசன மேலாண்மை

பேராசிரியர் சி.என். பாலசுப்ரமணியன்,
இயக்குநர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்,
திருச்சிராப்பள்ளி.

உலகில் உள்ள பாசனம் பெறும் நிலப் பரப்பில் 25 கோடி எக்டேர் நிலப்பரப்பில் முக்கால் பகுதி வளர்ந்து வரும் 22 நாடுகளில் உள்ளது. இந்த நாடுகளில் உள்ள 100 கோடி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். இந்த நாடுகளின் மேம்பாட்டிற்கு மாபெரும் பாசனத் திட்டங்கள் அமைப்பது எவ்வளவு அவசியமோ, அதே அளவு பாசன வளர்ச்சிக்குத் தேவையான குறைந்த பட்ச தண்ணீரை உரிய நேரத்தில் உரிய இடத்தில் வழங்குவதன் மூலம் பயிர் விளைச்சலைப் பெருக்குவதே யாகும். இவ்வாறு பயிர்களுக்குத் தேவையான தண்ணீர் அளவை அறிய வேண்டுமென்றால், வேளாண்மை, உழவியல் பற்றிய விவரங்கள் தெரிய வேண்டும். தவிர வழங்கப்படும் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பை அறிய மழை, வானியல், நீரளவுகள் பற்றியும் அறிய வேண்டும். இத்தண்ணீரை உரிய காலத்தில், வழியில் எந்த இழப்பும் இன்றி வழங்க மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட கால்வாய்களும், பண்ணை மேம்பாட்டுக் கட்டுமானங்களும் தேவை. இவை எல்லாவற்றையும் விட விவசாயிகளின் கூட்டு முயற்சியும், அக்கூட்டு முயற்சி உருவாக ஏதுவான சமூக-பொருளாதாரச் சூழ் நிலையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்று பல்வேறு அறிவியல் பிரிவுகள் ஒருங்கிணைந்த புதிய அறிவியல் செயல்பாடாகப் பாசன மேலாண்மை கடந்த 10 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது.

வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், அதன் மூலம் கிராமப்புற வருவாயை உயர்த்தவும், பாசன மேலாண்மைத் தொழில் - நுட்பங்களில் பயிற்சி கொடுப்பதற்காக மத்திய அரசின் நீர்வளத்துறை ''நீர்வள மேலாண்மை மற்றும் பயிற்சி''க்கான திட்டத்தை 1983-ஆம் ஆண்டில் தீட்டியது. இத்திட்டத்திற்கு அமெரிக்க அரசின் பன்னாட்டு வளர்ச்சிக்காக நிதி உதவி நிறுவனம் (USAID) உதவியளிக்க முன் வந்தது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களில் 11 பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டன.

தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், தமிழக அரசின் தன்னாட்சி நிறுவனமாக 1.4.84-இல் தொடங்கப்பட்டது. இது பாசனத்துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை போன்ற வேளாண்மை வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் தமிழகத்தின் விவசாயிகளுக்கும் பாசன மேலாண்மையில் பயிற்சி அளிக்கிறது. விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பாசன மேலாண்மை நுட்பங்களைச் செயல்படுத்த வகை செய்யும் புதிய செயல் திட்டங்களை நிறைவேற்றுகிறது. வீடியோ, புகைப்படங்கள், புத்தகங்கள் மற்றும் சிறு வெளியீடுகள் வாயிலாகவும் பாசன மேலாண்மைத் தொழில்நுட்பங்களைப் பரவலாக யாவரும் அறிந்து கொள்ள உதவும் பணியில் ஈடுபடுகிறது.

பாசனத்துறையில் அனுபவம் வாய்ந்த தலைமைப் பொறியாளர் ஒருவரை இயக்குநராகக் கொண்டு இந்நிலையம் செயல்படுகிறது. பாசனத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகிய வற்றிலிருந்து அனுபவம் வாய்ந்த வல்லு நர்கள் கொண்ட பேராசிரியர் குழு, இயக்குநரின் கீழ் திறம்படப் பணியாற்று கிறது. இவர்களைத் தவிர, அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா மேலாண்மை நிலையம் போன்றவற்றிலிருந்து பாசனம் மற்றும் வேளாண்மைத் துறை வல்லுநர் களின் உதவியையும் அவ்வப்போது இந்நிலையம் பெற்றுக் கொள்கிறது.

**வளாகம்**

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி நகருக்கு 16 கி.மீ. கிழக்கே துவாக் குடி கிராமத்தில் இந்நிலையம் அமைந் துள்ளது. திருச்சிராப்பள்ளி நகரம் நாட்டின் மற்ற நகரங்களுடன் ரயில், சாலை மற்றும் விமானப் போக்குவரத் துக்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. வட்டாரப் பொறியியல் கல்லூரியிட மிருந்து பெறப்பட்ட 30 ஏக்கர் நிலம் மற்றும் அதற்கு அடுத்து உள்ள பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலம் ஆகியவற்றில் பல்வேறு வசதி களைக் கொண்ட இந்நிலைய வளாகம் ''காவிரி வளாகம்'' என அழைக்கப் பெற்று நிறுவப் பெற்றது. இவ்வளாகத் தில் பயிற்சிக் கூடம், ஆய்வுக் கூடம், நூலகம், கலை அரங்கம், வானிலை ஆய்வு நிலையம், கணிப்பொறி மையம், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் அலு வலர் குடியிருப்பு முதலியன உள்ளன.

**பயிற்சிக் கூடம்**

இக்கூடத்தில் 10 பயிற்சி அறைகள் உள்ளன. 48 பேர் அமரும் வசதி படைத்த ஒலி ஒளிக் காட்சி அரங்கும் உள்ளது. பயிற்சிகள் திறம்பட நடத்த உதவும் வீடியோ, திரைப்படம் போன்ற ஒலி ஒளிக் காட்சிகள் காட்டும் கருவிகள் எல்லாப் பயிற்சி அறைகளிலும் உள்ளன.

**ஆய்வுக்கூடம்**

**மண் வள ஆய்வுக் கூடம்**

பாசன மேலாண் தொடர்பான நவீனக் கருவிகள் கொண்ட மண்வள ஆய்வு நிலையம் ஒன்று நிறுவப் பெற்று உள்ளது. இக் கூடத்தில் உள்ள கருவி களில் பெரும்பாலானவை அமெரிக்க நிதி உதவியில் வெளி நாட்டிலிருந்து பெற்ற வையாகும்.

**பொறியியல் ஆய்வுக்கூடம்**

பொறியியல் ஆய்வுக் கூடத்தில் நில மட்டம் அளக்கும் கருவிகள், நீரளவுகள் எடுக்கும் கருவிகள் முதலியன உள்ளன. நீரளவுக் கருவிகளைப் பயன்படுத்தி அளவு எடுக்க வசதியாக மாதிரிக் கால் வாய்களும் உள்ளன.

**வானிலை ஆய்வு நிலையம்**

தட்ப வெப்ப நிலைகள், மழையளவு போன்ற வானிலை விவரங்களைத் தெரிந்து கொள்ள உதவும் கருவிகள் கொண்ட ஒரு வானிலை ஆய்வு நிலையம் அமைக்கப் பெற்றுள்ளது. நாள்தோறும் வானிலை விவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன.

**நூலகம்**

இந்நிலையத்தின் நூலகத்தில் பாசன மேலாண்மை தொடர்பான ஏராளமான நூல்கள் உள்ளன. பாசன மேலாண்மை சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகளும், புத்தகங்களும் இந்நூல கத்தில் வரவழைக்கப்படுகின்றன. இந் நூலகத்தில் பாசன மேலாண்மை பற் றிய ''வீடியோ'' 'படங்கள் பிரிவு ஒன்றும் உள்ளது.

**கணிப்பொறி மையம்**

இங்குள்ள கணிப்பொறி மையத்தின் பாசன மேலாண்மைக்குக் கணிப் பொறியைப் பயன்படுத்துவது பற்றி விளக்கும் பாடத் திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. அனைத்துத் துறை அலு வலர்களுக்கும் இப்படத் திட்டத்தின் அடிப்படையில் சிறப்புப் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. தவிர, அனைத்துப் பயிற்சி வகுப்புகளிலும், ''பாசன மேலாண்மையில் கணிப் பொறியில் பங்கு'' என்பது பற்றி விளக்கப்படு கிறது.

**புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா கலையரங்கம்**

தேசிய மற்றும் மாநில அளவில் கருத்

## உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி

அமெரிக்காவில் இந்த ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி, பல விதங்களில் முதன்மை யானதாகும்.

அமெரிக்காவில் உலகக் கோப்பைக் கால் பந்துப் போட்டி நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கான டிக்கெட்கள், இந்தப் போட்டி நடக்க இருப்பதற்குப் பல மாதங்கள் முன்பாகவே விற்றுத் தீர்ந்து போனதும், வரலாற்றிலேயே இது தான் முதல் தடவையாகும். இப்போட்டியின் சில பந்தயங்கள் உள் அரங்கங்களில் (இன்டோர் ஸ்டேடியம்) நடக்கவுள்ளன. இவ்வாறு நடக்க இருப்பதும் இதுவே முதல் தடவையாகும்.

இத்தகவல்களை வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, மற்றும் கரீபியன் நாடுகள் கால் பந்துக் கூட்டமைப்பின் பிரதிநிதி ஸ்காட் கிளேபா என்பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தகவல் நிலையம் சென்னையில் ஏற்பாடு செய்த "தொலைத் தொடர்பு கருத்தரங்கு" ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார். சென்னை யிலிருந்து கால்பந்தாட்ட வல்லுநர்கள் கேட்ட கேள்விகளுக்கு, வாஷிங்டனில் இருந்தபடி அவர் பதிலளித்தார்.

தரங்குகள், பணியரங்கங்கள், விவசாயிகள் கருத்தரங்குகள் நடத்துவதற்கு வசதியாக ரூ.45 இலட்சம் செலவில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா கலையரங்கம் 29.5.93 அன்று மாண்புமிகு தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை, தொழில் துறை மற்றும் கல்வித் துறை அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

**பயிற்சிகள்**

இந்நிலையத்தில் வேளாண்மை வளர்ச்சியில் தொடர்பு கொண்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது புதிய பாசன மேலாண்மை நுட்பங்களையும் அவற்றைச் செயல்படுத்தும் உத்திகளும் விளக்கப்படுகின்றன. வயல்களுக்கு அழைத்துச் சென்று, விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளச் செய்து, மற்ற நுட்பங்களைச் செயல்படுத்தும் விதம் பற்றி நேர்முகப் பயிற்சி அளிப்பது இந்நிலையத்தின் சிறப்பாகும்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி தேசிய மற்றும் சர்வதேச வல்லுநர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. விவசாயிகளுக்கு அவர்கள் வாழும் கிராமத்திலேயே சென்று செயல் விளக்க முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. களப் பணியாளர்களுக்கும் திருவாரூரில் உள்ள செயல் திட்டப் பிரிவு வளாகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தங்கும் விடுதி**

120 பயிற்சியாளர்கள் தங்கும் வகையில் படுக்கை வசதிகள் மற்றும் உணவு விடுதி கொண்ட பயிற்சியாளர் விடுதி ஒன்றும் உள்ளது.

**செயல் திட்டம்**

காவிரிப் பாசனப் பகுதியின் நடுவில் உள்ள திருவாரூரிலிருந்து இயங்கும் செயல் திட்டப் பிரிவு, இந்நிலையத்தின் முக்கிய அங்கமாகும். இணை இயக்குநர் ஒருவரின் கீழ் பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் குழு ஒன்று செயல்திட்டப் பணியில் ஈடுபட்டுள்ளது. பாசன மேலாண்மை நுட்பங்களையும், புதிய உத்திகளையும் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவதே இப்பிரிவின் பணியாகும். பாசனதாரர் சங்கம் அமைத்து, ''குடிமராமத்து'' முறையை மீண்டும் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடி அமைப்பை உருவாக்கியது செயல் திட்டப் பிரிவின் சாதனை ஆகும்.



கடமை அடிக்கல்; உரிமை அதன் மீது எழுப்புகின்ற கட்டடம்.

— மூதறிஞர் இராஜாஜி

**தொழில் நுட்ப விரிவாக்கப் பணிகள்**

பாசன மேலாண்மைக் கருத்துக்களை மக்களிடையே பரப்பும் பணியில் 'வீடியோ' தயாரிப்பு மற்றும் நூல் வெயியீட்டுப் பிரிவு ஈடுபட்டுள்ளது. கணிப்பொறி உதவியுடன் அச்சிடும் கருவி, 'வீடியோ' தயாரிப்புச் சாதனங்கள், புகைப்படக் கண்காட்சி அமைப்புகள் போன்றவை இப்பிரிவில் உள்ளன. பாசனம் பற்றிய வீடியோ படங்கள், நூல்கள் மற்றும் சிறு வெளியீடுகள் போன்றவை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்படுகின்றன.

**பிற பணிகள்:**

உலக வங்கி உதவியுடன் செயல்படும் கீழ்கண்ட திட்டங்களில் பயிற்சி நடத்தும் பொறுப்பை இந்நிலையத்திடம் உலக வங்கி ஒப்படைத்துள்ளது.

1. பெரியாறு - வைகை மேம்பாட்டுத் திட்டம்
2. தேசிய நீர் மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையிலுள்ள சர்வதேசப் பாசன மேலாண்மை நிலையம் ஆகியவற்றுடன் கூட்டாகப் பாசன மேலாண்மை நுட்பங்களில் ஆராய்ச்சிப் பணிகளையும் இந்நிலையம் மேற்கொண்டுள்ளது.

**மீண்டும் ''குடிமராமத்து'':**

கிராமங்களில் ஏற்கெனவே கிராம சங்கங்கள் பல பொது நோக்கங்களைக் கொண்டு முறைப்படுத்தப்படாமல் வாய்மொழி நெறிகளைப் பின்பற்றிச் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களைப் பாசன நோக்குடன் முறைப்படுத்தி நெறிகளை நியமித்து ''கிராமப் பாசனதாரர் சங்கங்களாக'' உருவாக்கும் பணியில் இந்நிலையம் தனது செயல் திட்டப் பிரிவினை ஈடுபடுத்தியது. நாகை காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்ட இந்நிலையத்தின் செயல்திட்டப் பிரிவு, காவிரிப் பாசனக் கடைமடைப் பகுதியில் உள்ள சேத்தியாபுரம் கால்வாய், கங்களாஞ்சேரி கால்வாய் என்ற இரு கால்வாய்களின பாசனப் பகுதியின் மேம்பாடுகளின் ஆய்வுகளை மேற்கொண்டது. அங்கு விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. வேளாண் உற்பத்தியும் அதிகரித்தது. தொடர்ந்து இப்பணிகள் அருகில் உள்ள மற்ற கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் உள்ள பாசனக் கால்வாய்கள் சரிவரப் பராமரிக்கப் படாததால், தண்ணீர் பாய்வது சிரமமாக இருந்தது. இது குறித்து விவசாயிகளிடம் தங்கள் கிராமத்தில் உள்ள பாசனக் கால்வாய்களைத் தாங்களே பராமரிக்கும் ''குடிமராமத்து'' முறையைச் சிறு மாற்றங்களுடன் மீண்டும் உருவாக்க ஒரு திட்டம் வழங்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு கிராமத்திலும் பாசனதாரர் சங்கம் அமைக்கப்படும். கிராமத்தில் குறிப்பிட்ட வாய்க்கால் பாசனதாரர் அனைவரும் சங்கத்தின் உறுப்பினர்கள். அவர்கள் அனைவரும் தங்கள் நிலப் பரப்பிற்கு ஏற்ப ஏக்கருக்கு ரூ.100/- வீதம் பங்குத் தொகை செலுத்தவேண்டும். இவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் நிரந்தர வைப்பு நிதியில் வங்கியில் போடப்படும். பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையமும் ஏக்கருக்கு ரூ.100 வீதம் இந்நிதிக்கு நன்கொடை வழங்கியது. இவ்வாறு சேர்ந்த நிதியில் 75 சதவீதம் ஒரு வைப்பு நிதியாகவும், இதிலிருந்து வரும் வட்டி ஆண்டுதோறும் கால்வாய் பராமரிப்புப் பணிகளுக்கு மட்டும் பயன்படுத்தும் வகையில் விதிகள் அமைக்கப்பட்டன. மீதமுள்ள 25 சதவீதத்திலிருந்து கிடைக்கும் வட்டி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை முதல் வைப்பு நிதியில் சேர்க்கப்படும். இதனால் முதல் வைப்பு நிதி வளர்வதோடு, ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டியும் கூடுகிறது.

''சலிப்பேரி'' கிராமம் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல்கிராமம்.

சலிப்பேரியின் வழி காட்டுதலால் இதுவரை 9 சங்கங்கள் அமைக்கப்பட்டு மொத்தம் 2,770 ஏக்கர் பரப்பிற்கு ரூ.5,54,000 (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) வைப்பு நிதிகளாக வைக்கப்பட்டுள்ளது. இதனால் கால்வாய்களை எவ்விதச் சிரமமுமின்றி விவசாயிகள் சிறப்பாகப் பராமரிக் கின்றனர். அவர்களுக்குத் தண்ணீரும் இடையூறின்றிக் கிடைக்கிறது. நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் இப்படி உருவான திட்டத்தைக் கண்டபின் தற் போது அரசே முன்வந்து இந்த ஆண்டு ரூ.30 இலட்சத்தை இதுபோன்று தமிழ் நாட்டின் பாசனப் பகுதிகளில் உருவாகும் சங்கங்களுக்கு அரசின் பங்கு நிதியாகத் தர கொள்கை அளவில் ஏற்றுக் கொள் கிறது. தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், இதுபோன்ற சங்கம் அமைப்பது பற்றி விவசாயிகளுக்கு எடுத் துக் கூறி வருகிறது.

**நவீன தகவல் தொடர்பு சாதனம்:**

காவிரி டெல்டாப் பகுதியில் பொதுப் பணித்துறை தனது கால்வாய் தொலை பேசிச் சாதனத்தைச் செய்தித் தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்தி வந்தது. இச் சாதனமானது வெள்ளம் மற்றும் புயல் நேரங்களில் அநேகமாகப் பழுதேற்பட்டு, செய்திகளை விரைவாக அனுப்புவது மிக வும் கடினமாகியது. இக்குறையை நீக்க, பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், சுமார் ஒரு கோடி செலவில் அதிக அலை வரிசை தொலைத் தொடர்புச் சாதனத் தைக் காவிரி டெல்டாப் பகுதியில் 133 இடங்களில் நிறுவியுள்ளது. இதனால் வெள்ளம் மற்றும் புயல் வரும் நேரங் களில் தங்கு தடையின்றிச் செய்திகளை அனுப்ப முடிகிறது. தவிர, பயிரிடும் காலத்தில் தண்ணீர் அனைத்துப் பகுதி களுக்கும் சென்று பாய்வதைக் கண் காணிக்க முடிவதால், உடனுக்குடன் தண்ணீர் வழங்கலை நேர் செய்ய முடிகிறது.

**வானொலி வேளாண்மைப் பள்ளி:**

**தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையமும், திருச்சி அகில இந்திய வானொலியும் இணைந்து விவசாயிகள் பயன்பெறும்வண்ணம், 'பாசன மேலாண்மை' என்ற தலைப்பில் 13 பாடங்களை நடத்தியது. பயிரின் நீர்த்தேவை, நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு நீர் நிர்வாகம், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள், வறட்சிக் காலங்களில் நீர் மேலாண்மை, நிலத்தடி நீர் நிர்வாகம் போன்ற பாசன மேலாண்மைத் தொழில் நுட்பக் கருத்துக்கள் பயனுள்ள வகையில் எடுத்துக் கூறப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் குறிப்பாக திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, நாகை காயிதேமில்லத் மாவட்ட விவசாயிகள் சுமார் 1800 பேர் வானொலி வேளாண்மைப் பள்ளியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.**

தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை ஐரோப்பியப் பொருளாதார சமூகம் நிதியுதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஏரிகளைப் பழுது பார்த்து கால்வாய்களைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏரிகளைப் பராமரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தில் ஒவ்வொரு ஏரியிலும் ஏரிப் பாசனதாரர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. பாசன சங்க உறுப்பினர்களுக்கு ஏரிகள் பராமரிப்பு, நீர்ப் பங்கீடு, சங்கத்தின் நிர்வாகிகளுக்காக மாநில அளவில் மேலாண்மைப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏரிப் பாசனதாரர் சங்கத்திற்குக் குடிமராமத்து நிதி ஏற் படுத்த இதுவரை 3 சங்கத்திற்கு 64,300/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழில் வெளியீடுகள்:

பாசன மேலாண்மைத் தொழில் நுட்பம் பரவிட, ஆங்கிலத்திலும், தமிழி லும் புத்தகங்கள் சிறு வெளியீடுகள் ஆகியவற்றை இந்நிலையமே அச்சிட்டு வெளியிடுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வளர்ச்சிக்கான நிதியுதவி நிறுவனம் ரூபாய் 3 கோடி கடனாகவும், ரூபாய் 2 கோடி மானியமாகவும், மேலும் ரூபாய் 3 கோடி அந்நியச் செலாவணி மானியமாகவும் இந்நிலையத்தை உரு வாக்குவதற்கு உதவியது. தமிழக அரசு தனது பங்காக, திட்டக் காலம் முடிய ரூபாய் 4 கோடி முதலீடு செய்தது. அதன் பின் ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்குகிறது.

தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் ''நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம்'' ஒன்றை சுமார் ரூபாய் 1400 கோடி செலவில் 1.4.94 முதல் 7 ஆண்டுகளுக்குச் செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்கள் அனைத்தும் விரைவில் ஒரு துறையின் கீழ் வரும். நீர்வளங்களைப் பங்கிடுவது மற்றும் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுவது போன்றவற்றில் ஒட்டு மொத்தமான நோக்குடன் திட்டங்கள் தீட்டப்படும். பாசன மேலாண்மை, பாசன அமைப்பு களை இயக்குவதிலும் பேணுவதிலும் புதிய அறிவியல் நோக்கு, பாசன அமைப் பின் நிர்வாகத்தில் விவசாயிகளுக்குப் பங்கு போன்றவை இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும். இத்திட்டத்தில் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 100-க்கு மேற்பட்ட பயிற்சிகளைப் பல்வேறு அலுவலர்களுக் கும் விவசாயிகளுக்கும் அளிக்கும் பொறுப்பு இந்நிலையத்தைச் சார்ந்தது. அதிலும் மிக முக்கியமாகப் பாசனதாரர் சங்கம் அமைப்பதிலும் அவற்றிற்கான விதிமுறைகளை உருவாக்குவதிலும் பாசனதாரர் சங்க நிர்வாகிகளுக்கும் ஏனையோருக்கும் பயிற்சி அளிப்பதிலும் இந்நிலையம் முழுமையாக ஈடுபடும். இதைத் தவிர பாசன மேலாண்மை தொடர்பான ''கள'' ஆராய்ச்சிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற் காக ரூபாய் 13 கோடி செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு உலக வங்கி ஒப்புதல் பெறவுள்ளது.

1984-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட இந்நிலையம் 1992-93 வரை 3,700 அலுவலர்களுக்கும், 1260 களப் பணியாளர்களுக்கும், 10576 விவசாயி களுக்கும் பயிற்சி அளித்துள்ளது. பாசன மேலாண்மைப் பயிற்சியில் பிற நிலையங்களுக்கு முன்னோடியாக இந் நிலையம் செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து இதுபோன்ற பயிற்சிகளிலும் வேளாண் பெருமக்களுடன் இணைந்து செயல்படும் திட்டங்களிலும் இந்நிலையம் உற்சாகத்துடன் ஈடுபடும். இந்தப் பயிற்சி நிலையம் மாநில, தேசிய அளவிலான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடல்லாமல், அகில உலக அளவில் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படவேண்டும் என்று இந்நிலையத் தின் ஆட்சி மன்றக் குழுத் தலைவரும், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறைச் செயலாளருமான திரு. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

பிரார்த்தனை

**◉ நமது தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் இறைவன், நமது பந்த பாசங்களை அறுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்க.**

**—சுவாமி விவேகானந்தர்**

# வள்ளல் பச்சையப்பர்



## வள்ளல் பச்சையப்பர் வாழ்க்கை ஏட்டின் சில பக்கங்கள்:

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றார் ஔவையார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றார் வள்ளுவர்.

அழியாச் செல்வமான கல்விக்குத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, அழியாப் புகழைப் பெற்றவர்தான், வள்ளல் பச்சையப்பர்

பச்சையப்பர், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், பெரியபாளையத்தில், 1754-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர், காஞ்சிபுரம் விசுவநாத முதலியார், பூச்சி அம்மாள், பச்சையப்பர் பிறப்பதற்கு முன்பே அவரது தந்தை காலமானார். அப்போது அவர் குடும்பம் பெரும் இன்னலுக்குள்ளானது. தாய், ஐந்தே வயது நிரம்பிய பச்சையப்பரையும், பச்சையப்பரின் இரு சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு சென்னையை அடைந்தார்.

சென்னையில் சாமி மேஸ்திரி தெருவிலுள்ள ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். அந்தக் காலத்தில், ஆங்கில வணிகர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தவர் நாராயணப்பிள்ளை. அவரிடம் அடைக்கலம் புகுந்தார் பச்சையப்பரின் தாயார். நாராயணப்பிள்ளை நல்லவர். பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் சிந்தனை உள்ளவர். பச்சையப்பர் கணிதம், ஆங்கிலம், கடிதத் தொடர்பு முதலானவற்றில் தக்க பயிற்சி பெற நாராயணப்பிள்ளை பெரிதும் உதவி புரிந்தார்.

பச்சையப்பர் கல்வியில் கருத்தூன்றிப் படித்தார். ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி பெற்றார். முதலில் அவர், ஏற்றுமதி இறக்குமதித் தொழிலில் ஈடுபட்டு, அதில் தம் திறமையைக் காட்டினார். பிறகு நிக்கோலஸ் என்னும் வணிகருக்கு மொழிபெயர்ப்பாளராக அமர்த்தப் பட்டார். கடின உழைப்பு அவரை மேலும் மேலும் உயர்த்தியது.

பச்சையப்பர் கடவுள் பக்தி உள்ளவர். இளம் வயதிலேயே அவர் இறை அன்பரானார். 1774-ஆம் ஆண்டு தமது இருபதாவது வயதில், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருமண மண்டம் கட்ட நன்கொடை வழங்கினார்.

1776-ஆம் ஆண்டில், செங்கல்பட்டு மாவட்டத்தில், கடன் கொடுக்கல் வாங்கல் முதலான கணக்கு வழக்குகளில் வல்லவராக விளங்கினார்.

கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் பல கிராமங்கள் நிலவரித் தொகை செலுத்த வேண்டியிருந்தது. அதைத் தான் செலுத்துவதாகக் கூறி, அதைச் செயல் படுத்தியும் காட்டினார்.

ஆங்கில வணிகர்கள், கர்நாட நவாபுகள் இரு தர்ப்பினருக்கும் முகவராக இருந்து, தம் திறமையை வெளிப் படுத்தினார்.

பச்சையப்பரின் திறமையை ஆங்கிலேயர் நன்கறிந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குழு உறுப்பினரான ஆர்.ஜே. சலிவன் என்பவருக்கு, முதுநிலை மொழிபெயர்ப்பாளராக இவர் நியமிக்கப்பட்டார்.

1783-ஆம் ஆண்டு, சல்லிவன் படைகளுக்குப் பொருள்கள் வழங்கும் பணியில், அவருக்கு உதவியாளராகப் பொறுப்பேற்றார் பச்சையப்பர்.

எந்த வேலையாக இருந்தாலும், முழு மனதுடன், ஏற்றுத் திறம்படச் செயலாற்றுவதை இயல்பாகவே பெற்றிருந்தார் பச்சையப்பர். சுருங்கச் சொன்னால், ஆங்கிலேயர்களே பாராட்டும் அளவுக்கு அவரது செயல்திறன் இருந்தது.

நாளடைவில், அவர் தஞ்சை மன்னரின் முகவராகப் பணியாற்றினார். அத்துடன் கர்நாடக நவாபின் ஆட்சிக்குட்பட்ட தென்பகுதியிலிருந்த பாளையக்காரர்களுக்கு கணக்கு வழக்குத் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுப் பெரும்

புகழும் பெற்றார்; அத்துடன் பெருஞ் செல்வமும் சேர்த்தார்.

இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட பணிகளில் தம் அறிவையும், செயல் திறனையும் காட்டிக் கடுமையாக உழைத்த தன் காரணமாக, அந்தக் காலத்திலேயே சுமார் 20 இலட்சம் ரூபாய் வரை சேர்த்தார். சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் வீடு ஒன்றைக் கட்டினார்.

1787-ஆம் ஆண்டு, தஞ்சை வரு வாய்த்துறை ஆணையர் வில்லியம் பெட்ரி என்பவருக்கு பணித்துணைவராக இவர் நியமிக்கப்பட்டார். பச்சையப்பரது திறமை, செல்வாக்கு கண்ட ஆங்கிலேயர் பொறாமையால், அவருக்கெதிராக அரசிடம் புகார் தெரிவித்தனர். ஆனால், விசாரணைக்குப் பிறகு, பச்சையப்பர் நிரபராதி என்று தீர்ப்பாகியது; பச்சையப்பரின் உண்மையான தொண்டு வெற்றி பெற்றது.

பச்சையப்பர் இறை அன்பர் என்று பார்த்தோம். இறைபணி செய்வதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார் அவர்.

1791-ஆம் ஆண்டு சென்னை திரும்பினார். சிதம்பரம் சபாநாயகர் கோயிலுக்கு அறக்கட்டளை அமைத்தார் பச்சையப்பர். கோயிலின் கருவறை தூய்மைப்படுத்தப்பட்டது. கீழைக்கோபுர மேற்பகுதி புதுப்பிக்கப்பட்டது. கடவுள் வழிபாட்டுக்கு அன்றாடம் பயன்படும் வகையில் வெள்ளிப் பாத்திரங்களையும் வழங்கினார். ஆனித் திருமஞ்சனத் திருவிழா தொடர்ந்து நடைபெறவும் வழி வகை செய்தார். கோபுரத்தின் நுழை வாயிலில் பச்சையப்பரின் திருவுருவமும், அவருடைய சகோதரி சுப்பம்மாளின் திருவுருவமும் செதுக்கப்பட்டதை இன்றும் பார்க்கலாம்.

1792-இல், மீண்டும் தஞ்சை திரும்பினார் பச்சையப்பர். வழக்கமாகத் தம் பணியைக் கவனித்ததுடன், வங்கிப் பணியையும் கவனித்தார். அந்தச் சமயம் தான் அவருக்குத் திருமணம் நடந்தது. தமது சகோதரியின் மகளை அவர் மணந்து கொண்டார். மகப்பேறில்லாத தால், மறுமணம் செய்து கொண்டார். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானார்.

அவரது அறப்பணி மேலும் மேலும் தொடர்ந்தது... காலப்போக்கில், அவர் உடல் உருக்குலைந்தது; கும்பகோணம் சென்று சிகிச்சை பெற்றார்.

அந்த நிலையிலும் அவர், தாம் முன்பு எண்ணியிருந்தவாறு சத்திரம் ஒன்றைக் கட்டினார் என்று அறிகிறபோது,

**★ இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மாயிராதே; ஒரு சிறு மெழுகுவர்த்தியையாவது தேட முயற்சி செய்; உன் வாழ்வு ஒளி மயமானதாகும்.**

**—கன்ஃபூசியஸ்**

''அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்''

என்னும் பாரதியின் பாட்டே நினைவுக்கு வருகிறது.

பச்சையப்பரின் உடல்நிலை மேலும் குன்றியது. இசைமேதை தியாகராசர் முக்தி அடைந்த திருவையாறு எனும் திருத்தலத்தில், 1794-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள், வரையாது வழங்கிய வள்ளல் பச்சையப்பர் இயற்கை எய்தினார்.

அதற்கு முன்னதாக, அதாவது 1794-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 22-ஆம் நாள், கல்விப் பணிக்காகத் தாம் என்னென்ன செய்ய வேண்டும் என்று எண்ணினாரோ, அவற்றையெல்லாம் உயிலாக எழுதி வைத்தார்.

ஆம். அந்நாள் அவர் வாழ்க்கையின் பொன்னாள் ஆகும். உயிர் பிரிவதற்கு முன்பு, தம் உயிர் மூச்சான கொள்கைகளை, இலட்சியங்களை வகுத்துத் தொகுத்துக் கூறினார். அவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகும் சிறப்பினைப் பெற்றன.



தாம் உயிர் துறப்பதற்கு முன்பாக அதாவது, மார்ச் திங்கள் 24-ஆம் நாள், தம்மை ஆளாக்கிய நாராயணப் பிள்ளைக்கு ஒரு கடிதம் எழுதினார், பச்சையப்பர்.

அந்தக் கடிதத்தில் -

தன் முடிவு நெருங்குகிறது என்றும், தன் விவகாரங்களை நல்லபடி முடித்துத் தருமாறும், ஒவ்வொரு காசும் உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்றும் உருக்கமாக எழுதியிருந்தார்.

தனக்கு ஆண் பிள்ளை இல்லை என்கிற குறை அவர் மனத்தில் இருந்திருக்க வேண்டும். அதனால், தாம் பாடுபட்டுத் தேடிச் சேர்த்த செல்வ மனைத்தையும் அறப்பணிகளுக்கே எழுதி வைத்தார்.

- திருக்கோயில்களுக்கு,
- சமயச் சார்பான கட்டடங்கள் கட்டுவதற்கு,
- கொடைப் பணிகளுக்கு,
- ஏழை எளிய மக்களுக்கு,
- வடமொழிக் கல்விக் கூடங்களுக்கு,
- பொதுவான அமைப்புகளுக்கு

— இப்படிப் பலவகையில், அவரது செல்வங்கள் பயன்பட, அவர் எழுதி வைத்த உயில் பெரிதும் உதவியது.

1841-இல், உச்ச நீதிமன்றம் ஒரு திட்டத்தை உருவாக்கியது. அதன் விளைவாக, எல்பின்ஸ்டன் பிரபுவின் அரசு விதித்த விதிமுறைகளுக்கு ஏற்ப, பச்சையப்பரின் அறக்கட்டளைகள் அனைத்தையும் நிர்வகிக்க, அறங்காவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1842-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் சென்னையில், பச்சையப்பர் பெயரால் மையப் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவப் பட்டது.

1865-ஆம் ஆண்டு, இப்பள்ளி, கோவிந்த நாயக்கர் தொடக்கப்பள்ளி என்னும் பெயரில் அமைந்தது. அப்போது, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியின் முதல் முதல்வராக இருந்து பணியாற்றியவர் திரு பாசில்லவரி என்பவர்.

## “ஆசிரியர்களும் மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டும்”

— மாண்புமிகு முதல்வர்

பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவனுடைய சாதனைகளை வைத்து அவனை மதிப்பிட்டு விடமுடியாது. சிறந்த மாணவர்கள் அனைவரும் பிற்கால வாழ்க்கையில் சிறந்த குடிமகனாகத் திகழ்ந்தது கிடையாது. சிறந்த மாணவர்களாக அல்லாதவர்கள் பிற்காலத்தில் புகழ்மிக்க, மிகவும் மதிக்கத்தக்க குடிமக்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே, பள்ளியை விட்டோ கல்லூரியை விட்டோ செல்லும்போது பெறும் சான்றிதழ்களும் பட்டங்களும், வாழ்நாள் முழுமைக்குமான சான்றிதழ் அல்ல. இது பாடத் திட்டத்திற்கான மதிப்பீடே ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டியது, அத்தியாவசியமாகிறது. விஞ்ஞான முன்னேற்றம் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், நம் அறிவு விருத்தியடைந்து கொண்டேயிருப்பதாலும் தொடர்கல்வி மேலும் தேவையாகிறது. மனித சக்திகள் பலவகைப்பட்டவை. அவை சமூகத்தில் மதிப்பு வாய்ந்தவை. ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட திறமைகளைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். ஒன்றையொன்று சரி செய்கின்ற, ஊக்குவிக்கின்ற விதிகளையும், நடைமுறைகளையும் கலந்து அளிக்கக்கூடிய கல்வியையும் நடைமுறைச் சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளையும் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நாம் செய்யலாம்.

– ‘புரட்சித்தலைவியின் முழக்கம்’ தொகுதி-1லிருந்து

*1880*-ஆம் ஆண்டு, டி.எம்.குரிக்ஷானக், முதல்வராயிருந்தபோது, இப்பள்ளி இரண்டாம் நிலைக் கல்லூரி எனும் தகுதி பெற்றது.

*1888*-ஆம் ஆண்டு, திரு ஜான் ஆதம் முதல்வராயிருந்தபோது, இக்கல்லூரி முதனிலைக் கல்லூரி எனும் தகுதிக்கு உயர்ந்தது.

*1882*-ஆம் ஆண்டு, பச்சையப்பன் கல்லூரியின் பொன் விழா நடந்தது. மேதகு வைசிராய் மார்க்விஸ் ஆம்ப்லாண்ட் ஸ்டோன் தலைமையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

*1902*-ஆம் ஆண்டு, இக்கல்லூரியின் வைர விழா கொண்டாடப்பட்டது.

முதலில் இக்கல்லூரியின் விடுதி, வாடகைக் கட்டடமொன்றில் இயங்கி வந்தது. *1914*-இல், சேத்துப்பட்டில் ஆளுநர் பென்ட்லன்ட் பிரபு அவர்கள் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

*1923*-இல், இக்கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக மாறியது.

மாணவர் தொகை பெருகப் பெருகப் பழைய கட்டடம் போதுமானதாக இல்லை. ஆகவே, *1939*-ஆம் ஆண்டு, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரின் முயற்சியால், சென்னை சேத்துப்பட்டில் புதிய கட்டடத்திற்கான வேலைகள் தொடங்கப்பட்டது.

*1942*-இல், பச்சையப்பர் அறக் கட்டளையின் நூற்றாண்டு விழா நடந்தது.

விலங்கியல் பட்ட மேல் வகுப்புகளுக்கான தனிக் கட்டடத்தை, துணை வேந்தர் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள் திறந்து வைத்தார்.

*1962*-இல் வேதியியல் பட்ட மேல் வகுப்புகளுக்கான தனிக் கட்டடத்தை, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் திறந்து வைத்தார்.

*5.1.63* அன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள், வள்ளல் பச்சையப்பரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

*1963*-இல், பகல் நேர மாணவர்க்கான மனமகிழ் மையத்தை, அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைத்தார்.

*1967*-இல் பட்ட மேல் வகுப்புகளுக்கான நூலகம் ஒன்றை,அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கல்லூரியில், மாலை நேர வகுப்புகள் *1971-72* முதல் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வரலாற்று ஏடுகளைப் புரட்டுகிறபோது, வள்ளல் பச்சையப்பரின் தன்னலமில்லாப் பணியும், கல்விக் கண் திறக்கும் பெருந்தொண்டும் தெற்றெனப் புரிகின்றது.

எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயர்ந்து, உன்னத நிலையை அடைந்து, கல்விப் பணிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, தரணிக்கே முன் மாதிரியாக விளங்கிய வள்ளல் பச்சையப்பரின் வழி நடப்போம் எனும் சூளுரை ஏற்போம்!

–பி.வி. கிரி

# வீரமாமுனிவர்

**டாக்டர் சூ. இன்னாசி**
**பேராசிரியர் - தலைவர்**
**கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**

### இத்தாலியத் தமிழர்

**தே**மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுதற்கு முதற் கோடிட்டவர் தமிழகத்தில் பிறந்தவரல்லர்; ஆனால் தமிழராய் வாழ்ந்தவர். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொள்ள வைத்தவர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரல்லர்; ஆனால் அதனைத் தாயாகப் போற்றியவர். இத்தாலியில் பிறந்த அவர், இளமையில் தமிழை அறியாதவர். முப்பதாம் வயதுக்குப் பின் அவர் தமிழகம் வந்தார். முப்பத்தாறு ஆண்டுகட்கு மேல் சமயப்பணி ஆற்றினார். அதற்காகத் தமிழைக் கற்றார். பின்னர் தமிழுக்காகத் தம் அறிவாற்றலைப் பயன்படுத்தினார். எனினும் தம் சமயப்பணிக்கு அவர் குறை வைத்திலர். தம் சமயப் பணியைச் செய்துகொண்டே இருபத்தைந்துக்கு மேற்பட்ட படைப்புகளால் தமிழ்த் தாய்க்குப் பெருமை சேர்த்தார். புத்தம் புதுத்துறைகள் சிலவற்றுக்குக் கால்கோளிட்டார். 'தாமே தமிழ் தமிழே தாம்' எனப் பாராட்டுமளவிற்குச் சிறப்புப் பெற்றார். அவரே 'வீரமாமுனிவர்' எனப் பெயரிய தனிப் பெருந்துறவி. 'கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி' என்னும் இயற்பெயர் கொண்டவர். இயேசு சபைத் துறவியாகத் தமிழகத்தில் பணியாற்றியவர். இன்றமிழ்க் கவிஞராய் ஏற்றம் பெற்றவர். தமிழக வரலாற்றிலேயே பல்துறையிலும் ஆற்றல் சான்ற ஒரே புலவராகப் போற்றப் பெறுபவர்.

### காப்பியக் கவிஞர்

கவிதை புனைய அறிந்தோரெல்லாம் காப்பியம்பாட முனைவதில்லை. ஆயிரக் கணக்கான கவிஞருள் ஒரு சிலரே அம்முயற்சியில் ஈடுபடுவர். ஆயினும் தாய்மொழியல்லாப் பிறிதொரு மொழியில் காப்பியம் பாட முற்பட்டோர் வீரமாமுனிவர் தவிர வேறொருவரும் இலர். உலக வரலாற்றிலேயே ஒருவரே அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டவர். அவர் யாத்தளித்த காப்பியமே 'தேம்பாவணி'. *36* படலங்களில் *3,615* பாடல்களாகப் படைத்தளித்தார். இவற்றுக்குள்ளேயே *90* சந்தங்கள் அமைத்துத் தந்தார். தமிழ்க் காப்பியங்களில் இதுவே அதிகமான சந்தங்களைக் கொண்டது. பிற காப்பியங்களை நோக்கச் சில தனித்தன்மைகளை உள்ளடக்கியது; தலைவன் தலைவியருக்கிடையே இன்பச் சுவை அமையாமல் பாடப்பட்டது; காப்பியத் தலைவனாம் வளனாரே தூது செல்லுமாறு அமைந்தது; மண்ணுலகில் மட்டுமின்றி விண்ணுலகிலும் தலைவனுக்கு முடிசூட்டு நிகழுமாறு படைக்கப்பட்டது; பல்சமயப் பொதுமைப் பாடல்களாகக் கொள்ளத்தக்க பலவற்றைக் கொண்டது.



"அறக்கடல் நீயே! அருட்கடல் நீயே! அருங்கரு ணாகரன் நீயே!

திறக்கடல் நீயே! திருக்கடல் நீயே! திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே! நிகர்கடந் துலகில் நிலையுநீ! உயிருநீ! நிலைநாள்

பெறக்கடல் நீயே! தாயுநீ! எனக்குப் பிதாவுநீ! அனைத்துநீ யன்றோ?"

என்னும் பாடல் அவற்றுள் ஒன்று.

### இலக்கியப் பாவலர்

தமிழ் இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்பது தமிழ்மரபு. அவை யாவை என முதலில் சுட்டிக் காட்டியவர் வீரமாமுனிவர். அவற்றில் சில வகைகளைத் தாமே புனைந்தார். அம்மானை பாடினார். அந்தாதி இயற்றினார். கலம்பகம் தந்தார். கலிப்பா சூட்டினார். பதிகம் பாடினார். வண்ணம் இசைத்தார். மாலை புனைந்தார். கிறித்தவத் திருமறையில் கொண்ட பற்றுறுதியின் காரணமாக உயிர் துறந்த புனிதை கித்தேரியின் வரலாற்றை *1100* கண்ணிகளிலும் *132* விருத்தங்களிலும் பாடியது 'கித்தேரியம்மாள் அம்மானை'. திருக்காவலூரில் தாம் எழுந்தருளுவித்த அடைக்கல அன்னையைத் தலைவியாகக் கொண்டு சிற்றின்பச் செய்தி விரவாமல், 'சமூக உல்லாசம்'

**1995 ஜனவரித் திங்களில் தஞ்சையில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, அன்னைத் தமிழுக்கு அணிகலன் பூட்டிய அரும் பெரும் புலவர்களை நினைவுகூரும் வகையிலும், தண்டமிழுக்கு அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணி குறித்தும் சிறப்புக் கட்டுரைகள், தமிழரசில் இதழுக்கொன்றாக இடம் பெறவிருக்கின்றன. அந்த வகையில், முதல் கட்டுரையாக, ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் குறித்த கட்டுரை 1.5.1994 இதழில் இடம் பெற்றது.**

**இரண்டாவது கட்டுரையாக, 'வீரமா முனிவர்' இடம் பெறுகிறது. தமிழ் அகராதி யின் தந்தை எனப் போற்றப்படும் இவர், 'சதுரகராதி' இயற்றி செகமிசை புகழ்பெற்று விளங்குபவர். உரைநடை வல்லாளர், இலக்கண ஆசிரியர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டு இக்கட்டுரையில் கோடிட்டுக் காட்டப்படுகிறது.**

என்னும் புதிய துறை ஒன்றைப் புகுத்திப் பாடப்பட்டது. 'திருக்காவலூர்க் கலம்பகம்'. திருமகன் சிலுவைப்பாடுகளை எண்ணிப் புலம்பும் வகையில் நூறு கலித்துறைப் பாக்களால் ஆயது 'அன்னை அழுங்கல் அந்தாதி'. அடைக்கல நாயகியைப் போற்றி 60 கண்ணிகளால் ஆக்கப்பெற்றது 'அடைக்கல மாலை'. அவ்வன்னையைப் புகழ்ந்து பாடப்பெற்றதே 'அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா'. இவ்வாறே 'கருணாம்பரப்பதிகம்' என்னும் பெயரில் பதிகமும் 'வண்ணக் கலைகள்' என்னும் பெயரில் வண்ணமும் பாடியுள்ளார் வீரமாமுனிவர்.

## இலக்கண அறிஞர்

தமிழ்மொழியின் இயல்பினை வெளிநாட்டாருக்கு ஐரோப்பிய மொழிகளில் எழுதி உணர்த்த முற்பட்டோர் சிலர். அவருள் வீரமாமுனிவர் குறிப்பிடத்தக்கவர். விரிந்த அளவில் எழுதத்துணிந்த முதல்வர் அவர். அவர் எழுதிய நான்கு இலக்கண நூல்களுள் 'தொன்னூல் விளக்கம்' தமிழில் அமைந்தது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் முந்நூற்றெழுபது நூற்பாக்களுள் அடக்கிக் காட்டியுள்ளது. அதற்கான மூலவுரையையும் அவரே எழுதியுள்ளார். மற்ற மூன்றும் இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றன. தமிழ்மொழியை செந்தமிழ், கொடுந்தமிழ், 'பேச்சுத் தமிழ்'என இருவகையாகப் பாகுபாடு செய்து இரண்டனுக்கும் தனித்தனியே 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்றவாறு நூல்கள் இயற்றினார். தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கித் 'திறவுகோல்' – Clavis என்னும் பெயரில் எழுதினார். இது சமயம் பரப்ப வந்த மேனாட்டாருக்காக எழுதப்பெற்றது. வீரமாமுனிவர் முன்னூல்களில் கூறப்படாத சிந்து, வண்ணம் போன்ற இலக்கிய வகைகட்கு இலக்கணம் கூறியிருப்பது அவர்தம் பரந்த நூலறிவையும், நுணுகிய இலக்கண உணர்வினையும் அறிந்துணரத் துணை செய்யும்.

## அகராதி முதல்வர்

தமிழ் அகராதித் துறைக்கு முதல்வர் வீரமாமுனிவர். முறையான அகரநிரலுடன் கூடிய தமிழ்முதல் அகராதி அவர் ஆக்கிய 'சதுரகராதியே'. பெயர், பொருள், தொகை, தொடை என நால்வகைப் பகுப்புகளாய் அமைந்த அவ்வகராதியில் பெயரகராதியில் மட்டும் 12, 187 சொற்களுக்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. கி.பி. 1732- இல் ஆக்கப்பட்ட இவ்வகராதி கி.பி. 1824 -இல் முழுவதுமாக முதலில் அச்சில் வெளிவந்தது. சதுரகராதி தவிர வேறு இரண்டு அகராதிகளையும் அவர் படைத்துள்ளார். தமிழகத்தில் பணியாற்றிய மேனாட்டுச் சமயத்தொண்டருக்கென அவை படைக்கப் பெற்றன. அவை பேச்சு மொழிக்கெனப் படைக்கப்பெற்ற 'தமிழ்-இலத்தீன் பேச்சுமொழி அகராதி'யும், அத்துடன் இணைந்து காணப்படும் 'போர்ச்சுகீஸ்-இலத்தீன் தமிழ் அகராதி'யும் ஆகும். தற்காலத்தில் தோன்றியுள்ள பிற அகராதிகட்கு எல்லாம் அடிப்படை சதுரகராதி. அவ்வாறே இரு மொழி, பன்மொழி அகராதிகட்கெல்லாம் அடிப்படை தமிழ்-இலத்தீன் பேச்சு மொழி அகராதி. அவ்வகராதியில் ஏறத்தாழ 9000 சொற்களும், போர்த்துகீஸ்-இலத்தீன் தமிழ் அகராதியில் ஏறத்தாழ 4000 சொற்களும் இடம் பெற்றுள்ளன. வீரமாமுனிவரின் பன்மொழியறிவு, தமிழக நாட்டுப்புறத் தொடர்பு, மருத்துவப் புலமை, தமிழ் இலக்கியப் பயிற்சி ஆகியவை இவற்றால் புலப்படும்.

## உரைதரு அறிஞர்

இலக்கண நூற்பாக்களின் செய்திகளை எல்லோராலும் எளிதில் புரிந்துகொள்ளத் துணை செய்பவர்கள் உரையாசிரியர்கள். இலக்கண ஆசிரியர்களே அவற்றுக்கான உரைகளையும் எழுதும் வழக்கம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டது. அவ்வாறு தம் இலக்கணத்திற்குத் தாமே உரையையும் எழுதினார் வீரமாமுனிவர். தொன்னூல் விளக்க உரையில் பத்தொன்பதுக்கும் மேற்பட்ட இலக்கண நூல்களை மேற்கோள் காட்டுகிறார். அவ்வுரையில் ஓர் இடத்தில் திருக்குறளை மேற்கோளாகக் காட்டுங்கால், திருவள்ளுவர் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய மதிப்பு புலனாகிறது. "வேதநூல் முதல் எவ்வகை நூலும் கல்லாதுணரவும் சொல்லா துணர்த்தவும் வல்லவராகி, மெஞ்ஞானத்திருக்கடலாகியவொரு மெய்க்கடவுள் தன் திருவடி மலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, இருளிராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும், பாலைச் சுரத்து அரிதலர்ந்த பதுமம் போலவும், மெய்ஞ்ஞானச் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின்கண்ணும்

**அடுத்த இதழில்...**

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் எழுதும், 'ஆழ்வார்கள்' குறித்த ஆய்வுக் கட்டுரை இடம்பெறும்.**

கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எறிப்பத் தெளிந்து உணர்ந்து ஓங்கும் ஒரு விளக்கென நின்று உயர்ந்த திருவள்ளுவர் உரைத்த பலவற் றொன்றை நான் தெரிந் துரைப்பத்துணிந்தேன்'' என்னும் பகுதி அதனை விளக்கும். வீரமாமுனிவரே இலக்கணத்தோடு உரையும் தரும் மரபிற்கு மூலவராய் இருத்தல் கூடும் என எண்ண இடமிருக்கிறது.

### உரைநடை வித்தகர்

தமிழ் உரைநடையில் மறுமலர்ச்சி அண்மைக் காலத்தில் ஏற்பட்டது. பழங்கால உரைநடை, புலவர் பெருமக்கட்கு மட்டுமே விளங்கும். பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் உருவாகிய உரைநடை வளர்ச்சியில் வீரமாமுனிவருக்குப் பெரும் பங்கு உண்டு. தற்கால உரைநடையின் முன்னோடியாக ஆன்றிக் அடிகளாரைச் சுட்டுவர். உரைநடையின் தந்தையெனத் தத்துவபோதகரைக் குறிப்பர். இவர் இருவர்தம் உரைநடைப்போக்கு அக்காலச் சூழலுக்கேற்ப வடசொற்களும் பேச்சு வழக்குகளும் மிகுந்து காணப்படும். அவ்வாறின்றித் தற்காலத் தமிழ் போன்ற நிலையில் 250 ஆண்டுகட்கு முன் எழுதியவர் வீரமாமுனிவர். அதுமட்டுமன்று. எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பவும், நோக்கத்திற்கேற்பவும், நூலைப் படிப்போருடைய அறிவுத் திறத்திற் கேற்பவும் வெவ்வேறு நிலையில் உரைநடையைக் கையாண்டு வெற்றி பெற்றவர் வீரமாமுனிவர். 'வேத விளக்கம்', 'திருச்சபை பேதகம்', 'பேதகம் மறுத்தல்', லூத்தர் இனத்தியல்பு', 'வேதியர் ஒழுக்கம்', 'பரமார்த்த குரு கதை' ஆகியன அவர் படைத்த உரைநடை நூல்களாகும். தொன்னூல் விளக்க உரை புலவர் பெருமக்களுக்கே உரியது. பரமார்த்த குரு கதை பேச்சு மொழியால் ஆனது. பிறவெல்லாம் தற்காலத் தமிழ் நடையை ஒட்டியது. புணர் மொழிகளைப் பிரித்துப்படித்தால் எல்லோராலும் விளங்கிக் கொள்ளத் தக்கது. வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் போப்பையரால் பாராட்டப் பெற்றது. இந்நூல்களேயன்றி 'வாமன் சரித்திரம்', 'திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம்' போன்றனவும் உரைநடை வடிவில் அமைந்தனவே.

### மொழியியல் முனைவர்

மொழியின் இயல்பினை அறிவியற் சிந்தனையோடு அணுகுவதே மொழியியல். அத்துறை இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்தது. ஆயினும் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இம்மொழியியற் கூறுகளோடு மொழியினை அணுகிய தன்மை வீரமாமுனிவரின் இலக்கண நூல்களால் தெரியவருகிறது. அவர் தம் கொடுந்தமிழ் இலக்கண நூலில், தற்கால விளக்க மொழியியலார் சுட்டுகின்ற ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகியவை மட்டுமன்றி, வரலாற்று மொழியியல், ஒப்பியல் மொழியியல் ஆகியவற்றின் கூறுகளும் அடங்கியுள்ளன. அவ்வாறே தொன்னூல் விளக்க எழுத்ததிகாரமும் மற்ற இலக்கண நெறிகட்கு மாறாக ஒலியனியல் அடிப்படையில் ஓரளவு அமைந்துள்ளது. தற்காலமொழியியலார் சுட்டுகின்ற கலைச்சொற்களைப் பயன்படுத்தவில்லையெனினும் அவற்றின் அடிப்படையிலே செய்திகள் தரப்பட்டுள்ளன. இச்சிந்தனைகளையெல்லாம் அறிஞர்கள் தம் நூல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். ஆதலின் வீரமாமுனிவர் தமிழ் மொழியைத் தற்கால மொழியியல் பார்வையில் நோக்கிய முதல்வர் எனச்சுட்ட இடமுண்டு.

### மொழிபெயர்ப்பு மூலவர்

தமிழ் இலக்கியச் சிறப்பை வெளிநாட்டிற்கு எடுத்துக்காட்டிய முதல்வர் வீரமாமுனிவரே. தம் மொழிபெயர்ப்பின் மூலம் திருக்குறளை உலகறியச் செய்தார். அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீனில் மொழி பெயர்த்தார். 'மலர்மிசை ஏகினான்' என்னும் தொடரை வைத்துக் கொண்டு திருவள்ளுவரைச் சமய வாதியாக்கிய நிலைக்கு மாறாக அத்தொடருக்கு 'மலர்களுக்கு அழகினை அளிப்பவர் என்று பொருள் கூறுகிறார். திருக்குறள் மட்டுமின்றிப் பிற தமிழ் இலக்கியங்களின் செய்யுட்களையும் ஆங்காங்கே இலத்தீனில் தாம் எழுதிய இலக்கண நூல்களில் மேற்கோள்களாகக் கையாளுகிறார். அவற்றுக்கான பொருள்களை இலத்தீன் மொழியில் கூறுவது மொழி பெயர்ப்பைப் போன்றதே. தாம் எழுதிய பரமார்த்த குரு கதையை இலத்தீனிலும் எழுதியுள்ளார். இது சிறுகதையை மொழிபெயர்த்த தன்மையாகும். இவ்வாறே பிற மொழியினின்று தமிழிலும் மொழி பெயர்க்க முனைந்துள்ளார். தாவீதனின் முதல் சங்கீதத்தைச் செய்யுள் வடிவில் செந்தமிழ் இலக்கணத்தில் தமிழில் மொழிபெயர்த்துக் கையாண்டுள்ளார். இவ்வாறு மொழி பெயர்ப்புத் துறையில் முன்னோடியாகவும் வீரமாமுனிவர் விளங்குகிறார்.

### சிறுகதை முன்னோடி

தமிழின் மறுமலர்ச்சி சிறுகதை வளர்ச்சியிலும் அடங்கியுள்ளது. சிறுகதையின் தோற்றத்திற்கும் வழிவகுத்தவராக வீரமாமுனிவரைக் கருதுவோர் உண்டு. ''வீரமாமுனிவர் ஊன்றிய 'பரமார்த்த குரு கதை' என்னும் ஆலவிதை வ.வே.சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்', என்னும் குறுஞ்செடியாக வளர்ந்து இன்று மிகப்பெரிய ஆலமரமாகப் புதுமைப்பித்தன், ரகுநாதன், அழகிரிசாமி, ஜெயகாந்தன் போன்ற முன்னணி எழுத்தாளர்கள் படைப்புகளென்னும் விழுதுகளைப் பரப்பிப் பரந்து வளர்ந்துள்ளது" என ஒரு திறனாய்வாளர் கூறுவது ஏற்கத் தக்கதே. உரைநடை வளர்ச்சி சிறுகதை வளர்ச்சிக்கு உரமாகிறது. ஆதலின் உரைநடை வடிவில் தமிழ்நாட்டில் வழங்கி வந்த

நாட்டுப்புறக் கதைகளோடு பிற நாட்டுக்கதைகள் சிலவற்றையும் உள்ளடக்கி எட்டுக் கதைகளாகப் பரமார்த்த குரு கதையை எழுதினார். பரமார்த்த குரு அவருடைய சீடர்கள் ஆகியோரின் மடமைச் செயல்களே அவற்றின் கருப்பொருள்கள். கதை மாந்தர்களை உரையாட வைத்து நடப்பியல் நிகழ்ச்சிகளைக் கண்முன் நிறுத்துவது போல் அவற்றைக் காட்டியிருக்கும்போக்கு, சிறுகதைப் போக்கினை ஒத்ததே. தற்காலச் சிறுகதை அளவுக்கு வடிவம் இல்லையெனினும் அக்காலச் சூழலில் அதனைப் படைத்த திறம் அவரைச் சிறுகதை முன்னோடி எனக் காட்டுகிறது.

★ நெருப்பை நீரால் அணைப்பது போல, மனதில் எழும் கோபத்தைப் புத்தியால் அடக்குபவனே உயர்ந்தவன்.

—இராமாயணம்

★ மக்களைக் காக்கும் தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள்; தந்தையோ ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தவர்.

—மகாபாரதம்

### எள்ளல் நூல் வல்லுநர்

மனிதரிடம் காணப்படும் குறைபாடுகளை நேரிடையாகச் சுட்டிக் காட்டுவது ஒரு முறை. மறைமுகமாகச் சுட்டிக்காட்டித்திருத்த முற்படுவது மற்றொரு முறை. அவ்வாறு சுட்டிக்காட்ட நகைச்சுவை மிகவும் பயன்தரும். அந்நோக்கத்தில் படைக்கப்படுவது எள்ளல் இலக்கியம் (Satire). அவ்வகையில் அமைந்ததாகப் பரமார்த்த குரு கதையைக்கூறுவர். அதற்கு முன் அவ்வகையில் எந்நூலும் தமிழ்மொழியில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. பாமரரும் படித்தின்புறுமாறு படைக்கப்பட்ட அக்கதைகள் எள்ளல் வகையில் அமைந்ததன் காரணமாக ஐம்பத்து நான்கு மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

### வரலாற்று நூலினர்

தமிழ் இலக்கியப் புதிய வடிவங்களில் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் புதின வகையும் ஒன்றாயிற்று. அவற்றுள் வரலாற்றுப் புதினமும் ஒருவகை. வரலாற்றுப் புதினத்தில் அரசமாந்தர், குரு ஆகியோர் இடம்பெறுவர். தலைமாந்தர் வாழ்விற்குக் குரு துணையாவார். இம்மாந்தர் செய்யுள் வடிவக் காப்பியங்களில் இடம் பெற்றிருப்பினும் உரைநடை வடிவக் கதையாக இடம் பெற்றிலர். வீரமாமுனிவர் படைத்த 'வாமன் சரித்திரம்' அவ்வகை இலக்கியத்தின் தொடக்கம் எனக்கருத இடமுண்டு. தேம்பாவணிக் காப்பியத்தின் ஒரு படலத்தை உரைநடை வடிவாக்கித் தந்திருந்தாலும் அதில் வரும் வாமனும் காப்பியத் தலைவனும் அரசமாந்தர் போன்றும், குரு போன்றும் அமைந்து உள்ளனர். தற்கால வரலாற்றுப் புதினங்களின் அடிப்படையில் அவற்றை நோக்க இயலாது. எனினும் அக்கதை மாந்தர்களும், சரித்திரம் என்ற தலைப்பும் சொல்லும் வரலாற்று உணர்வினைத் தோற்றுவிக்கின்றனர். எனவே வரலாற்றுப் புனிதத்திற்கு வழிகாட்டியாகவும் வீரமாமுனிவர் திகழ்கிறார்.

### நாட்டுப்புறவியலாளர்

தமிழகத்தில் பணியாற்றிய மேனாட்டுத் துறவியருள் தமிழகத்தின் பெரும்பான்மைப் பகுதியை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அவரது சமயப்பணி அமைந்தது. ஆதலின் தமிழகக் கிராம மக்களின் வாழ்க்கை முறை, பேச்சுவழக்குகள் ஆகியவற்றை நன்கு அறிந்து நாட்டுப்புறவியலாளராக `Folklorist' அவர் தோன்றுகிறார். அவரது தேம்பாவணிக் காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் நிறைந்துள்ளன. புராணவியற் கூறுகள், வீரவியற் கதைகள், விலங்கியற் கதைகள், தேவதைக் கதைக் கூறுகண்ட கிராமியப் பழமொழிகள், திரும்பத் திரும்ப ஒலிநயப் பாடல்கள் ஆகியவற்றைத் தேம்பாவணியில் காணலாம். கிராமிய மக்களின் வாய்மொழிகளாக வெளிப்படும் உவமைத் தொடர்கள், பழமொழிகள், பேச்சு வழக்குகள் ஆகியவை அவரது தமிழ்-இலத்தீன் பேச்சுமொழி அகராதியில் நிறைந்துள்ளன. நாட்டுப்புறச் செல்வாக்கு அவர்தம் படைப்புகளில் காணப்படும் அடிப்படையில் அவரை ஒரு நாட்டுப்புறவியலாளராகக் கொள்ளலாம்.

### பாடநூல் வழிகாட்டி

பழங்காலத் தமிழகக் கல்விமுறை குருகுலக் கல்விமுறை. அக்காலத்தில் அச்சுக்கலை வளரவில்லை. ஏட்டுச்சுவடிகளே பாடநூல்கள். படியெடுப்போர் தவறினால் அவற்றுள் ஏற்பட்ட பிழைகள் ஏராளம். இலக்கண, இலக்கியங்களன்றித் தனித்த பாடநூல்கள் அந்நாளில் இல்லை. மொழியைப் பிழையின்றிப் புரிந்து கொள்ளவும் எழுதவும் பாடநூல்கள் துணையாயின. அவ்வகைப் பாடநூல்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் வீரமாமுனிவர். தமிழ் கற்க விரும்பிய மேனாட்டாருக்குரிய பாடநூல்களாக எழுதப்பெற்றனவே பரமார்த்த குரு கதையும் வாமன் சரித்திரமும் ஆகும். கடினமான இலக்கண அமைப்புகளைச் சுவையோடு படித்துப்புரிந்து கொள்ளவே நகைச்சுவை இழையோடப் பரமார்த்தகுரு கதை படைக்கப்பட்டது. அது பேச்சுத் தமிழ் இலக்கணத்தைப் புரிந்து கொள்ளத் துணையாவது போன்று, செந்தமிழ் அமைப்பைத் தெரிந்து கொள்ளப் பயனாகுமாறு வாமன் சரித்திரம் எழுதப்பெற்றது. இவ்வகையில் பாடநூல்களைத் தமிழகக் கல்விமுறையில் அறிமுகப்படுத்திய பெருமை வீரமாமுனிவரையே சாரும்.

### ஆய்வுமுறை நெறிஞர்

தற்காலத்தில் ஆய்வுநூல்களைப் படைக்க முற்படுவோர் சில நெறிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். நூலின்கண் அடங்கியுள்ள செய்திகளைக் குறிப்புத்தலைப்பிட்டு அகரநிரல்படுத்தி நூலின் இறுதியில் கொடுப்பது அம்முறையில் ஒன்று. அதனைப் பொருள் அட்டவணை என்பர். அவ்வட்டவணைமுறை முதன் முதல் வீரமாமுனிவரால் அறிமுகப் படுத்தப்பட்டது. தாம். கி.பி. 1728 இல் எழுதிய வேதவிளக்கம் என்னும் நூலின் இறுதியில் இவ்வகைப் பட்டியலைத் தந்துள்ளார். ஆய்வு நூலில் மேற்கோளாக எடுத்தாளப்படுவது, எந்நூலின் எப்பகுதி

## அவர்கள் சொன்னார்கள்

★ இலைகளைப் பிய்த்துவிட்டால் மரத்தின் வேரும் காய்ந்துபோகும்; குழந்தைகள் இல்லாவிட்டால் அன்பின் ஊற்றும் வற்றிவிடும்.

—மூதறிஞர் ராஜாஜி

★ நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையும் தியாகமும் வீரமும் நிறைந்திருக்க வேண்டும்; அதுதான் வெற்றிகர மான வாழ்வை அமையச் செய்யும்.

—விவேகானந்தர்

★ நல்லது கெட்டதை அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டு, கெட்டதைத் தவிர்த்து மற்றவர் களுக்கு நல்லது நடக்கும்படி வாழ் வதே ஒழுக்கம் எனப்படும்.

—ஹிதோபதேசம்

★ எதிலே மீதம் வைத்தாலும் வைக்காவிட்டாலும்- நோய், நெருப்பு, கடன், பகை ஆகியவை களில் மீதம் வைக்கவே கூடாது.

—பெர்னார்டு சப்ரு

யில் இருந்து எனச் சுட்டுவது ஆய்வு நெறியில் மிகவும் வேண்டப்படுவ தாகும். இவற்றை நடைமுறைப் படுத்தத் தொடங்கியவர் வீரமா முனிவர். சான்றாக விவிலியக் குறிப்பொன்றைத் தம் நூலாகிய பேதகமறுத்தலில் காட்ட முற்படுங் கால், "அருளப்பர் சுவிசேஷத்தின் 18-ஆம் அதிகாரம், 29- ஆம் வசனத்தில்" எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். தம் நூலிலிருந்து மேற்கோள் காட்டும்பொழுது கூட இம்முறையைக் கையாளுகிறார். சான்றாக 'வேதவிளக்கம்' என்னும் நூலிலிருந்து மேற்கோள் காட்டும்பொழுது, "ஆகிலும் இந்த விஷயத்திலே நாம் சொல்லும் தன்மை வேத விளக்கத்தின் 16 ஆம் அதிகாரம் 14 ஆம் பிரிவின் மூன்றாம் நியாயத்தில் காணப்படும்" என்கிறார். இவற்றை நோக்கத் தமிழில் ஆய்வியல் நெறியைப் பின்பற்ற வழிகோலியவர் வீரமாமுனிவர் என உணரலாம்.

### தமிழோசை பரப்புநர்

தமிழ்ப் புலவர்களையும், தமிழ் இலக்கியங்களையும் பிறநாட்டாருக்கு விளக்கித் தமிழின் பெருமையைப் பரப்ப முற்பட்டவர் வீரமாமுனிவர். மேற்கோள்களாகத் தம் இலக்கண நூல்களில் முன்னோர் செய்யுள்களை எடுத்தாளுங்கால், அவற்றோடு அச்செய்யுட்களின் ஆசிரியர்களையும், அவர்களைப் பற்றிய விளக்கங் களையும் கூறுகிறார். மேனாட்டா ருக்காக, எழுதிய தமிழ்-இலத்தீன் அகராதியிலும்கூடத் தமிழ்ப் புலவர்கள், தமிழ் நூல்களைச் சுட்டிச் சுருக்க விளக்கங்கள் தந்தது அவர்தம் பெருமைகளை மேனாட்டார் அறிந்து கொள்ள வழிவகுத்தது. தனித்தமிழ் ஆர்வம் வளர்ந்தது இருபதாம் நூற்றாண்டில்தான். ஆனால் அவ்வார்வம் வீரமாமுனிவருக்கே இருந்தது என்பது வியப்பிற்குரியது. தம் இயற்பெயரைத் தமிழில் முதலில் 'தைரிய நாதர்' என மாற்றிக் கொண்டார். காலப்போக்கில் அப்பெயரில் வட மொழிச்சாயல் இருப்பதை அறிந்து அதனையும் மாற்றிப் பின்னர் 'வீரமாமுனிவர்' என அமைத்துக் கொண்டார். எனவே தமிழோசை பரப்புவதிலும் தனித் தமிழ் ஆர்வத்திலும் தமிழ்நாட்டாருக்கும் மேலோங் கித் திகழ்ந்து தாம் ஒரு தமிழராகவே செயலில் காட்டியவர் வீரமாமுனிவர்.

### பல்கலை வித்தகர்

இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கும் பார்வை தற்காலத்தில் ஒப்பியல் இலக்கியம் என்று தனி ஆய்வாக வளர்ந்துள்ளது. இச் சிந்தனையை வீரமாமுனிவருடைய படைப்புகளில் காணலாம். சான் றாகத் திருவள்ளுவர் பற்றிக் கூறும் பொழுது 'திரு' என்னும் அடை மொழியிட்டு அழைத்தல் பிளாட் டோவை, Divine Plato என அழைப் பதை ஒக்கும் எனச்சுட்டுவார். ஓவியம் வரைவதிலும் விற்பன்னராகத் திகழ்ந் துள்ளார். தாம் போற்றிய தேவ அன்னையின் திருவுருவை ஓவியமாக வரைந்து மணிலாவுக்கு அனுப்பி அதன் அடிப்படையில் திருவுருவச் சிலையை அங்கிருந்து அவர் வர வழைத்ததாகக் கூறுவர். தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்டிருந்த வரி வடிவக் குழப்பங்களை நீக்கக் கருதி எழுத்துச் சீர்திருத்தம் செய்து தற் பொழுது வழங்கும் தமிழ் எழுத்து வரி வடிவங்கட்குக் காரணராயினார். மருத்துவத் துறையில் அவருக்கிருந்த அறிவை அவருடைய தமிழ்-இலத்தீன் அகராதியின் வழி நன்குணரலாம். மருத்துவ நூல்களும் அவர் எழுதி யிருத்தல் கூடும். அவை நமக்குக் கிட்டில. தற்பொழுது அவர் பெய ரால் வழங்குவன நம்புவதற்குரியன வல்ல. கிறித்துவ சமயத்தைத் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப மாற்றியமைக்க முற்பட்டவர் அவர். தத்தவ போதகர், இந்தியமயமாக்க முற்பட்டார் என லாம். அவர் வழியில் நின்று தமிழ் மரபிற்கேற்ப அன்னை மரியைத் தமிழ்ப் பெண்ணாக்கி வெற்றி கண்டவர். சமுதாய உணர்விலும் முன்னேற்றத்திலும் அவர் கவனம் செலுத்தினார் என்பதற்குச் சான் றுகள் உண்டு. இவ்வாறு பல்வகையில் தமிழுக்குப் பெருமை சேர்த்துப் பல்கலைச் செல்வராக, நற்றமிழ் வல்லவராக, தமிழ் நாட்டுணர்வு சமுதாய உணர்வு மிக்கவராக வாழ்ந்த வீரமாமுனிவர் பிறப்பால் இத்தாலி யராயினும், வாழ்வால் தமிழர், செய லால் தமிழர், சிந்தனையால் தமிழரே எனத் துணியலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

